www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஒக்.20–26,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 175

## பிடித்தும் இழந்தும்

# படைகள் + புலிகள் களமும் பலமும்

## இதுவரை வெளிவராத போர்க்கள நிலவரம்






படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கப்பல் புதிதாக வேண்டும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'பட்ஜெட்' வரும் பின்னே,
துண்டுவிழும் தொகை பற்றிய விபரம்-
குண்டு விழுந்தது போல-
அதிர்ச்சி தந்திருக்கிறது முன்னே!

பத்தாயிரத்து 141 கோடி ரூபாய்கள்
எதிர்வரும் பட்ஜெட்டில்
பற்றாக்குறையாக இருக்கிறது.
'வரவு எட்டணா- செலவு பத்தணா!'

துண்டுவிழும் தொகைப்பற்றிய
இந்த அதிர்ச்சிக்குப் பின்னர்
மேலும் பல அதிர்ச்சிகள்
ஏற்படலாம் என்று எதிர்பார்க்கலாம்!

என்ன செய்யப்போகிறது
அரசாங்கம்?
சிகரெட்டும்- மதுபானமும்-
பெற்றோலும்-டீசலும்
கைகொடுத்து உதவுமா?

கடன் வாங்கி
கல்யாணம் செய்தாலும்
மங்களகரமான காரியமென்று
மனதைத் தேற்றிக் கொள்ளலாம்!

கடன்வாங்கி
யுத்தம் செய்து கொண்டிருப்பதை
எதில் சேர்ப்பது?
மனதைத் தேற்றவும் முடியாது!
நாடு தேறவும் முடியாது!

'பட்ஜெட்' சமர்பிக்கப்பட்டதும்
வாதப் பிரதிவாதங்கள்
பாராளுமன்றத்தை
அதிரவைக்கப் போகின்றன!

கப்பல்
மூழ்கிக் கொண்டிருக்கும்போது
மாலுமியும் பயணிகளும்
அடிபட்டுக்கொள்வது மாதிரி
அரசாங்கமும், எதிர்க்கட்சியும்
தங்கள் தொண்டைக் குழாய்களால்
சுடுபட்டுக் கொள்ளப்போகின்றன!

கப்பல்
மூழ்கிக் கொண்டிருப்பது
தெரிகிறதா? இல்லையா?

ஆளும் கட்சிக்கும்
எதிர்க்கட்சிக்கும்
அது புரிகிறதா இல்லையா?

தெரியும்- புரியும்!
நல்லது-அப்படியானால்
செய்ய வேண்டியது என்ன?

"கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது."
என்று சுட்டிக்காட்டுவது மட்டுமே
எதிர்க்கட்சியின் கடமையா?

"17 வருடகாலமாக
நீங்கள் செலுத்திய கப்பல்தான்,"
என்று எதிர்க்கட்சிக்கு
பதில் கொடுப்பது மட்டுமே
ஆளும் கட்சியின் பொறுப்பா?

இலங்கை சுதந்திரமடைந்தது முதல்
பயன்படுத்திவரும்
கப்பலில்தான்
இப்போதும் பயணம் நடக்கிறது!

இன ஒடுக்குமுறை,
ஜனநாயக மறுப்பு,
மனித உரிமை மீறல்கள்
என்ற பொத்தல்கள் விழுந்த
கப்பலாக அது மாறிவிட்டது.

பதவிக்கு வருவோர் எல்லாம்
கப்பலைப் புதுப்பிப்பதற்குப் பதிலாக-
தம் கையில் இருக்கும்வரை,
கவிழாதிருந்தால் போதும்,
என்று நினைத்து விடுகிறார்கள்.
அவ்வப்போது
சின்னச் சின்னத் திருத்தங்கள்
செய்து சமாளித்துக் கொள்கிறார்கள்!

இப்போது நிலைமை
கைமீறிப் போய்விட்டது.

கப்பலை உடனே
புதுப்பித்தாக வேண்டும்!

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு,
பொருளாதாரப் பிரச்சனைக்கு
நீண்டகால பயனுள்ள திட்டங்கள்,
மனித உயிர்களுக்கு மரியாதை-
போன்ற காரியங்களை
செய்தால்தான் கப்பலை
புதிதாக்கிக் கரைசேரமுடியும்!

அதற்குத் தேவையானவை
வாதப் பிரதிவாதங்களல்ல!
வளையாத நேர்மை :
வலுவான துணிச்சல்;
ஆளும்கட்சி, எதிர்க்கட்சி
என்ற பேதம் இல்லாது,
எதிர்காலம் ஒளிகாலமாகவேண்டும்
என்ற பொறுப்புணர்வு!

இல்லையெனில்-
துண்டுவிழும் தொகைக்கும்
குண்டுவிழும் வாழ்க்கைக்கும்
முடிவு காண்பது முயற்கொம்புதான்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆன்மீக அழைப்பு



"என்னிடத்தில் வாருங்கள்" என்பதில் ஒரு பெரிய உண்மை இருக்கிறது. அது ஒரு ஆளிடமோ ஓர் இடத்துக்கோ அழைப்பதாக முடிகிறது.

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வள்ளத்திலிருந்து புயலுக்குப் பயந்துபோய் கலக்கமடைந்திருந்த பேதுருவைப் பார்த்து அவர் கூறியது 'வா' என்பதே. பேதுரு படகை விட்டிறங்கி, இயேசுவிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தார். ஆம். துன்பத்தின் பொழுது உண்மையான விசுவாசம் கொண்டு இறைவனை நோக்கி நடந்தார். (மத்:14:28-29 காண்க.)

வேதாகமத்தில், விசுவாசிகளுக்காகக் கொடுக்கப்படும் மேலான ஓர் அழைப்பு உள்ளது. அது மத்தேயு 11 ஆம் அதிகாரம் வசனம் 28-இல் காணப்படுகின்றது.

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

என்னே ஆன்மீக ஆறுதல்! மனத்தில் சுமை இருப்பின் இறைவன் நல்ல சுமை தாங்கியாக மாறுகிறான். அவனிடத்தில் நம்மனச்சுமைகளைச் சொன்னால் ஆறுதல் அடைகிறோம்.

எனவே கண்விழித்ததும் இசையாஸ் ஆகமத்தில் காணப்படுவது போல "இதோ அடியேன்: என்னை அனுப்பும்" (இசை: 6:8) என்று முன்வரவேண்டும். 'இறைவா', உமது கட்டளை எதுவானாலும் ஏற்றுக்கொள்கிறேன்: நிறைவேற்ற தயாராயிருக்கிறேன்' என்ற எண்ணத்தோடு முன்வரவேண்டும். இறை வழி சென்று, அவன் வாக்கை நிறைவேற்றுவோம், நல்ல விசுவாசிகளாகிய நாம்.

ஏ.பி.வி.கோமஸ், மாத்தளை.

## மனம் போல் வாழாதீர்!

சமுதாய முன்னேற்றத்தை விரும்புகிறவர்களே! நீங்கள் உங்களுடைய ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உண்மையான ரசூல் என்பதாகவும் அன்னாரின் போதனைகளை சத்தியமான போதனைகள் என்பதாகவும் விளங்கியிருந்தால், அவர்கள் எப்பொருளை நோய்க்குக் காரணம் என்று கூறியிருக்கிறார்களோ அப்படிப்பட்டவை உங்களிடத்தில் சுகம் தரும் பொருட்களாக ஆக்கப் பட்டிருப்பதற்குரிய காரணம் என்ன? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

"ஒருவரின் மனோ இச்சை, நான்கொண்டு வந்த மார்க்கத்தை பின்பற்றாதவரை உங்களில் எவரும் முஸ்லிமாக ஆக முடியாது" என முஹம்மத் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். ஆனால் இன்றைய முஸ்லிம்களோ மார்க்கம் என்ற திரையை நீக்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் மற்ற சமுதாயத்தினரைப் போன்று நாமும் முன்னேற முடியும் என்பதை நினைக்கிறார்கள்.

அல்லாஹ் த ஆலா திருகுர் ஆனில் "எவர் மறுமையின் வேளாண்மையை நாடுகிறாரோ அவருடைய வேளாண்மையில் நாம் அதிகப் படுத்துவோம். எவர் இவ்வுலகத்தின் வேளாண்மையை நாடுகிறாரோ அவருக்கு அதிலிருந்து கொஞ்சத்தை வழங்கிடுவோம்: மறுமையில் அவருக்கு எவ்விதப் பங்குமில்லை"

இவ்வுலகில் தங்கள் மனம்போல் வாழ்ந்து வீறாப்பு பேசியவர்கள் எங்கே? வாழ்க்கையின் படிகளை சீர்குலைத்தவர்கள் எத்தனைபேர்? இறைவனின் கட்டளைக்கு அடிபணியுங்கள்: அவனை வணங்குங்கள்: வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் அமையும்.

எம்.எம்.முஹம்மது ஆஸிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல - 172

### பரிசுக்குரிய கவிதை



### கானக வாழ்வு

கானகத்தில் வாழ்வு,
கனி கிழங்கு உணவு,
தரிசு நிலம் படுக்கை,
தனிமையுடன் கூட்டு,
மரத்திலே தூளி,
மனதிலே பீதி,
போர் தந்த அவலம்-
பொல்லாத நாட்டில்!

சி.தங்கவடிவேல்-அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**எதிர்வு கூறல்!!**

தாலாட்டுப் பாடத்
தாயங்கு இல்லை;
தனிமரம் ஒன்றே
தோப்பாக மாட்டா;
போரோய வில்லையெனில்
புரிகிறதோ எதிர்வுகூறல்??

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

**தாலாட்டு**

மரணித்த மனித நேயம்
ஜனனிக்கு முன்னால்-நீ
ஜனனித்து விட்டதனால்
மரம் தானே தாலாட்டும்!

தாரணி- புத்தளம்.

**ஆட்டம்!**

உயிர் ஊசலாடுது
உடமை ஊஞ்சலாடுது
யுத்தம் மட்டும்
தலை விரித்தாடுது!

ந.ரதீஸ்வரன்-பிரதான வீதி,
தம்பிலுவில்-02.

**அனாதை**

தாலாட்ட தாயில்லை;
பாலூட்ட பாலில்லை;
இது -
யுத்தம் இட்ட
விதை.

சுபா வரன்-கண்டி.

**எங்கே போனாளோ?**

காய் தூங்கும் மரத்தினிலே
சேயொன்று தூங்குதம்மா!
வாய் விட்டழுதிடவே
தாயிங்கு இல்லையம்மா!
நோய் கொண்டு போனதுவோ-போர்ப்
பேய் கொண்டு போனதுவோ!

திருமதி ராஜேஸ்வரி ரவீந்திரநாத்-
அக்கரைப்பற்று-07.

**தாலாட்டு**

ஆராரோ ஆரிவரோ,
அகதியான குழந்தைக்கு
அன்னை இல்லை ஆராரோ.
தனிமரத்தில் தொட்டில் கட்டி
தாலாட்டுப் பாட
தகுதியுள்ளோர் வாரீரோ....!

திருமதி யோகாம்பாள் தம்பித்துரை-
பதுளை.

**விடியலிங்கு சொப்பனமே!**

தூளியிலே சேயுறங்க,
தென்றலிங்கு தாலாட்ட,
வியர்வையிலே தாயுறங்க,
வறுமையங்கு சீராட்ட,
போர் மடியில் வாழ்வுறங்க
விடியலிங்கு சொப்பனமே!!!

தெ.றஞ்ஜனா-சின்னப்புதுக்குளம், வவுனியா.

**அநியாயப் புது வடிவம்**

பால்விலையோ பனை உயரம்!
வறுமை நிலை பெருந்துயரம்!
செல்லடியும், வேட்டொலியும்
வீட்டினையே அதிர வைக்க,
காட்டினிலே தொட்டிலிட்டு
ஆறுதலை உனக்களித்த
ஆத்தாவை யார் தொலைத்தார்?

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி, மட்டக்களப்பு.

**மாற்றம்**

வீடுகட்டி அதை மறைத்து
வேலி கட்டி வாழ்ந்த இனம்;
வீதியிலே தூளி கட்டும்
விதி என்று மாறிடுமோ?

சி.மு.சுந்தரேசன், அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

**விதியில்லை**

"வீட்டினிலே தொட்டில் கட்ட
விதியில்லை எங்களுக்கு
காட்டு மரத் தொட்டிலிலே
கண்ணுறங்கு கண்மணியே."

எம்.சண்முகராஜா-
கிளனல்பின், பதுளை.

## கவிதைப் போட்டி இல-175



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 26.10.1996

-முகவரி-

கவிதைப் போட்டி இல.175 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

அன்பின் இனிய முரசே!

நடிகை 'சில்க் சுமிதா'வின் மரணம் பற்றிய செய்தியை சினிவிசிட்டிலும் ஸ்பெஷல் ரிப்போர்ட்டிலும் தந்ததோடு மரணத்தில் இருக்கும் மர்மத்தை கோடிட்டுக் காட்டி உனது தனித்துவத்தை நிரூபித்ததற்கு எனது பாராட்டுகள்.

அத்துடன் "பூலான்தேவி" தொடரை தனது வித்தியாச பாணியில் தந்து பூலான் தேவியை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் ரசிகனுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி, பாராட்டுக்கள்.

மு. ஹசன், பண்டாரவளை.

காதிலை பூ கந்தசாமியின் கற்பனை வளம் திகைப்பில் ஆழ்த்துகிறது. சிந்தியாவின் குட்டிக்கதைகள் மூலம் பதில் அளிக்கும் விதம் மிகவும் கவரக்கூடியதாயுள்ளது. முரசின் பணிகள் மேலும் தொடர வாழ்த்துக்கள்.

ஏ.ஏ.எம். இக்ரம், கல்ஹின்னை.

தேர்தல் பிரசாரத்தில் ரஜனிசாரை மேடைக்குமேடை திட்டித்தீர்த்தவர் ஆச்சி. தற்போது ரஜனி சாரின் புதிய படமான "அருணாச்சலம்" படத்திற்கு நடிப்பதற்கு பெருந்தன்மையோடு அழைத்திருக்கிறார். திட்டித்தீர்த்த அவர் வாயாலேயே புதிய படத்தில் ரஜனிசாரைப் பற்றி போற்றிப் புகழ்பாடும் வசனங்கள் அளவுக்கதிகமாக இடம்பெறும் என நினைக்கிறேன். "காதில பூ கந்தசாமியின் (ஆச்சி- ரஜனி)" கற்பனை அருமையிலும் மிக அருமை. சபாஷ் கா.பூ.கந்தசாமியண்ணே.

மகேஸ்வரன் பாக்கியலட்சுமி, ஆறுமுகத்தான் குடியிருப்பு.

இனிமை, இளமை, இன்பம் அனைத்தையும் உன்னுடன் கொண்ட முரசே "லேடீஸ் ஸ்பெஷல்" எம் போன்ற மகளிர்க்கு நற்பயனைத் தருகின்றது. என்றும் சிறப்பாக அமைய முரசிற்கு எனது வாழ்த்துக்கள்.

அ. சமீளா, தக்வா நகர், திருகோணமலை.

ஈராக் விடயத்தில் தலையிட்ட கிளிண்டன் அரசாங்கத்தின் போக்கை "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை கிண்டலடித்து வெளியிட்ட காட்டூண் அருமையாக இருந்தது. காட்டூண் தந்த விளக்கம் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்துவிட்டது. முரசுவாசகர்களுக்கு காட்டூணை தந்த சிந்தியாவிற்கு போனஸ் நன்றிகள். மேலும் காட்டூண்கள் எதிர்பார்க்கிறோம்.

எஸ்.என். குமார், கண்டி.

இனிய முரசே!

பூவாக இருக்கவேண்டிய பூலான் வாழ்க்கை பூகம்பமாக மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு முரசில் முழுவதும் பூலானின் கதையை வாசிக்க முடியாதா? என ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

சீலன், மட்டக்களப்பு.



'கம்போடியாவில் புலிகளின் தளம்' கம்போடியாவுக்கே சென்றுவந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. கம்போடியா பிரதமரின் பெயர் 'நாரதன் தர்மராஜா' என்ற தமிழ் பெயரின் மறுவடிவம் என்ற தகவல் இன்பமான ஆச்சரியம். மொத்தத்தில் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' பிரமாதம்.

வே. பாலசுந்தரம்,
மொன்றியல்- கனடா.

அன்பு முரசுக்கு!

யாழ்குடாநாட்டு செய்திகளும் நிலவரங்களும் வருத்தம் தருகின்றன. போக்குவரத்தும் கூட நம் மக்களுக்கு எட்டாக்கனியாகிவிட்டதே! 'என்றெமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?' என ஏங்குகின்றோம். ஏக்கமே எங்கள் வாழ்வாகிப்போனதுவே!

சி. யோகேஸ்வரன், கொழும்பு-6.

அரசியல் விமர்சனங்கள் ஆணித்தரமாக அமைந்துவருகின்றன. காத்திருந்து முரசை புரட்டினால்தான் நம் மனதில் அரித்துக் கொண்டிருக்கும் பல கேள்விகளுக்கு விடை கிடைக்கிறது. சில வாரங்களில் முரசு இங்கு வரத் தாமதமாவதுண்டு. அப்போது நம் நிலையை சொல்லிப் புரியவைக்க இயலாது. தாமதமின்றி கிடைக்க ஆவன செய்யவும்.

எம்.எம்.இப்ராகிம், சவுதி அரேபியா.

முரசின் 'கவிதைப்போட்டி' காலத்தின் கண்ணாடி. பூலான் தேவியின் வாழ்க்கை பூ ஒன்று புயலானது எப்படி என்பதை கட்டம் கட்டமாக நம் கண்முன்பாக காட்டிக் கொண்டிருக்கிறது. "ஒடப்பரெல்லாம் உதையப்பராகிவிட்டால் உதையப்பர் எல்லாம் ஓடப்பராகிடுவர்" என்று பொருள் படும் கவிதையை நினைவூட்டுகிறது பூலானின் தொடர். 'பண்டிட் குயின்' படத்தில் பூலானின் வரலாறு திரைப்பட விதிகள் மற்றும் நேர அளவு கருதி சுருக்கப்பட்டமையால் பூலான் பற்றிய முழுமையான ஒரு சித்திரத்தை நம் மனதில் பதிக்க தவறிவிட்டது. அக் குறையை 'முரசு' தரும் பூலான் தொடர் போக்கிவருகிறது.

கே. ராசரத்தினம், முகத்துவாரம்.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

* மா. ஸ்ரீதேவி, வட்டகொட.
* பி.ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* எஸ். ஞானகுமார், கொல்லாந்தை.
* ச.மு. நல்லின், முகம்மதியா நகர்.
* ஏ. ஜே.எம்.ஜஃபார், கொழும்பு-15
* மு. றம்ஷான், ஓட்டமாவடி.
* எஸ். ராதிகா, மட்டக்களப்பு.
* பீ. பௌமியா, புதிய காத்தான்குடி.
* கா. கஜரூபன், தெகிவளை.
* கலைநேசன் ஜவாத், புத்தளம்.
* த. பாபு, பெல்மதுளை.
* வாஹிட் ஏ. குத்தூஸ், பதுளை.
* எம். எம். நௌபர், கிண்ணியா-02.
* செல்வி க. மதி, டெல்சித் எஸ்டேட்.
* நா. ஜெயகணேஷ், பொகவந்தலாவ.
* எஸ். பகீரதி, மட்டக்களப்பு.
* கே. பாஸ்கரன், நானு ஓயா.
* எஸ். யுவராணி, பிட்டக்கந்தை.
* முத்துக்கிருஷ்ணா, கொழும்பு-04.
* ரா. பிரமிளா, கோட்லோஜ் எஸ்டேட்.
* பெ. ரவிசங்கர், அலவத்துகொட.
* பி. சேதுராம், துபாய்.
* வேலுபிள்ளை சசிகலா, வெரல்லகம.

என் இனிய முரசே

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்பு மிக்கவை. பூலானின் தொடர்கதை படுசூப்பர். அத்துடன் காதிலைபூ கந்தசாமி, சிந்தியாவின் கேள்வி பதில்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. என்றென்றும் உன் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

பொ. லோகநாதன்,
இறத்தோட்டை.

என் இனிய முரசிற்கு,

தா! தொடர் இரண்டாம் பாகம் எதிர்பார்த்ததைவிட சற்று வித்தியாச பாணியில் தரும் பிரபாகருக்கு எனது பாராட்டுக்கள். மேலும் பல சுவையான அம்சங்களை முரசிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

ரா. சாந்தராஜா, பாம்காடன்,
இரத்தினபுரி.



படிப்பகம்

# கொழும்பில் புலிகள் தாக்கலாம்?

# பல முனைத் தாக்குதலுக்கு திட்டம்!

## மலையகப் பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்!

**கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றியிருப்பதால் புலிகள் இயக்கத்தினர் கொழும்பு நகரில் குண்டுத்தாக்குதல்களில் ஈடுபடலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்களால் எதிர்பார்க்கப்படுகிறது. புலிகள் இயக்க கரும்புலிகள் அணியொன்று ஊடுருவியுள்ளதாகக் கிடைத்துள்ள தகவல்களும் பாதுகாப்புப் படையினரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தியுள்ளன.**

**யா**ழ் குடாநாட்டின் தலைநகரான யாழ்ப்பாணம் படையினரால் கைப்பற்றப் பட்ட பின்னர் கொழும்பில் புலிகள் இயக்கத் தினர் பாரிய தாக்குதலை நடத்தியிருந்தனர்.

தற்போது கிளிநொச்சி நகர் கைப்பற்றப் பட்டுள்ளதால் கொழும்பிலோ அல்லது வடக்கு-கிழக்குக்கு வெளியே ஏதாவது ஒரு இலக்குமீதோ புலிகள் தாக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

குறிப்பாக மலையகப் பகுதிகளில் பொலிசாரினதும், உளவுத்துறையினரதும் கடும் கண்காணிப்பு செலுத்தப்படுகிறது.

சமீபத்தில் கண்டி தலதாமாளிகைக்கு அருகே தமிழ் பெண் ஒருவர் கைதுசெய்யப் பட்டார். முல்லைத்தீவைச் சேர்ந்த 20 வயதுப் பெண் ஒருவரே கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

யாழ் குடாநாட்டில் புலிகளின் முகாம் ஒன்றிலிருந்து தலதாமாளிகையின் மாதிரி வடிவம் ஒன்றை படையினர் கண்டெடுத்தனர் என்றும் ஒரு தகவல் முன்னர் வெளியாகி யிருந்தது.

அதன் பின்னரே தலதாமாளிகைப் பகுதி கடும் கண்காணிப்புக்கு உட்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி நகரில் நிலைகொண்டுள்ள படையினரை மேலும் முன்னேறவிடாமல் தடுப்பதற்காக புலிகள் தொடர்ந்தும் மோட் டார் தாக்குதலில் ஈடுபட்டுவருகின்றனர்.

பூநகரி முகாம் மூடப்பட்டுவிட்டதால் படையினரை ஒன்று குவித்து வன்னியில் இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் மேலும் விஸ்தரிக்கலாம் என்றும் புலிகள் எதிர்பார்க்கிறார்கள்.

கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடை யிலான தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தும் விதமான இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு படையினர் திட்டமிடலாம். அவ்வாறான திட்டத்துக்கு பெரும் தொகையான துருப் புக்கள் தேவை.

துருப்புக்களை ஒன்று குவிக்க முடியாத வகையில் படையினரின் கவனத்தையும், அவசியத்தையும் வேறு பகுதிகள் நோக்கித் திருப்புவதே புலிகளுக்குள்ள வழியாகும். எனவே பல்வேறு முனைகளில் புலிகளின் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் தாக்குதல்; அல்லது வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள வேறு நிலைகள் மீது தாக்குதல்; எல்லைப் புறப் பகுதிகளில் தாக்குதல்; படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் சீர்குலைவு நடவடிக்கைகள் போன்ற பலமுனைத் தாக்குதல்களில் புலிகள் ஈடுபடக்கூடும்.

வன்னியில் நேரடி மோதலுக்கு தயாராக தமது அணிகளை புலிகள் இயக்கத் தலைமை ஒன்று குவிப்பதாகத் தகவல் இல்லை.

வன்னியில் பயிற்சி முடித்த புதிய அணிகள் வெவ்வேறு பகுதிகளுக்கு பிரித்து அனுப்பப்பட்டு வருவதாகவே தெரிகிறது.

வேறொரு பாரிய திட்டத்தோடுதான் புலிகள் இயக்கத் தலைமை வன்னியில் படையினரின் நடவடிக்கைகளைத் தடுப்பது தொடர்பாக பரபரப்புக் காட்டவில்லை என்று கூறப்படுகிறது.

கிளிநொச்சி நகரில் நிலைகொண்டுள்ள படையினரை தினமும் தொல்லைக் குள்ளாக்கும் வகையில் மோட்டார் தாக்குதல் நடத்துவதோடு புலிகள் நிறுத்திக் கொள் கின்றனர்.

படையினரும் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் களில் ஈடுபட்டுவருகின்றனர். முரசு மோட்டை, கண்டாவளைப் பகுதிகளை நோக்கி எறிகணைகள் வீசப்படுகின்றன. பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்ட தால் உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை. இடம்பெயர மறுத்து வீடொன்றில் இருந்த முதியவர் ஒருவர் கடந்தவார ஷெல் வீச்சில் பலியானார்.

பூநகரி முகாம் மூடப்பட்டதையடுத்து அப்பகுதியில் உள்ள மிதிவெடிகள், பொறி வெடிகள் போன்றவற்றைப் புலிகள் இயக் கத்தினர் அகற்றிவருகின்றனர். பூநகரி முகாம் இருந்த பகுதிக்குள் பொதுமக்கள் எவரும் செல்லக்கூடாது என்றும் புலிகள் இயக்கத் தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி முகாம் பகுதியின் விஸ்தரிப்புக் காரணமாக அங்கிருந்து வெளியேறிய 250 குடும்பங்கள் மீண்டும் அங்கு மீளக்குடி யேறலாம் என்று தெரிகிறது.

## யாழ் குடாநாட்டில் மிதிவெடி அபாயம்

### இதுவரை 50க்கு மேற்பட்டோர் பாதிப்பு!

**யா**ழ் குடாநாட்டில் மிதிவெடிகளில் சிக்கி மரணமாவோர் தொகை அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே புதைக்கப்பட்ட மிதிவெடி களில் சிக்கியே பொதுமக்கள் பலியாகி வரு கின்றனர். யாழ்குடாநாட்டில் புலிகள் இயக் கத்தினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் படையினராலும் முற்றாக அகற்றப்பட வில்லை.

வீதியோரங்களில்கூட மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. மிதிவெடிகள் அபாயம் காரணமாக பல பகுதிகளில் மக்கள் வீதிகளில் நடமாடவே அஞ்சுகின்றனர். பிள்ளைகளை வெளியே விளையாட அனுமதிக்கவும் பயப் படுகின்றனர்.

கோப்பாய் வடக்கில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் தேங்காய் வாங்கிக்கொண்டு வீட்டுக் குச் சென்றான். வழியில் செல்லும்போது தேங்காய் கை தவறிக் கீழே விழுந்தது. ஒரு மிதிவெடியின்மீதுதான் தேங்காய் விழுந்தது. அந்த இடத்திலேயே சிறுவன் பலியானான்.

நீர்வேலி, குப்பிளான் பகுதிகளிலும் மிதிவெடிகளில் சிக்கி பலர் கால்களை இழந்துள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும், சகோதரியும் குப்பிளானில் மிதிவெடியில் சிக்கிக் கால்களை இழந்தனர்.

ஏழாலையில் தமது தோட்டக்காணியைக் கொத்திக்கொண்டிருந்த ஒருவர் மிதிவெடி யில் சிக்கிக் காயமடைந்தார். மண்வெட்டி மிதிவெடியில் பட்டபோதே வெடித்தது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் வீதி ஓரமாக நடந்து சென்ற இருவர் மிதி வெடியில் சிக்கிக் கால்களை இழந்தனர். இவ்வாறு பல்வேறு மிதிவெடிச் சம்பவங்கள் காரணமாக இதுவரை 50க்கு மேற்பட்டோர் கால்களை இழந்தும், பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

வீதியோர மிதிவெடிகளை அகற்றும் முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிய வில்லை. இதனால் மேலும் மிதிவெடிச் சம்பவங்கள் அதிகரிக்கலாம்.

## யாழ்குடாநாட்டில் புலிக்கொடி

**வ**டக்கு-கிழக்கில் புலிகள் இயக்கத் தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தமிழீழப் பெண்கள் தினம் அனுஷ்டிக்கப் பட்டது. புலிகள் அமைப்பில் களப்பலியான முதலாவது பெண்புலி மாலதியின் நினைவு நாளை முன்னிட்டே பெண்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தியப் படையுடன் நடைபெற்ற மோதலில் யாழ்ப்பாணம் கோப்பாயில் பலியானவர் மாலதி.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொள்ளாத பகுதிகளிலும் நினைவுதினக் கூட்டங்கள் நடைபெற்றன. புலிகளின் மஞ்சள், சிவப்புக் கொடிகளும் பறக்கவிடப் பட்டிருந்தன. ஒலிபெருக்கிகளில் புலிகள் இயக்கப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டன. மாலதியின் படத்தை வைத்து பல இடங்களில் அஞ்சலி நிகழ்ச்சிகளையும் புலிகள் இயக்கத்தினர் நடத்தியிருந்தனர். புலிகள் இயக்கப் பெண் உறுப்பினர்கள் இவற்றை முன்னின்று நடத்தினார்கள்.

## கோண்டாவிலில் இளம்பெண் மாயம்

**யா**ழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இரண்டு இளம் பெண்கள் காணாமல் போனார்கள். அவர்களில் ஒருவரான ராஜினி என்பவரது சடலம் நிர்வாணமாக மலசலகூட குழி ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு அவர் கொல்லப்பட்டதாக தெரிகிறது. இது தொடர் பாக ஆறு இராணுவத்தினர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மரணமான ராஜினி விரைவில் கனடா சென்று திருமணம் செய்யவிருந்தவர். தனது வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக உறவினர் களுக்கு தெரியப்படுத்தி பிரியாவிடை பெறச் சென்றபோது கோண்டாவில் சோதனை அரணில் வைத்து அவர் கைதுசெய்யப் பட்டார்.

இதேவேளை கடந்தமாதம் 30ம்திகதி மற்றொரு இளம்பெண் கோண்டாவிலில் வைத்துக் காணாமல்போயுள்ளார். உரும் பிராய் வடக்கைச் சேர்ந்த அப்பெண்ணின் பெற்றோர் இராணுவமுகாமில் விசாரித்த போது, அவ்வாறு எவரையும் கைது செய்ய வில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம்.

## புலிகளின் வங்கியில் உயர்வட்டி!

புலிகள் இயக்கத்தின் வங்கியான 'தமிழீழ வைப்பகம்' தனது வாடிக்கையாளர்களுக்கு புதிய அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அக்டோபர் மாத ஆரம்பத்திலிருந்து தமது வங்கியில் கணக்கில் வைக்கப்படும் பணத்திற்கு வட்டி வீதம் அதிகரித்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சேமிப்புக் கணக்குக்கு 10% வட்டியும், சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குக்கு 12% வட்டியும், ஆறுமாத நிரந்தர வைப்புக்கு 13% வட்டியும், ஒரு வருட, இரண்டு வருட நிரந்தர வைப்பிற்கு முறையே 14%, 15% வீத வட்டியும் வழங்கப்படும் என் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு மன்னார் மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தினரால் விவசாயம் மற்றும் வீடமைத்தலுக்கான நிலம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயத்திற்காக 18 ஏக்கர் நிலமும், வீடுகட்ட 10 ஏக்கர் நிலமும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

## அமெரிக்க உதவி நிறுவனம் தயக்கம்!

### இலங்கைச் சூழல் தொடர்பாக அதிருப்தி!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடு களின் கூட்டம் திட்டமிட்டபடி பாரிஸ் நகரில் அடுத்த (நவம்பர்) மாதம் நடைபெற மாட்டாது என்று தெரியவருகிறது. இதனால் அரசாங்க உயர்மட்டத்தில் பெரும் ஏமாற்றம் தலை தூக்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது. இக்கூட்டம் அடுத்த வருடம் ஏப்ரலில் நடை பெறக்கூடும் என்று தெரிகிறது.

அமெரிக்க உதவிகள் 'யூஎஸ்எயிட்' (USAID) மூலம் வழக்கமாகக் கிடைப்பதுண்டு. பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத்திட்டம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இதற்கு முன்னோடியாக, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் உதவிகள் பற்றி ஆலோசிப்பதற் கான கூட்டம் அண்மையில் வாஷிங்டன் நகரில் இடம்பெற்றது. இலங்கை வெளியுற வுத் துறை செயலாளர் ரொட்னி வண்டர்காட், மேலதிகச் செயலாளர் நிஹால் ரொட்றிகோ, மற்றும் இயக்குநர் என். சிக்கந்தர் ஆகியோர் இலங்கைப் பிரதிநிதிகளாகப் பங்குபற்றினர்.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை அமெரிக்காவின் நீண்டகால உதவிகளுக்கு ஏற்புடையதாகவில்லை என்ற கருத்து யூஎஸ்எயிட் தரப்பில் நிலவியதாகத் தெரி கிறது. இவ்வுதவி நிறுவனத்தின் உதவி நிர்வாகி திருமதி காப்பெண்டர் கருத்துக் கூறுகையில் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப் படாமையினால் மேற்கொண்டு உதவி வழங்கு மாறு யூஎஸ்எயிட் நிர்வாகத்துக்கு நம்பிக் கையை ஊட்டுவது கடினமாக இருக்கும் என்றார்.

கடந்த ஜூலையில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க, இலங்கையின் வட-கிழக்கில் புனர்வாழ்வுக்காக விடுத்த வேண்டுகோளை 'யூஎஸ்எயிட்' நிறுவனம் உன்னிப்பாகக் கவனத்தில் எடுத்துக்கொண்ட போதிலும், இப்பகுதியில் சேவைகளை மேற் கொள்ளக்கூடிய வகையில் அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழ்நிலைகள் சாதகமாக இல்லை. வடகிழக்குக்குச் சென்று, உதவிதேவைப்படும் துறைகளைக் கண்டறியவே முடியாத நிலை நிலவுகிறது. அவ்வாறிருக்கும் போது வழங் கப்படும் உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன என்பதனைக் கண்டறியவும் முடியாதிருக்கும் என்று அந்நிறுவனத்தினர் சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது.

## கைகள் கட்டப்பட்ட பிணங்கள்!

### மோதலில் சிக்கி மூவர் பலி!

**யா**ழ்-குடாநாட்டில் தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் இரு இளைஞர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

கைகள் வயர்களினால் கட்டப்பட்ட நிலை யில் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் காணப்பட்டன.

இந்த இரு உடல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இராசலிங்கம் வீதியைச் சேர்ந்த அந்தோனி ரெஜினோல்ட் (வயது 26) என்பவரே கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். இவர் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சிற்றூழியராவார்.

இன்னொருவர் நவாலியைச் சேர்ந்த இராமநாதன் பிரேம்குமார் (வயது 22). இவர் கப்பலில் வரும் பொருட்களை லொறி யில் ஏற்றும் தொழிலாளியாவார்.

இவர்களது உடல்கள் கண்டெடுக்கப்படு வதற்கு முதல் தினம் தட்டாதெருச் சந்தியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அம் மோதலில் படையினர் தரப்பில் ஐந்துபேரும், புலிகள் தரப்பில் ஒருவரும் பலியானார்கள்.

தட்டாதெரு சந்தி மோதல் நடைபெற்ற போதும் மூன்று பொதுமக்கள் பலியானார்கள்.

யாழ்ப்பாணத்துக்குள் செல்வதற்காக படையினரின் அனுமதியைப் பெற கியூவரிசை யில் நின்ற இளைஞர் ஒருவரும் பலியானார். யாழ்மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி செயலக பிரதம எழுதுவினைஞரான ஏகாம்பரம் பாலையா (வயது 55) என்பவரும் தனது வீட் டில் நின்றபோது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து மரணமானார். பலியான மூவரில் மற்றொரு வரது உடல் அடையாளம் காணப்படவில்லை.

## ஆயுதங்களைப் பறிக்குமாறு சுவரொட்டிகள்!

### பின்னணியில் ஆளும்கட்சிப் பிரமுகர்?

தமிழ்க் கட்சிகளிடம் இருக்கும் ஆயுதங் களைக் களையுமாறு கோரும் சுவரொட்டிகள் கொழும்பில் காணப்படுகின்றன. சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சுவ ரொட்டிகள் காணப்படுகின்றன.

"ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ ஆகிய இயக்கங்களிடம் உள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும்" என்று சுவரொட்டியில் உள்ள வாசகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கிழக்கிலங்கை சிங்கள பாதுகாப்பு முன்னணி' என்ற பெயரில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

திருமலையில் உள்ள ஆளும்கட்சிப் பிரமுகர் ஒருவரே இச்சுவரொட்டிகளுக்கு பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. திருமலையில் சமீபத்தில் நடைபெற்ற ஆர்ப் பாட்டத்திலும் குறிப்பிட்ட பிரமுகரே பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அடுத்த தேர்தலில் திருமலையில் உள்ள சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்கள் மத்தியில் தன்னை ஒரு ஹீரோவாகக் காட்டுவதே அந்தப் பிரமுகரின் நோக்கமாகும்.

கொழும்பில் பலத்த பாதுகாப்புகள் மத்தியில், அங்கீகரிக்கப்படாத அமைப்பு ஒன்றின் பெயரால் தமிழ் கட்சிகளுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது எப்படி? ஆளும் கட்சி பிரமுகர் என்ற அங்கீகாரத்தைக் காட்டித்தான் சுவரொட்டிகளை ஒட்ட முடிந்ததோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

## தகவல் கொடுத்தால் தண்டனை!

### மரத்தில் கட்டிச் சூடு!

யாழ் குடாநாட்டில் உடுவில், மற்றும் கொக்குவில் பகுதிகளில் இரு சடலங்கள் துப் பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டன.

வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்ற போதும் இரு சடலங்களுமே மரத்தில் கட்டப்பட்டு சுடப்பட்ட நிலையில் இருந்தன. 'காட்டிக் கொடுப்புக்கு தண்டனை' என்ற வாசகங்கள் காணப்பட்ட அட்டைகளும் சடலங்கள் அருகே கிடந்தன.

புலிகள் இயக்கத்தினர்தான் தம்மைப் பற்றிய தகவல் கொடுப்போருக்கு இவ்வாறு தண்டனை வழங்கினார்களா என்பதை உடனடியாக அறிய முடியவில்லை.

## "கலவரங்களை தூண்டுவோரிடம் விழிப்பாக இருக்கவும்"

### முஸ்லிம் மக்களுக்குப் புலிகளின் வேண்டுகோள்!

(ஏறாவூர் நிருபர்)

**பு**லிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற் பிரிவினர் சமீபத்தில் மருதமுனையிலும், ஏறாவூரிலும் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தின் பின்னர் "அன்பார்ந்த முஸ்லிம் சகோதரர் களுக்கு" என்ற தலைப்பிட்டுத் துண்டுப் பிரசுரம் ஒன்றைக் கடந்த வாரம் வெளி யிட்டுள்ளனர். அத்துண்டுப் பிரசுரம் முஸ்லிம் பகுதிப் பிரதேச் செயலாளர்களுக்கும், காரி யாலயங்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

"அன்பான முஸ்லிம் சகோதரர்களுக்கு; ஏற்கனவே உங்களுக்காக வெளியிடப்பட்ட பல் துண்டுப்பிரசுரங்களில் எமக்கு எதிராக ஆயுதம் ஏந்தியோர் பற்றிய எமது நிலைப் பாட்டை மிகத் தெளிவாகக் கூறியிருந்தோம். சிறிலங்கா அரசின் இராணுவ அமைப்புகள் எதனுடனாவது இணைந்து பயிற்சி பெற்று எமது விடுதலைப்போருக்கு எதிராக ஆயு தம் ஏந்திய எவரும் தமிழீழ தாயக விடுதலைக் கோட்பாட்டுக்கு எதிரானவர்கள் என்பதையும் ஐயத்துக்கு இடமின்றி நாம் உறுதிப்படுத்தி யிருந்தோம்.

இவ்வாறான நிகழ்வுகளில் சம்பந்தப் பட்டவர்கள் எமது சுதந்திரப் போராட்டத் திற்கு எதிராக இழைத்துள்ள குற்றங்கள் மட்டும் கருத்திற் கொள்ளப்படுகின்றன வேயன்றி அவர்கள் சார்ந்த சமூகங்களோ, அவற்றின் பின்னணிகளோ கருதப்படுவ தில்லை. தனிப்பட்ட குற்றவாளிகளான இவர் களுக்கெதிராக நாம் எடுக்கும் நடவடிக்கை களை இனச்சாயம் பூசிப் பார்ப்பதும், பிரச் சாரம் செய்வதும் கண்ணியமான செயல் களல்ல. சின்னத்தனமானவர்கள் பெரியோர் களாவதற்காக சில சம்பவங்களைக் கலகங்க ளாக மாற்ற, அதன் விளைவாய் எழக்கூடிய இனக்கலவரங்களின் கொடுமை எத்தகையது என்பதைச் சிறுபான்மையினராகிய நாம் அனைவரும் அறிவோம். ஆகவே சுய நலமி களின் பொறுப்பற்ற கருத்துக்களில் மன மிழந்துவிடாது எதிர்விளைவுகளை மன திற் கொண்டு நிதானத்தைக் கைக்கொள்ளும் படி அனைத்து முஸ்லிம்களையும் தாழ்மை யுடன் கேட்டுக் கொள்கின்றோம்" என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை ஏறாவூர்ப் பிரதேச சபை, மருதமுனைப் படுகொலைகளைக் கண்டிப் பதற்காக கூட்டிய விசேட கூட்டத்தில் மட்டக்களப்பு பகுதியில் இனக் கலவரம் ஏற்படாது பொறுமை காத்த தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. ஏறாவூரில் முஸ்லிம் நபர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தபோதும் நிதான மாக இருந்து அமைதி காத்த ஏறாவூர் முஸ்லிம்களுக்கு அதில் விசேட நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் ஆர்ப்பாட்டம்! கொடும்பாவி எரிப்பு!

### பாடசாலை மண்டபம் பெயர் சூட்டலின் எதிரொலி!

(நமது நிருபர்)

மட்டக்களப்பில் பிரபல பாடசாலை யான சென் மைக்கேல் பாடசாலை மாணவர்கள் 09.10.96 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பெயர் கல்லூரியின் மாடிக் கட்டிடத்திற்கு சூட்டப்பட்டதைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை மாணவர் களால் அலவாங்கு, கோடரிகள் மூலம் இடிக்கப்பட்டு, சென் மைக்கேல் கல்லூரி மண்டபம் என்று புதிதாக எழுதப்பட்டது. இம் மண்டபத்தின் அடிக்கல் நாட்டு வைபவத்தின் போது நிறுவப்பட்ட நினைவுக்கல்லும் மாணவர் களால் நொறுக்கப்பட்டது.

'அரச பணத்தில் பிரபல்யம் தேட வேண்டாம்' என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளோடு மாணவர்கள் ஆர்ப்பாட்டத் தில் குதித்தனர். ஜோசப் பரராஜசிங்கத்தின் கொடும்பாவியும் கொளுத்தப்பட்டது. மாணவர் களின் போராட்டத்திற்கு ஆசிரியர்கள் சிலரும் மறைமுகமாக உதவினார்கள்.

பாடசாலை அதிபர் மட்டுமே பெயரை மாற்றும் முடிவுக்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தீவிர மடைந்த நிலையில், ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியால் ஒரு 'ஃபக்ஸ்' செய்தி பாடசாலை அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

"பெயர் வைப்பது நான் எடுத்த முடி வல்ல. பாடசாலை அபிவிருத்திச் சபை எடுத்த முடிவு. மாணவர்கள் எதனை விரும்புகிறார் களோ, அதனையே நானும் விரும்புகிறேன்" என்று தனது செய்தியில் தெரிவித்திருந்தார் ஜோசப் பரராஜசிங்கம்.

அதன்பின்னர் பெயர்மாற்றும் முடிவுக்கு அதிபரும் சம்மதித்தார். ஆர்ப்பாட்டம் கைவிடப் பட்டது.

பாடசாலை அதிபர் ஜோசப் பரராஜசிங் கத்தின் உறவினராவர். அதிபரது மகனைத்தான் ஜோசப் பரராஜசிங்கத்தின் மகள் திருமணம் செய்துள்ளார். அதே சமயம் புதிய கட்டிடத்தை அமைக்கும் பணியைக் குத்தகைக்கு எடுத்திருந்த வரும் ஜோசப் பரராஜசிங்கத்தின் பாரியாரது தம்பி என்பதும் குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# மட்டக்களப்பு டிப்போவில் "மயக்கும் தமிழ்"?

(ஏறாவூர் நிருபர்)

தமிழ் மொழி பெரும்பாலும் வழக்கத்திலில்லாத பகுதிகளில் தமிழ் மொழி சீராக அமுல்படுத்தப்படுவதில் குறைகள் காணப்பட்டு வருவது ஒரு புறமிருக்க; முற்று முழுதாக தமிழ் மொழிக்குரிய பிரதேசத்தில் தமிழுக்கு- தமிழ் பேசுவோரால் விடப்படும் தவறுகளைக் காணும்போது பெரும் சங்கடம் ஏற்படுகிறது.

மட்டக்களப்பு இ.போ.சபையினால் வழங்கப்படும் முன்கூட்டிய ஆசனப் பதிவுப் பற்றுச்சீட்டில் காணப்படும் 'தமிழ்' வசனங்களைப் (?!) பாருங்கள்:

பற்றுச்சிட்டு. (ஆகனங்களை முன்சுட்டியே ஒ.செ.மாததிரம்) பின்வரும் நிபந்தனைகளுக்கமைய இவ்வொதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

1. ஒதுக்கிடு செய்யகட்ட ஒவவெதரு ஆசனத்துக்கும் நிருவாகத் செலவனக -50 சதம் செலுத்தப்படவேண்டும்.

2. ஆசனந்களை முனகூட்டியே ஒதுக்கிடு செய்வற்காக கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. எனினும் பயணிம் பொருவர் ஆசனம் ஒடுக்கிடு செய்யபட்ட நாளனறு பயணஞ் செய்ப முடாயாவிடான். இப்பற்று சசீட்டு வழுக்கிய திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எந்த நாளிலாவது பயணஞ் செயலதற்கு ஆசனம் ஒதுக்கிடு செய்ய அனுமதிக்கப்படுவார். ஆனல் அட்டலணை யிடபட்ட பயணம் புரப்படும் தோத்திற்கு ஆக்க குறைந்தது 24 மணித்தியாலங்களுக்கு முனைதாக அவர் ஒதுக்கிடு றெய்த சாலைக்கு அல்லது சிட்டு பெற்ற இலுவலகத்திற்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். இறிவிக்கும் போது இப்பற்றுச் சிட்டைக கூட்டி இரத்துச் செய்த்தறகன புறக்குறிப்பை இப்பற்றுச சீட்டில் பெற்றுகனொளை வேண்டும்.

3. ஒதக்கிடு செய்யபபட்ட ஆசனங்களில் அட்டவணையிடப்பட்ட வசி புறப்படும் நோத்திற்கு ஆகக் குறைந்தது 10 நிடங்கள் முன்னதாக இருக்க வேண்டும்.

4. பற்றுச் சிட்டை நடாத்துபவரிடம் கொடுத்து சரியான கட்டணத்தேசை செலுத்தி பயணத்துற்கான சிட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

என்ன மயக்கம் வருகிறதா? யாராவது சீராக வாசித்தால் உங்களுக்குப் பரிசு தரும் எண்ணம் "மட்டு" டிப்போவிற்கு உண்டோ? கவனம்! இதை வாசித்து உங்களுக்குத் தெரிந்ததையும் மறந்து குழம்பி விடாதீர்கள்!

# புறக்கணிக்கப்பட்ட பாதை புனரமைப்பு!

(புத்தளம் நிருபர்)

புத்தளம் தேர்தல் தொகுதியிலுள்ள மிகவும் பிரபல்யம் வாய்ந்த வீதிகளுள் ஒன்றான பாலாவி-கற்பிட்டி வீதி நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட்டு "காபட்" ரக வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இத்தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அல்ஹாஜ். எம்.எச்.எம்.நவவியின் வேண்டுகோளையடுத்து சுகாதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் அல்ஹாஜ். ஏ.எச்.எம்.பௌஸி இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த வீதியாகக் காணப்பட்ட இப்பாதை கடந்த பல ஆண்டுகளாக புறக்கணிப்பு செய்யப்பட்ட நிலையில் இருந்து வந்தது.

பாலாவி முதல் கற்பிட்டி வரையுமான இப்பாதை ஏறக்குறைய 40 கி.மீட்டர் தூரம் கொண்டதாகும். பல முக்கியமான மீன்பிடித் துறைமுகங்கள், உப-உணவுப் பயிர் செய்கைக் கிராமங்கள், இறால் பண்ணைகள் என்பன இங்கே காணப்படுகின்றன. தினமும் நூற்றுக் கணக்கான லொறிகள் மீன், கருவாடு, உப-உணவுப் பொருட்கள், இறால் போன்ற உணவுப் பொருட்களை இப் பகுதியிலிருந்து பிற இடங்களுக்கு எடுத்துச் செல்கின்றன.

இப்பாதை புனரமைப்பு செய்யப்படல் வேண்டும் என இப்பகுதி மக்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் நவவியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து அவரின் தீவிர முயற்சி காரணமாக இப்பாதையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பல மில்லியன் ரூபாய் செலவில் அமையவுள்ள இப்புனரமைப்புப் பணிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ முன் வந்துள்ளது.

# தெளிவாகக் கேட்காத வர்த்தக சேவை!

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழும் கரையோரப்பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தகசேவை ஒலிபரப்பை- அது ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து தெளிவாக கேட்க முடியவில்லை. சில வேளைகளில் இரைச்சலையே கேட்க முடிகின்றது.

வர்த்தக சேவை ஆரம்பிப்பதற்கு முன் இருந்த தமிழ் சேவை ஒலிபரப்பை தெளிவாகக் கேட்க முடிந்தது. இப்போது தேசிய சேவை நிகழ்ச்சிகளையே மிகத் தெளிவாகக் கேட்க முடிகின்றது. ஆனால் வர்த்தக சேவை நிகழ்ச்சிகளை தெளிவாக கேட்க முடியவில்லை. எனவே தேசிய சேவை தெளிவாக கேட்பதைப் போன்று வர்த்தக சேவையையும் தெளிவாகக்கேட்கக் கூடியவாறு சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் இப்பகுதி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ. முஹம்மது லாபீர், சாய்ந்தமருது-17.

# அனாதைபோல் காட்சி தரும் மன்னார்!
## பார்ப்போர் கேட்போர் யாருமில்லை!!

(மன்னார் நிருபர்)

படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மன்னார்ப்பகுதி தற்போது பார்ப்போர் கேட்போர் யாருமற்ற நிலையில் அனாதை போல் காட்சி தருகிறது.

இப்பகுதிகளிலுள்ள மக்கள் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்பட்டவர்களாக, தற்காலிகமாக சுதந்திரத்தை தொலைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இங்குள்ள மக்களின் இன்ப, துன்பங்களிலும், சுக துக்கங்களிலும் பங்கு கொள்ள எந்த எம்.பீக்களோ அமைச்சர்களோ இல்லாத நிலையில் தாங்களே தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர்.

தினமும் இவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் சிந்தும் கண்ணீர்த் துளிகள் இவற்றை வெளியுலகில் உள்ள யார்தான் அறிவார்கள்?

இங்கு அன்றாடம் நடக்கும் நிகழ்வுகள், இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், தேவைகள், குறை நிறைகள் இவற்றை யாரிடம் முறையிடுவது.?

இப்பகுதி மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், முறைகேடுகள், சோதனைகள், வேதனைகள் மற்றும் இன்னோரன்ன விடயங்களை எங்கு சொல்வது?

இப்பகுதியில் சுமார் 8 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களும் இலங்கையரில் ஓர் அங்கம்தானே!

இப்பகுதியில் 23 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் 7 ஆயிரம் மாணவர்கள் வரை படிக்கின்றனர்.

வெறும் நீர் மார்க்கமான ஒரே பாதையுடன் வெளியுலகுடன் தொடர்பு கொண்டுள்ள இப்பகுதி மக்கள் அவசரத்திற்கு எங்குமே செல்ல முடியாத நிலை.

இப்பகுதி மக்களின் பிரதிநிதியாக ஓர் அமைச்சரை விடவும் மேலாக மாவட்ட அரசாங்க அதிபர் திரு.எஸ்.மரியதாஸ் குரூஸ் கருதப்படுகிறார். இப்பகுதி அபிவிருத்திக்காக பல்வேறு வகைகளிலும் பணி புரிந்து வரும் இவர், இப்பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்படுகிறார். இங்குள்ள மக்கள் தமது குறை நிறைகளை இவரிடமே முறையிடுகின்றனர்.

இதேவேளை நீண்டகாலமாக போக்குவரத்து, சுகாதாரம், வைத்தியத்துறை, கல்வி, பொருளாதாரம் உட்பட பல துறைகளில் மிகவும் பின் தங்கியுள்ள இப்பகுதி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவது மிகவும் துரதிஷ்டவசமான நிகழ்வாகும்.

# குழிகளோடு திருத்தமா?

(காரைதீவு நிருபர்)

புலிகள் பஸ்ஸுக்கு தீவைத்த சம்பவத்தையடுத்து திருக்கோவில்-பொத்துவில் பாதையில் பஸ்கள் ஓடுவதேயில்லை. இதனால் மக்கள் படும் துன்பம் கொஞ்சநஞ்சமன்று.

இடையிலுள்ள கோமாரிக் கிராமத்தின் வைத்தியசாலைக்கு டாக்டர் வந்து 2 மாதங்களாகின்றன. ஏலவே ஒரு டாக்டர் கிழமைக்கு ஒருதடவை 2 மணித்தியால சேவை ஆற்றிவிட்டு செல்வார். அவரைக்கூட கடந்த 2 மாத காலமாக காணவில்லை. என்ன செய்வார்கள் மக்கள்?

இதேவேளை சங்கமன் கண்டி-பொத்துவில் பிரதானபாதை தார் ஊற்றி செப்பனிடப்பட்டு வருகிறது. ஆனால் பாதையிலுள்ள குழிகள் இருக்க எங்கோவெல்லாம் தார் ஊற்றப்படுவதாக அங்குள்ள பொதுமக்கள் முறையிடுகிறார்கள். அதிகாரிகள் கவனிப்பார்களா?

# குவைத்தில் தொடரும் மரணங்கள்!

கடந்த சில மாதங்களில் மட்டும் குவைத்தில் பதினொரு பணிப்பெண்கள் (இலங்கை) மரணமாகியுள்ளனர். இத்தகைய மரணங்களில் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆயினும் இது வரை எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பது குவைத்தில் வேலை செய்யும் அனைவரையும் விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

சென்ற 11.08.96 அன்று சபாசலிம் என்ற இடத்தில் ஒரு முஸ்லிம் பணிப்பெண் மரணமாகியுள்ளார்.

மேற்படி பணிப்பெண் வீட்டுக்காரர்களினால் நீண்ட நாட்களாக கொடுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளார். தாங்கிக் கொள்ள முடியாத அப்பணிப் பெண் 6.8.96 அன்று கைப்பான் என்னும் இடத்தில் உள்ள இலங்கை தூதரகம் சென்று அடைக்கலம் வேண்டினார். தூதரகத்தில் உள்ளவர்கள், இப்பெண் எவ்வளவோ மன்றாடியும் கேட்காமல் இதே வீட்டுக்காரர்களிடம் 10.08.1996 அன்று ஒப்படைத்து விட்டனர். அப்பெண்ணே பின்னர் மரணமாகியுள்ளார். வைத்தியர்களும் தற்கொலை என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

முழுத்தவறும் இலங்கை தூதரகத்தில் உள்ள அதிகாரிகள் மீதுதான் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இதனை ஆட்சேபித்து 13.09.96 அன்று இலங்கை தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த குவைத்தில் பணிபுரியும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்-பெண்கள் கலந்து கொள்ள குவைத்தில் உள்ள பொதுநல விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனையும் நடத்தவிடாமல் பொலிசாரைக் கொண்டு தடுத்து விட்டனர் எமது தூதரக அதிகாரிகள். வெளிநாடுகளில் இப்படி நடக்கும் பிரச்சனைகளை நாங்கள் யாரிடம் சென்று முறை இடுவது நீதி தேடுவது?

எஸ். எச். சுபியான்-ஜாபிர் அல் அலி, குவைத்.

# இடம்பெயர்ந்தோரின் கோரிக்கை

புத்தளம் நிருபர்

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் புத்தளம் தொகுதியிலுள்ள நுரைச்சோலை என்னுமிடத்திலுள்ள 'கொய்யாவாடி' பகுதியில் குடியமர்ந்துள்ள மக்களினால் ஒரு கனிஷ்ட பாடசாலையொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

"அல்-முனவ்வர்" முஸ்லிம் வித்தியாலயம் என பெயர் சூட்டப்பட்டுள்ள இப் பாடசாலையில் தற்சமயம் 250 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். சேவை அடிப்படையில் இங்கு 7 ஆசிரியர்கள் சேவை புரிகின்றார்கள். பாடசாலையின் அதிபராக ஜனாப். எம்.கே. ரயிசுத்தீன் சேவையாற்றுகின்றார்.

இப்பாடசாலையை கல்வி அமைச்சு அங்கீகரித்து அரச பாடசாலையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.


காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

UNION

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்



நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம் "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-
மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கேசாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்டட்.
இல,162, கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் ரோட், கொழும்பு-13.

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 00941344831 EXT. FRS
FAX 00941342464



"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

கர்மகாலபலனைப் பொறுத்து காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம், வேறு காரியங்களிலும் தடைகளும் பிரச்சினைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள், தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவன் அருளி முனிவர்கள் கையாண்ட, கைகண்ட மருந்து, மந்திரவசிய யந்திர தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாகவாழ ஆண்-பெண் ஜனராஜவசியங்கள், பாதுகாப்புரட்சைகள் வேறு நன்மையான காரியங்களுக்கு வேண்டிய மாந்திரீகம், வசியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் ஹோமியோபதி, அக்குப்பங்சர், சித்த, ஆயுர்வேத மருத்துவ, மனோதத்துவ விஷேட மாந்திரீக மனநலமருத்துவரான, மஹாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] உங்களுடையதும் வேறு சம்பந்தப்பட்டவர்களினதும் பெயர்களுடன் தாய் அல்லது தந்தையின் பெயர்களுடன் கோரிக்கைகளையும் எழுதி 12 ரூபா 50 சதமுத்திரைகள் இரண்டு பதிவுத்தபாலில் வைத்தனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளுடன் கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதிவிஷேட ஆகர்ஷண சக்திவாய்ந்த இறைபரிகாரப் பொருட்களை விஷேட பதிவுத்தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். விரும்பிய குருதட்சனை (மணியோடர் அல்லது வேறுமுறைகளில்) YOGI-DR. SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு அனுப்புபவர்களின் விடயங்கள் வழக்கமாக உடன் கவனிக்கப்படுகின்றன. நாடவேண்டிய விலாசம்:-



YOGI.DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஒக்டோபர் 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 நவம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், நவம்பர் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No.33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி
Brightன் தபால் மூலம் கல்வி

புதிய வெற்றிக்கனி 1~10

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.
புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770

Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி


| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு
தபாற் செலவு இலவசம்

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770



சகலவிதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்



சங்கீத புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு.



SAI SANGEETHA
L.G. 123, PEOPLES PARK, COLOMBO 11.
TEL : 445102 FAX : 440925




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெறுவது என்றரீதியில்தான் வடக்கு-கிழக்கு போர்முனை நிலவரம் காணப்படுகிறது.

யாழ்-குடாநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் படையினர் போரிட்டபோது கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றன.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் நடவடிக்கைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் கிழக்கிலும் தாம் கட்டுப்பாட்டை இழக்கவில்லை என்று காட்டுவதைப் போலவே அமைந்துள்ளன. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை மீண்டும் கைப்பற்றி நிலைகொள்ளுமளவுக்கு கிழக்கில் படையினரின் பலம் போதுமானதாக இல்லை.

கிழக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'அலைவேக' நடவடிக்கையும் தோல்வியில்தான் முடிந்தது.

கிழக்கில் உள்ள படையினரால் தமது பலத்தை ஒன்றுகுவித்து ஒரு குறிப்பிட்ட பகுதியை நோக்கி முன்னேற முடியும்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள பலத்தை வைத்துக் கொண்டு கிழக்கில் புதிய முகாம்களை நிறுவினால் அவை புலிகளால் தாக்கப்படும்.

தற்போது கிழக்கில் உள்ள முகாம்கள் பலமாக இருப்பதால் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தற்பாதுகாப்பு தேடிக்கொள்ள முடிகிறது.

கிழக்கில் புலிகள் முகாம் தாக்குதல் ஒன்றில் ஈடுபடவேண்டுமானால் தமது அணிகளை பெருமளவில் ஒன்று குவித்துத்தான் தாக்கவேண்டும்.

முகாம்கள் பரவலாக நிறுவப்படுமானால் புலிகளுக்கு தாக்குதல் நடத்த வசதியாகிவிடும்.

எனவே தமது பலத்திற்கு ஏற்பவே கிழக்கில் படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

புலிகளும் தமது பலத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் பாரிய சண்டைகளைத் தவிர்த்து வருகின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குவது, படையினர் நிலைகொண்டுள்ள நகர் களில் சிறு சிறு குழுக்களாகவும், தனிநபர்களாகவும் கெரில்லாக்களை ஊடுருவச் செய்து அப்பகுதிகளில் சீர்குலைவுகளை ஏற்படுத்துவது என்பவற்றில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

காரியத்தை முடித்தனர்.

மார்பில் மூன்று சூடு. சூடுபட்டு விழுந்த பின்னர் அருகில் சென்று தலையில் ஒரு சூடு. அவரது இடுப்பில் இருந்த பிஸ்டலையும் எடுத்துக் கொண்டு இரண்டு புலிகளும் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர்.

அதன்பின்னர்தான் ஆரம்பமானது அகோரத் தாண்டவம். மக்களுக்கு தரும அடி. தமிழ் கட்சி அலுவலகங்களுக்குள் புலிகளைத் தேடி வேட்டை. சிங்கள மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம். ஹர்த்தால்.

விளைவு; அந்த சப்-இன்ஸ்பெக்டரை தேவையில்லாமல் சுட்டுவிட்டார்களே. இது தேவைதானா என்று அதிருப்தி தெரிவித்த மக்கள்கூட, கடைசியில் பொலிசார் மீது அதிருப்தி கொள்வதில் முடிந்திருக்கிறது.

புலிகள்மீது தப்பித்தவறிக்கூட யாரும் அதிருப்திப்பட்டுவிடக்கூடாது என்ற கரிசனையுடன் திருமலைப் பொலிசார் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். புலிகள் எப்படி நன்றி சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை.

தாக காட்டுவதற்கான பிரசாரத்திற்கு விலையாக ஏற்கனவே தமது பிடியில் இருந்த பகுதிகளை அரசாங்கம் இழக்க வேண்டி இருக்கிறது.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்கான படைக்குவிப்புக்காக யாழ் குடாநாட்டில் இருந்தும் ஒரு தொகுதிப் படையினரை நகர்த்த வேண்டி ஏற்பட்டது.

அதனால் யாழ் குடாநாட்டில் பல பகுதிகளில் புலிகளின் அணிகள் மீண்டும் நிலைகொண்டுள்ளன. தமது உறுப்பினர்களின் நினைவுதினக் கூட்டங்களையும் சுதந்திரமாக நடத்திக் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

யாழ்குடாநாட்டில் பலமுகாம்கள் காவலரன்கள் என்பவற்றை படையினர் மூட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் பூநகரி இராணுவமுகாமும் மூடப்பட்டுவிட்டது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது பூநகரி முகாம். அந்த முகாமை அகற்றுமாறு புலிகள் பிடிவாதமாக நின்றனர். முடியவே முடியாது என்றுவிட்டார்கள் படையினர். இப்போது படையினரே மூடிவிட்டனர்.

எனினும் அன்றைய நிலைக்கும் இன்

ஏற்பட்டது.

தாக்குதலின் விளைவுகளோடு ஒப்பிட்டால் சர்வதேசரீதியான 'முதலாவது பெரும் கெரில்லா தாக்குதல்' என்ற பெயரையும் முல்லைத்தாக்குதல் பெற்றுள்ளது.

உலகில் வேறெங்கும் மிகக் குறுகிய நாட்களில் இப்படியான பாரிய உயிரிழப்பை ஏற்படுத்திய தாக்குதல் இதுவரை நடைபெறவில்லை. முல்லைத்தாக்குதலின் உக்கிரம் அந்தளவுக்கு இருந்தது.

'சத்ஜய3' இல் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்பை படைத்தரப்பு மிகைப்படுத்தியே செய்திகள் வெளியிட்டது.

இதுவரை கிடைத்த தகவலின்படி 'சத்ஜய' நடவடிக்கை மூலம் புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்பு 150 பேர்வரைதான். படையினர் தரப்பிலும் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. புலிகளைவிட படையினர் தரப்பில் இழப்பு அதிகம் என்றும் சொல்லப்படுகிறது.

மரபுப் போர்முறையில் முன்னேறும் படையினரை புலிகளால் ஒருவரையறைக்கு மேல் தடுத்து நிற்க முடியாது.

# வெற்றிகளும் வெளியே தெரியாத தோல்விகளும்



உள்ள பகுதியை நோக்கி படையினர் முன்னேற ஆரம்பித்தால் புலிகளால் அதனை பூரணமாகத் தடுத்து நிற்க முடியாது.

குண்டுகளை சரமாரியாக பொழிந்து தள்ளும் விமானப்படையின் உதவியோடு படையினர் முன்னேறிச் செல்ல கிழக்கு மாகாணத்தின் தள மற்றும் கள நிலவரம் சாதகமாக இருக்கும்.

அவ்வாறான ஒரு சண்டையில் புலிகளின் அணிகள் நேருக்கு நேர் படையினரை எதிர்கொண்டால் பாரிய இழப்புக்களை சந்திக்கவேண்டியிருக்கும்.

அதனால் புலிகளின் அணிகள் சண்டையிலிருந்து விலகிக் கொள்ளுகின்றன.

கிழக்கில் தற்போது படையினரின் தந்திரோபாயம் புதிய முகாம்களை நிறுவிக் கொள்வதல்ல. இருக்கின்ற முகாம்களை பாதுகாத்துக் கொள்வதுதான்.

அந்த முகாம்களைதேடி புலிகளின் அணிகள் வராமல் தடுப்பதற்காக அடிக்கடி முகாம்களில் இருந்து முன்னேறிச் சென்று புலிகளின் அணிகளை பின்னால் ஒரு தள்ளு தள்ளிவிட்டுப் படையினர் திரும்பி வந்துவிடுகின்றனர்.

அதாவது தமது முகாம்களின் தற்பாதுகாப்புக்கான ஒரு யுத்தத்தை மட்டுமே கிழக்கில் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் புலிகளின் அணிகளில் பெரும் தொகையானோர் பலியானதாகவும், தாம் புலிகளின் அணிகளை அழித்தொழிக்கவே தாக்குதல் நடத்தியதாகவும் படையினர் தரப்பால் பிரசாரம் செய்யப்படுகிறது. அப்பிரசாரத்தின் மூலமாக தமது தற்காப்பு யுத்தத்தை தாக்குதல் யுத்தமாகவும், அழித்தொழிப்பு யுத்தமாகவும் படையினர் சித்தரிக்க முற்படுகின்றனர்.

கிழக்கில் புலிகளின் பலம் என்பது அவர்கள் தமது தாக்குதல்களால் பெற்ற பலனைவிட படையினரின் ஆட்பல பலவீனம் சார்ந்த ஒன்றாகவே இருக்கிறது.

கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்களை புலிகள் நடத்தியிருந்தாலும்கூட படையினரின் ஆட்பலம் அதிகமாக இருக்குமானால் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருந்திருக்கும்.

ஆனால் ஒரு வரையறைக்கு மேல் படையினரால் தமது ஆட்பலத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாது. எனவே இத்தகைய நடவடிக்கைகளால் தமது கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களைப் பாதுகாப்பதிலேயே படையினரின் பலத்தில் பெரும்பகுதி செலவாகிக்கொண்டிருக்கிறது.

புலிகளில் இரண்டுபேர் போதும், ஒரு நகரத்தையே கிடு கிடுக்க வைத்துவிடலாம். அதன்பின்னர் தேடுதல் நடவடிக்கைகள், சோதனைகள், கைதுகள், தடை அரண்கள், மேலதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று படையினருக்கு ஏகப்பட்ட வேலைகள். நிறைய ஆட்களும் தேவைப்படுவார்கள்.

அதுமட்டுமல்ல தமது நடவடிக்கைகள் காரணமாக குறிப்பிட்ட நகர்களில் உள்ள தமிழ் மக்களின் அதிருப்திகளையும் படையினர் சம்பாதித்துக் கொள்வார்கள்.

கிழக்கில் படையினரின் பலம் அவர்களது ஆட்பலத்தில் தங்கியுள்ளது. ஆனால் புலிகளின் பலம் குறைந்த ஆட்பலத்தில் அவர்களால் மேற்கொள்ளப்படும் கச்சிதமான தாக்குதல்களில் தங்கிநிற்கிறது.

சமீபத்தில் திருக்கோணமலையில் ஒரு பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டரை புலிகள் சுட்டுக்கொன்றனர். மேலோட்டமாகப் பார்த்தால் எவ்வித காரணமும் இல்லாத ஒரு கொலை போலவே அது தோன்றும்.

குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் சமீபத்தில்தான் திருமலைக்கு மாற்றலாகி வந்திருந்தார். அதனால் திருமலையில் அட்டகாசம் செய்த ஒருவர் என்றும், அதனால் சுடப்பட்டார் என்றும் சொல்வதற்கு இடமில்லை.

எனினும் குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் அடிக்கடி தனியாக ஒரு பாதை வழியாகச் சென்று வருகிறார். இடுப்பில் பிஸ்டல் வைத்திருக்கிறார் என்ற தகவல் புலிகளுக்கு கிடைத்தது.

சுலபமான குறி. ஒரு பிஸ்டலும் கிடைக்கும். நகரில் ஒரு தாக்குதல் செய்தமாதிரியும் இருக்கும் என்று கணக்குப் போட்டனர்.

**வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களிடம் புலிகளுக்கு இருக்கும் செல்வாக்கைவிட, படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களிடம்தான் புலிகளின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது.**

'புலிகளிடமிருந்து தமிழ்மக்களை விடுவிக்கவே யுத்தம்' என்ற கோஷம் வெளியுலகைக் கவரமட்டுமே அரசாங்கத்திற்கு கைகொடுக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக்கோஷம் ஒரு அபத்தமாகவே தெரிகிறது.

வடக்கு-கிழக்கில் படையினரின் வெற்றிகள் தென்பகுதியில் அரசாங்கத்தின் 'இமேஜை' உயர்த்தலாம். ஆனால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடம் அரசாங்கம் தனது 'இமேஜை' இழந்து வருகிறது.

யாழ்குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ளனர். புலிகளின் நிர்வாகமும், தளப்பிரதேசம் என்ற நிலையும் இல்லாமல் போய் இருக்கிறது. ஆனால் படையினரின் நடவடிக்கைகளால் யாழ் குடாநாட்டு மக்களிடம் புலிகளின் அவசியம் உணரப்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

படைபலத்தின் மூலம் மக்களையும் தமது பக்கம் திருப்பிவிடலாம் என்று அரசாங்கம் நினைக்குமானால் அது தவறானது என்பதையே நிகழ்ச்சிப் போக்குகள் நிரூபிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி நகரையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

போரில் புதிய பகுதிகள் கைப்பற்றப்படுவது பிரசார நோக்கில் அரசுக்கு சாதகமாக இருக்கின்றது.

ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் நடக்கும் அரசியல் யுத்தத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பெறும் வெற்றிகள் ஆளும் கட்சிக்கு துருப்புச் சீட்டுக்கள்தான்.

ஆனால், புதிய பகுதிகளைப் பிடித்துவிட்டறைய நிலைக்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது.

யாழ்குடாநாட்டை இராணுவரீதியாக சுற்றிவளைக்கும் வேலிகளில் ஒன்றாகவே பூநகரி முகாம் இருந்தது. தற்போது யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பூநகரி முகாமின் முன்னைய முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

ஆனாலும் படைமுகாம் மூடப்பட்டதற்கு அதுமட்டும் காரணமல்ல.

பூநகரி முகாமுக்கு சமீபமாகவுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு புலிகள் அறிவித்திருந்தனர். இச் செய்தி படையினரின் காதுகளுக்கும் எட்டியதாகத் தெரிகிறது.

உண்மையில் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டார்களா, அல்லது படையினருக்கு அப்படி செய்தியை எட்டவைத்து முகாமை மூடுவதற்கு தூண்டினார்களா? என்பது சந்தேகமாக இருக்கிறது.

படையினருக்கும் பூநகரி முகாமை முன்னைய பலத்தில் வைத்திருக்க முடியவில்லை. பூநகரி முகாமில் இருந்த படையினரில் ஒரு பகுதியினர் கிளிநொச்சிக்கு எடுக்கப்பட்டுவிட்டனர்.

கிளிநொச்சியில் தொடர்ந்து நிலைகொண்டிருக்க வேண்டுமானால் படைபலம் கட்டாயம் தேவை. எனவே பூநகரி முகாமை மூடிவிடுவதுதான் உசிதம் என்று படையினர் நினைத்துவிட்டனர்.

இப்போது பூநகரியில் புலிகள் நிலைகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக யாழ்குடாநாட்டின் சில பகுதிகளையும், பூநகரியையும் படையினர் புலிகள் வசம் விட்டுள்ளனர்.

வன்னியில் முல்லைத்தீவு மாவட்ட தலைநகரான முல்லைத்தீவு புலிகளிடம் சென்றுள்ளது. 'ஓயாத அலைகள்' நடவடிக்கை மூலமாக முல்லைத்தீவு நகரை புலிகள் கைப்பற்றினார்கள். அதே சமயம் வன்னியில் மற்றொரு மாவட்டமான கிளிநொச்சியின் தலைநகரை புலிகள் இழந்துள்ளனர்.

முல்லைத்தீவு தாக்குதலுடன் ஒப்பிடும்போது படையினரின் கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜய' வெற்றி சமமாகக் கொள்ளப்பட முடியாது.

முல்லைத்தீவில் 1500 படையினர்வரை பலியானார்கள். இரண்டு ஆட்டிலறி பீரங்கிகள், பவள் கவச வாகனம், 1402 ஏ.கே.ரக துப்பாக்கிகள், 903 ஆட்டிலறிக் குண்டுகள், 120 எம்.எம்.மோட்டார் குண்டுகள் மொத்தம் 2297 ஆகியன உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளிடம் சென்றன.

இலங்கையின் யுத்த வரலாற்றில் மிகப் பாரிய தோல்வி அரச படையினருக்கு

ஆனால் வன்னிப் போர்முனையில் 'சத்ஜய'வின் மூன்று கட்டங்களிலும் படையினருக்கு புலிகள் பலத்த இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். மூன்று டாங்கிகள் புலிகளால் அழிக்கப்பட்டன. மேலும் மூன்று டாங்கிகள் சேதமாக்கப்பட்டன.

'சத்ஜய' முதல் இரு கட்டங்களிலும் படையினரால் புலிகளைமீறி முன்னேற முடியவில்லை. பின்னர் படை பலத்தை மேலும் அதிகரித்துக்கொண்டுதான் முன்னேற முடிந்தது.

10 ஆயிரம் படையினருக்கு மேல் களத்தில் இறக்கப்பட்டனர்.

புலிகள் தரப்பில் இரண்டாயிரம்பேர் வரையான புலிகளே களத்தில் இறக்கப்பட்டனர்.

அவ்வாறு இருந்தும் போர்முனை நிலவரம் உக்கிரமாக இருந்தது. புலிகளுக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியதாக அரசு பிரசாரம் செய்வதன்மூலம் 'சத்ஜய' வெற்றிக்குத்தாம் கொடுத்த விலையை அரசாங்கம் மெல்ல மூடி மறைத்திருக்கிறது.

வன்னியில் தொடர்ந்தும் படையினர் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் இழப்புக்கள் அதிகமாகவே இருக்கும்.

புலிகள் இதுவரை ஆட்டிலறிப் பீரங்கிகளைப் பயன்படுத்தவில்லை. 120எம்.எம். மோட்டார் குண்டுகளை ஓரளவு பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

படையினர் தொடர்ந்து முன்னேறினால் ஆட்டிலறிகளைப் புலிகள் பயன்படுத்தலாம். கிளிநொச்சி சண்டையில் ஆட்டிலறிப் பீரங்கிகள் புலிகளால் கொண்டுவரப்பட்டால் அவற்றை அழித்துவிட விமானப்படை விமானங்கள் சுற்றித் திரிந்தன.

தற்போது முல்லைத்தீவு பகுதியில் காடுகளுக்குள் நடத்தப்படும் விமானத் தாக்குதலின் நோக்கமும் ஆட்டிலறிப் பீரங்கிகளை தாக்கி அழித்துவிடுவதுதான். அதனை வெளிப்படையாக சொல்ல முடியாது என்பதால், பிரபாகரனை தேடித் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக, இழப்பதும், பிடிப்பதும் என்ற நிலையில் போர் தொடர்கிறது. முழுமையாக பிடிப்பது என்ற கட்டத்துக்குள் செல்வதற்கு இரு தரப்புக்கும் பலம் போதுமானதாக இல்லை.

முல்லைத்தீவை புலிகள் பிடித்தார்கள். கிளிநொச்சியை படைகள் பிடித்தனர். ஆனால் மக்கள்? அவர்கள் ஓடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். இரு தரப்புக்கும் வெற்றி-தோல்வி மாறி மாறி வரும். நிரந்தரமாக இருப்பது மக்களின் அவலம் மட்டும்தான்.

நாரதர்

## அதிரடி அப்பாத்துரை



கிடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடித்த கதை தெரியும்தானே. தேனகப்பிரதிநிதி சிங்கத்தார் அரச பணத்தில் கட்டிய பாடசாலைக் கட்டிடத்துக்கு தனது திருப்பெயரைச் சூட்ட ஆசைப்பட்டு, உள்ள பெயரையும் கெடுத்துக் கொண்டாராம். மாணவர்கள் போட்ட போட்டில் கதிகலங்கிப்போன சிங்கத்தார் 'மாணவர் விருப்பப்படியே செய்யுங்கோ' எண்டு விழுந்தும் மீசையில் மண்படவில்லை எண்டமாதிரி இறங்கிவந்தாராம். பெயர்சூட்ட சிபாரிசு செய்தவரே பிரதிநிதியாரின் பாரியார்தானாம். முதலில் மனைவியின் முடிவே அவர் முடிவாக இருந்தது. பின்னர் மாணவர்கள் சீறியதால் கொள்கையை மாற்றிக்கொண்டு 'மாணவர் முடிவே என் முடிவு' எண்டு பல்டி அடிச்சுப்போட்டார். அச்சாஹை. அச்சா! தமிழ்நாட்டில்தான் தம் பெயர் சூட்டி மகிழும் அரசியல்வாதிகள் இருக்கினம் எண்டா சிங்கத்தாரும் போட்டிக்குக் கிளம்பி கடைசியில் வேட்டியைக் காப்பாற்றியதே பெரும் புண்ணியம் எண்டாகிப் போச்சுது.

திருவான மலையில் தமிழ் கட்சிகளுடன் பாதுகாப்புத்தரப்பார் உரசியிருக்கினம். ரெண்டு எழுத்தார்தான தமிழ் கட்சிகளை இதுவரை விரோதிகளாகப் பாவிச்சு பாய்ந்து கொண்டிருந்தவை. இனிமேல் ரெண்டு எழுத்தாருக்கு தமிழ் கட்சிகளுடன் சண்டைபோடும் அவசியம் இருக்காது. பாதுகாப்பு தரப்பினரே அந்த வேலையைக் கவனிச்சுக் கொள்ளுவினம்போலக் கிடக்கு. ஆயுதத்தை தூக்கி எறிந்துபோட்டு வருமாறு ரெண்டு எழுத்தாரை அழைக்கினம். ரெண்டு எழுத்தார் வந்தால் எப்படி வரவேற்பு கொடுக்கலாம் எண்டு தமிழ் கட்சிகளை வைத்து ஒத்திகை பார்க்கினமாக்கும். ஒத்திகையே பிரமாதமுங்கோ.

அயர்லாந்து பிரச்சனைபற்றிய கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள நம்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழு போயிருக்குதாம். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, தமிழ் கட்சி எம்.பிகளும் இப்படியான தூதுக்குழுக்களில் செல்வது வழக்கம். 'இங்குள்ள பிரச்சனைக்கு மூன்று தரப்பாரும் இருந்து பேசி முடிவு காணமுடியேல்லையாம், பிறநாட்டுப் பிரச்சனையைத் தீர்த்துவைக்க போகிறீர்களாக்கும்' எண்டு ஒரு பிரதிநிதியிடம் கேட்டேன். அவர் என்ன சொன்னார் தெரியுமோ? "நாங்கள் போவது பிரச்சனையை எப்படி மேலும் பிரச்சனையாக்கி இழுத்தடிக்கலாம் எண்டு ஐடியா சொல்லிக் கொடுக்கத்தானே, அது தெரியாமல் கேட்கலாமோ? எண்டு போட்டார் ஒரு போடு. எனக்கு அது ஜோக் மாதிரித் தெரியவில்லை. உங்களுக்கு?

யாழ்ப்பாணத்தில் தனியார் கடைகள் இயங்குவதை ஒரு சாரார் விரும்பவில்லையாம். வெற்றிலையில் இருந்து சைக்கிள் டயர்வரை தங்கள் ஆட்களை வைத்து வியாபாரம் பண்ணி லாபம் காண்பதில்தான் ஒரு சாராருக்கு அக்கறையாம். வேலியே வியாபாரம் செய்யும் கதை. யாழ்ப்பாணத்தில் கடும்பாதுகாப்பாகவும், ரெண்டு எழுத்தார் எண்டு முத்திரை குத்தப்படாமலும் கறு கறுப்பாக இயங்கும் வாய்ப்புப் பெற்றுள்ள ஒரே ஒரு துறை கறுப்புச் சந்தை. காரணம் கறுப்புச் சந்தை பரமசிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு.

மூன்று வருசம் கொழும்பில் இருக்கும் அத்தாட்சி காட்டினால்தான் ஆண்டு ஒன்றுக்கான அனுமதி தரப்படும் எண்டு தலைநகர தமிழ் பாடசாலைகளில் கூறப்படுகிறதாம். சில பாடசாலைகளில் குடியிருக்கும் வீட்டுக்கு மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் செலுத்திய ஆதாரங்களும் கேட்கப்படுகிறதாம். கொழும்பில் பாடசாலை அனுமதி பெறமுன்னர் சொந்தமாக வீடு வாங்கவேணும்போல கிடக்கு எண்டு பெற்றோர்கள் பெருமூச்சுவிடுகிறார்கள். கல்வி கற்கவும் குடியிருக்கும் காலவரம்புக்கும் என்ன சம்பந்தம்? மூன்று வருசத்துக்கு குறைவான காலம் கொழும்பில் வசிப்போரின் பிள்ளைகள் பள்ளிக் கூடத்துக்கு வெளியில் நிண்டுதான் படிக்கவேணுமாக்கும். வாழ்க இலவசக் கல்விச்சேவை.

கிழக்கில் சமீபத்தில் நடைபெற்ற 'கலவரங்கள்' தொடர்பாக கூட்டாக அறிக்கைவிடலாம் எண்டு கூட்டான கட்சியிடம் கேட்கப்பட்டதாம். தேனகத்தின் பச்சைக்கட்சி வெகுஜனப்பிரதிநிதி ஒருவர்தான் கேட்டவராம். கூட்டான கட்சியின் ஒரு பிரதிநிதி ஓ.கே. சொல்லிப் போட்டாராம். விஷயமறிந்த சிங்கத்தார் தலையிட்டு தடுத்து நிறுத்திப் போட்டாராம். எதையும் தனியாகச் செய்தால்தான் லாபம் எங்கள் வரவில் சேரும் எண்ட ரீதியில் அண்ணர் சொல்லுகிறார். நான் என்ன செய்வது? எண்டு வருத்தம் தெரிவித்தாராம், முதலில் ஓ.கே.சொன்னவர்.

தமிழ்நாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் நம்நாட்டு தொலைக்காட்சிகளில் அருமையாக சிங்களம் பேசுவது மகிழ்ச்சியாக இருப்பினும், ரூபவாகினியில் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணான தமிழ் நாடகத்தையும் முன்னறிவித்தல் இல்லாமல் கடந்தவாரம் நிறுத்தியதுதான் கவலையாகக் கிடக்கு' என்னிடம் ஒரு நண்பர் சொன்னார். "நாடகம் பார்க்க குடும்பமே ரீவி முன்பாக குந்தியிருந்தது. பார்த்தால் நாடகம் இல்லை. அது பற்றிய அறிவிப்பும் இல்லை. கொஞ்சம்கூடப் பொறுப்புணர்வு வேண்டாமோ? எண்டார். நான் என்ன சொன்னேன் தெரியுமோ? "சேச்சே... பொறுப்புணர்வு இல்லாமல் போகுமோ. ஆனால் அவை நிறுத்தினது தமிழ் நாடகத்தைத்தானே!" இன்னொரு யோசனையையும் சொல்லி அனுப்பினேன். "தமிழ் நாடகங்களை ஒழுங்காகப் பார்க்க ஆசையிருந்தா சிங்களம் படிப்பது நன்று. நம்பியாரும் சிங்களம் பேசுகிறார்!

தமிழகக் கவிஞர் அப்துல் ரகுமானின் கவிதையில் இருந்து ஒரு துளி.

"ஜனனத்தில் ஒரு கதவு திறக்கிறது
மரணத்தில் ஒரு கதவு திறக்கிறது
இரண்டிலும் நாம் உள்ளே வருகிறோமோ?
வெளியேறுகிறோமோ? என்பது தெரியவில்லை".



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்



99

அற்புதன் -எழுதுவது

# ஆயுத ஒப்படைப்பில் ஒரு தந்திரம்

## சுதுமலையில் பிரபா

பிரபாகரன் சுதுமலையிலிருந்துதான் ஹெலிகொப்டர் மூலமாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதே சுதுமலையில் ஆகஸ்ட் 2ம் திகதி பிரபாகரனை கொண்டுவந்து இறக்கியது இந்திய ஹெலிக்கொப்டர்.

சுதுமலையில் பிரபாகரன் இறங்கிய போது யாழ் குடாநாடெங்கும் புலிகள் இயக்கித்தினரால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்திகள் தோறும் ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ஊரடங்கு உத்தரவை அமுல் நடத்தும் பொறுப்பு சங்கரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சுதுமலையில் இறங்கிய பிரபாகரனை இந்தியப் படையினர் தமது கவச

ஆயினும் இந்தியாவோடு பேச்சில் உடன்பாடு தெரிவித்தாயிற்று. எனவே முதல் கட்டமாக ஒரு தொகுதி ஆயுதங்களை ஒப்படைக்கலாம். அதன்பின்னர் சூழ்நிலையைப் பார்த்து முடிவு செய்யலாம் என்று தீர்மானித்தார் பிரபாகரன்.

## ஆயுத ஒப்படைப்பு

ஒப்படைக்கும் ஆயுதங்கள் விடயத்திலும் ஒரு தந்திரம் செய்தார்கள் புலிகள் இயக்கத்தினர்.

ஏனைய இயக்கங்களை தடைசெய்த போது கைப்பற்றிய ஆயுதங்களில் பாவனைக்கு உதவாதவை பல இருந்தன. ஈ.பி.ஆர்.எப்.எஃப். இயக்கத்திடம் கைப்பற்றிய மோட்டார் ஷெல்கள் பார்வைக்கு பொலிவாக பெருமளவில் இருந்தன. அவை உத்தரவாதம் இல்லாதவை என்பதால் பாவிக்கப்படாமல் கிடந்தன. புலிகள் இயக்கத்தினரிடமும் பாவனைக்கு உதவாத ஆயுதங்கள் இருந்தன.

அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி அவற்றோடு சில நல்ல ஆயுதங்களையும் கலந்து ஒப்படைக்கத் திட்டமிட்டனர் புலிகள்.

யிட்ட செய்தியாளர்களுக்கு ஆச்சரியம். முதல் தொகுதியாக ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களே இத்தனையா?

'கிட்டத்தட்ட பெரும்பாலான ஆயுதங்களையும் ஒப்படைத்துவிட்டார்கள் போலத்தான் இருக்கிறது' என்றெல்லாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதங்களைப் பொறுப்பெடுத்தவர்களுக்கும், ஒப்படைத்த புலிகள் இயக்கத்தினருக்கும் தான் அந்த ஆயுதங்களின் தரம் பற்றிய இரகசியம் தெரியும்.

இலங்கை அரசாங்கத்துக்கு புலிகள் முதற்கட்டமாக ஒப்படைத்த ஆயுதங்களின் தரம் தெரிந்தாலும் அது பற்றி வெளியே சொல்லமுடியாத தர்மசங்கட நிலமை.

வெளியே சொன்னால் ஒப்பந்த எதிர்ப்பாளர்களுக்கு மெல்ல அவல் கொடுத்தமாதிரியாகிவிடுமே.

படமெடுக்க பொலிவாகத் தெரிகிறதே இப்போதைக்கு அது போதும் என்ற நிலையில்தான் இருந்தது அரசாங்கம்.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்ததைத் தொடர்ந்து ஏனைய இயக்கங்களும் ஆயுதங்களை ஒப்படைக்க தமது பிரதிநிதிகளை அனுப்பினார்கள்.

ஆயுத ஒப்டைப்போடு வடக்கு-கிழக்கில்

இதேசமயம் தமிழ் நாட்டிலும் ஒப்பந்தத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற ஆரம்பித்தன.

ஒப்பந்தத்துக்கு எம்.ஜி.ஆரும் ஆதரவு என்பதால், ஒப்பந்தம் அநீதியானது என்று பிரசாரம் செய்வது தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு- அவரது சொந்த அரசியல் நலனுக்கும் ஏற்றதாக இருந்தது.

பிரபாகரனின் முடிந்த முடிவு தமிழீழம் தான். ஒப்பந்தத்தை பிரபாகரன் மனப்பூர்வமாக ஏற்கவில்லை. நிர்ப்பந்தம் காரணமாகவே ஏற்றுக்கொண்டார் என்ற செய்தி வை.கோபாலசாமி மூலமாக கலைஞர் கருணாநிதிக்குக் கிடைத்தது.

## தீக்கிரையான பிரதிகள்

தமிழ்நாட்டில் ஒப்பந்தத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதை புலிகளும் விரும்பினார்கள்.

கி.வீரமணி தலைமையிலான திராவிடர் கழகத்துக்கும் பிரபாகரனின் மனநிலை தெரியப்படுத்தப்பட்டது. திராவிடர் கழகத்தோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர் பேபி சுப்பிரமணியம். அவர்தான் புலிகள் இயக்க அரசியல் செயலாளராகவும் இருந்தவர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தப் பிரதிகளை தீக்கிரையாக்கும் போராட்டம் ஒன்றை நடத்தியது திராவிடர் கழகம். மதுரையில்

வில்லை. ஆனாலும் பிரபாகரனுடன் இருந்த தனது நல்லுறவை எம்.ஜி.ஆர். துண்டிக்கவுமில்லை.

சென்னைக் கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ராஜீவ் காந்தியும்-எம்.ஜி.ஆரும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் ராஜீவ் எம்.ஜி.ஆரை போற்றிப் பேசினார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாக எம்.ஜி.ஆர்தான் காரணம் என்று பாராட்டினார் ராஜீவ்.

தமிழகத்தில் ஒப்பந்தத்துக்கு எதிரான எதிர்ப்புக்களைப் பலவீனப்படுத்தவும், நெருங்கிவந்த தேர்தலுக்கு ஒப்பந்தப் பலனை வைத்து தமிழக மக்களின் ஆதரவைத் திரட்டவுமே அக்கூட்டம் நடத்தப்பட்டது.



புலிகளால் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்கள் மோட்டார் ஷெல்களும் காணப்படுகின்றன.

காலூன்றிவிடவேண்டும் என்பதுதான் ஏனைய இயக்கங்களின் நோக்கம்.

அந்த நோக்கத்தை எப்படியாவது முறியடித்துவிடவேண்டும் என்பதில் புலிகள் இயக்கத்தினரும் கவனமாக இருந்தனர்.

இந்தியப் படையினரின் வருகையோடு இலங்கைப் படையினர் 'ஒப்பரேசன் லிபரேச'னில் நிலைகொண்ட பகுதிகளில் இருந்து வெளியேறி முன்னைய முகாம்களுக்குத் திரும்பினர்.

நெடுமாறனும் ஒப்பந்தப் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. எடுத்த நிலைப்பாடு கொஞ்சம் சுவாரசியமானது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை

எம்.ஜி.ஆரின் கரத்தோடு தனது கரத்தைக் கோர்த்து, கூட்டத்தினர் முன்னர் கரங்களை உயர்த்திக்காண்பித்தார் ராஜீவ் காந்தி.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## சுத்தப்படுத்தல்

யாழ் கோட்டை இராணுவ முகாம் முன்பாக இருந்த மிதிவெடிகளை அகற்றும் பணியில் இந்தியப்படையினர் ஈடுபட்டனர்.

அந்தப் பணியில் இந்தியப் படைவீரர்கள் சிலர் மிதிவெடியில் சிக்கிப் பலியானார்கள்.

அந்தச் செய்தி இந்தியப்படைமீது மக்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தியது.

மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுக் காயமடைந்த இந்தியப் படைவீரர்கள் யாழ் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பிக்கப்பட்டனர்.

விபரம் அறிந்து பொதுமக்கள் பலர் மருத்துவமனைக்கு முன்னர் திரண்டுவிட்டனர்.

காயமடைந்த படைவீரர்களுக்கு இரத்தம் வழங்குவதற்காகவே மக்கள் தாமாக முன்வந்து சென்றிருந்தனர்.

இத்தனைக்கும் இரத்தம் தேவையென்று வேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லை. மக்களின் கரிசனை இந்தியப் படையினரை நெகிழவைத்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு இலங்கையில் தென்பகுதியில் எதிர்ப்பு கிளம்பியிருந்தது.

ஒப்பந்தம் தமிழ் மக்களுக்குச் சாதகமானது என்ற எண்ணம்தான் எதிர்ப்புக்கான முக்கிய காரணமாக இருந்தது.

வாகனமொன்றில் ஏற்றிச் சென்றனர். பிரபாகரனோடு அப்போது தமிழ்நாட்டிலிருந்த கிட்டுவும் வந்திருந்தார்.

புலிகள் இயக்க அலுவலகத்தில் பிரபாகரனை மாத்தையா வரவேற்றார்.

ஆயுதங்களை ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு புலிகள் இயக்கத்திற்குள் அதிருப்திகள் ஏற்பட்டன.

திருமலை மாவட்டத் தளபதி புலேந்திரன் ஆயுத ஒப்படைப்புத் தொடர்பாக மனச் சோர்வடைந்தவராகக் காணப்பட்டார்.

திருமலையில் உள்ள நெருக்கடிகள் தீரவில்லை. இந்நிலையில் ஆயுதங்களை ஒப்படைப்பது சரியாக இருக்காது என்றார் புலேந்திரன்.

ஆயுத ஒப்படைப்பு விடயத்தில் பிரபாகரனுக்கும் விருப்பம் இருக்கவில்லை.

ஆகஸ்ட் 6ம் திகதி பலாலி இராணுவத் தளத்தில் ஆயுதங்களை ஒப்படைக்கச் சென்றார் யோகி.

புலிகள் இயக்க முக்கிய தளபதிகள் எவரும் செல்லவில்லை. யோகியைத்தான் அனுப்பிவைத்தனர்.

ஆயுத ஒப்படைப்பின் அடையாளமாக தனது பிஸ்டலை ஜெனரல் சேபால ஆட்டிக்கலவிடம் ஒப்படைத்தார் யோகி.

அதனைத் தொடர்ந்து கொண்டுசென்ற ஏனைய ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன.

தொலைக்காட்சிக்காரர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் ஆயுத ஒப்படைப்பைப் படமாக்கினார்கள்.

பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் ஆயுத ஒப்படைப்புப் பற்றிய செய்திகளை பத்திரமாகக் குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

ஆயுதங்களை மேலோட்டமாகப் பார்வை

ஆதரித்து பண்டிருட்டி ராமச்சந்திரனும், நெடுஞ்செழியனும் கருத்து வெளியிட்டனர்.

அ.தி.மு.க. அமைச்சரவையில் இருந்த காளிமுத்து ஒப்பந்தத்தை எதிர்த்து கூட்டங்களில் பேசினார். இரண்டு கருத்துக்களையுமே எம்.ஜி.ஆர் அனுமதித்தார்.

மத்திய அரசை திருப்திப்படுத்த பண்டிருட்டி ராமச்சந்திரன், நெடுஞ்செழியன் ஆகியோரின் கருத்து பயன்பட்டது. தி.மு.க.வுக்கு ஈடுகொடுக்க காளிமுத்துவின் பேச்சுக்கள் பயன்பட்டன.

இதனைக் கிண்டல் செய்து 'துக்ளக்' சஞ்சிகை ஒரு காட்டூனை வெளியிட்டிருந்தது.

எம்.ஜி.ஆருக்கு ஆறு முகங்கள். அந்த ஆறு முகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியைச் செய்வதுபோல கிண்டலடித்திருந்தார் சோ.

ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர் எதிர்க்க

## சுதுமலைக் கூட்டம்

யாழ்ப்பாணம் சுதுமலையிலும் ஒப்பந்தம் தொடர்பாகவும், ஆயுத ஒப்படைப்புத் தொடர்பாகவும் விளக்கமளிக்க ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தினார்கள் புலிகள்.

முதல் முறையாக பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றப் போகிறார் பிரபாகரன்.

பிரபாகரனைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பிரபாகரனை நேரில் கண்டவர்கள் குறைவு.

முதல் முறையாக பகிரங்க இடத்தில் பிரபாகரன் தோன்றப் போகிறார் என்ற செய்தி பரவியதும் சுதுமலையில் பல்லாயிரம் மக்கள் கூடினார்கள்.

சுதுமலை அம்மன் கோவில் அருகே உள்ள வயல் வெளிகளில் மக்கள் வெள்ளம். (தொடர்ந்து வரும்)

# கடலின் நடுவில் கடும் சமர் காட்சி!

முல்லைத்தீவு இராணுவத் தளம மீதான தாக்குதல் 18.07.96 அன்று அதிகாலையில் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

'ஓயாத அலைகள்' என பிரபாகரனால் பெயர் சூட்டப்பட்ட தாக்குதல் நடவடிக்கை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வரலாற்றில் மிகப் பாரிய வெற்றியாக அமைநதது.

1991 இல் ஆனையிறவு இராணுவ முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். 'ஆகாய கடல் வெளிச் சமர்' என்று அழைக்கப்பட்டது.

கடல்வழியாக தரையிறங்கிய அரச படைகள் புலிகளின் முகாம் முற்றுகையை முறியடித்தன.

கடற்புலிகள் அமைப்பு பலமாக இன்மையால் கடல்வழியாக படையினர் தரையிறங்கியதை புலிகளால் தடைசெய்ய முடியவில்லை.

முல்லைத்தீவு 'ஓயாத அலைகள்' தாக்குதலில் புலிகளின் 'கடற்புலிகள்' முக்கிய பங்கை வகித்துள்ளனர்.

கடற்பரப்பில் கடற்புலிகளின் வெடிகுண்டுப் படகுகள் அலைந்து திரிந்தன. கடற்பரப்பில் புலிகள் ஏற்படுத்திய தடைகள் காரணமாக வான் வழியாக படைகள் தரையிறக்கப்பட்டன.

கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே கடும் சமர் இடம்பெற்றது.

தரைச்சமரைவிட ஆபத்தானது கடற்சமர். பரந்த கடலில் பதுங்கிக்கொள்ளவோ, போரை ஆரம்பித்துவிட்ட பின்னர் சுலபமாக பின்வாங்கிச் செல்லவோ வாய்ப்பிருக்காது.

முல்லைத்தாக்குதலில் 19ம் திகதி மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற கடற்சமரின் சில காட்சிகள் இங்கே விரிகின்றன.

முல்லைத்தீவு முகாமில் புலிகளின் முற்றுகைக்கு உள்ளான படையினருக்கு உதவ விரைந்து செல்கிறது 'ரணவிரு' பீரங்கிக் கடலூர்தி.

கடற்புலிகள் தாக்கலாம்.

கடற்கரும்புலிகள் மோத வரலாம்.

அதனை எதிர்பார்த்து பீரங்கிகள் வாய்திறந்து காத்திருக்கின்றன.

'ரணவிரு' கடலில் செல்ல, அதற்கு மேலாகப் பறந்து ஹெலிகொப்டர் வான்வழிப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தது.

'ரணவிரு' கடற்கரையை நெருங்கத் தொடங்கியது. இன்னமும் கடற்கரையிலிருந்து இரண்டு கடல்மைல் தூரம்தான் .

ஆனால் கடற்படையினர் எதிர்பார்த்தது போலவே கடற்புலிகளது படகுகள் ரணவிருவை குறிவைத்து விரைந்து வருகின்றன.

'ரணவிரு'வின் பீரங்கி முழங்கத் தொடங்குகிறது. ரணவிருவை கடற்புலிகள் நெருங்க முடியாதவாறு வேட்டுக்களால் கப்பலைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்பப் படுகிறது.

கடற்புலிகளின் படகுகளில் இருந்து ரணவிருவை நோக்கி தாக்குதல் நடத்தப் படுகிறது.

ஹெலிக்கொப்டரை நோக்கியும் கடற்புலிகளின் படகில் இருந்து சுடப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் மேலே உயர்ந்து பறக்கத் தொடங்குகிறது. கடற்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருக்கலாம். இருந்தால் ஹெலி சுடப்படலாம். ஹெலிக்கொப்டரை காப்பாற்றுவதற்காக அதனை உயர்த்தி கடற்புலிகளின் இலக்கில் இருந்து விலக்கிக் கொள்கிறார்கள்.

கடற்புலிகளின் படகுகள் ரணவிருவை நான்கு பக்கங்களிலும் சுற்றிவளைக்கின்றன. கடும் சமர் நடந்து கொண்டிருக்கிறது.

கடற்புலிகளின் மத்தியில் இருந்து ஒரு படகு உச்சவேகத்தில் புறப்பட்டு ரணவிருவை நோக்கிப் பாய்கிறது.

அது கடற்கரும்புலிப்படகு.

கண்ணபிரான், பார்த்திபன் என்னும் இரண்டு கடற்கரும்புலிகள் படகில் இருக்கின்றனர்.

கடற் கரும்புலிப் படகு தம்மை நோக்கி



கரும்புலி சுடரொளி

வருவதைக் கண்டுவிட்டனர் கடற்படையினர்.

படகைக் குறிவைத்து சரமாரியாகச் சுடுகின்றனர். ரணவிருவை நெருங்க இன்னமும் ஐந்து மீற்றர்கள்தான் . தாண்டிவிட்டால் மோதிவிடும்.

கடற்படைத் தாக்குதலில் சிக்கிக்கொண்ட கடற்கரும்புலிப்படகு கடலில் வெடித்துச் சிதறுகிறது.

அதேநேரம் மற்றொரு திசையில் இருந்து ரணவிருவை நோக்கிப் பாய்ந்து சென்றது மற்றொரு கடற் கரும்புலிப்படகு.

மிதுபாலன், இன்னிசை (பெண் கடற் கரும்புலி) என்னும் இரண்டு கடற் கரும்புலிகள் அப்படகில் இருக்கின்றனர்.

குறி தப்பவில்லை.



ரணவிருவில் மோதுகிறது கரும்புலிப் படகு. ஆனால்,

குண்டு வெடிக்கவில்லை!

மோதிய படகு முன்பக்கத்தால் உடைந்து போனது. நீர் படகுக்குள் புகுந்தது.

படகை ஓட்டிச் சென்ற மிதுபாலன் படகை மீண்டும் பின்னே இழுத்து பின்வாங்குவது போல பாவனை காட்டிவிட்டு மீண்டும் முன்னோக்கி உச்சவேகத்தில் ரணவிருவை நோக்கி படகைச் செலுத்தி மோதுகிறார்.

பலமாக மோதியது.

ஆனால் இம் முறையும் வெடிக்கவில்லை.

குண்டுத் தயாரிப்பில் ஏற்பட்ட கோளாறு ஏமாற்றிவிட்டது.

கடற்படைத் தாக்குதலில் படகில் இருந்த இன்னிசையும் காயமடைந்தார்.

படகை மீண்டும் பின்நோக்கி இழுக்கிறார் மிதுபாலன். பாதுகாப்பாக பின்வாங்க ஆரம்பிக்கிறது கடற்கரும்புலிப் படகு.

அப்படகை தாக்கி அழித்துவிட கடற்படையினர் கவனம் செலுத்திக்கொண்டிருக்க,

இன்னொருபுறமிருந்து வந்து மோதியது மற்றொரு கடற்கரும்புலிப் படகு.

இம்முறை குறி தவறவில்லை.

ரணவிருவின் இயந்திரப் பகுதி நொருங்கியதால், கடலில் தடுமாறத் தொடங்கியது ரணவிரு.

அதேநேரம் ரணவிருவின் நேர் எதிர்ப்பக்கமாக மற்றுமொரு கடற்கரும்புலிப் படகு உச்சவேகத்தில் வந்து இடித்தது. வெடித்தது.

செல்லப்பிள்ளை, சுடரொளி (பெண்) பதுமன் ஆகிய மூன்று கடற்கரும்புலிகள் பலியானார்கள்.

'ரணவிரு' மூழ்கத் தொடங்க கடற்புலிகளின் படகுகள் வந்து சூழ்ந்து கொள்கின்றன. கப்பலில் இருந்த படையினரை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ரணவிருவை மோதி வெடிக்காத படகுடன் மிதுபாலன், இன்னிசை இருவரும் தப்பிக் கொண்டனர்.

ஐந்து கடற்கரும்புலிகள் பலியானார்கள். கப்பலில் 40க்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். மூழ்கிய கப்பலின் பெறுமதி 10 கோடி ரூபாய்.

24.07.96 அன்று மற்றொரு கடற்சமர்! தரையிறக்கும் கப்பல் ஒன்றை குறிவைத்து விரைந்தது கடற் கரும்புலிப் படகு.

'ரணவிரு' தாக்குதலில் பங்கு கொண்ட கடற்கரும்புலி மிதுபாலன் படகை ஓட்டிச் செல்ல சயந்தன் என்னும் மற்றொரு கடற்கரும்புலியும் படகில் இருந்தார்.

கடற் கரும்புலியை தூரத்தில் இருந்தே கவனித்து தாக்கத் தொடங்கினார்கள் கடற்படையினர்.

தரையிறக்கக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட குண்டுபட்டு வெடித்துச் சிதறியது படகு.

கப்பலில் இருந்து 40 மீட்டர் தூரத்தில் வெடித்துச் சிதறிய படகில் இருந்த மிதுபாலன், சயந்தன் ஆகிய கடற் கரும்புலிகள் பலியானார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமலைச்சம்பவம்: 'கட்டாக்காலி' விஷமக்கும்பலை கட்டிப்போடவேண்டும்!

## ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட தமிழ் அமைப்புக்கள் மீது சோதனை

அலசுவது- இராஜதந்திரி

திருகோணமலைப்பிரதேசம் கடந்த வாரம் செய்திகளில் முக்கிய இடம் பிடித்திருந்தது.

அங்கு இருந்துவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்), தமிழீழ விடுதலைக்கழகம் (டெலோ) ஆகியனவற்றின் அலுவலகங்கள் பொலிஸ், மற்றும் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டிருந்தன.

இந்த நான்கு தமிழ் அரசியல் கட்சிகளும் அண்மைக்காலங்களில் பல்வேறு அரசியல் விடயங்களில் ஒருமித்த கருத்துக் ,கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளன.

இக்கட்சிகளில் உள்ள உறுப்பினர்கள் பலரும் வடக்கு-கிழக்கின் ஆயுதப்போராட்டத்தில் பங்கெடுத்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆயினும் தற்போது இவர்களின் பங்களிப்பு வேறாகும். 'ஒரு கௌரவமான நிரந்தரத்தீர்வைக் காண முடியுமானால் அதற்கு ஏன் ஒத்துழைக்கக்கூடாது?' என்ற நிலையில் அவர்கள் இயங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பு, மற்றும் முக்கிய அடிப்படை அம்சங்களில் இத்தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே ஒருமித்த கருத்தையே கொண்டுமுள்ளன.

திருகோணமலைப் பிரதேசம் வடக்கு-கிழக்கின் முக்கிய கேந்திரப் பிரதேசமாகவே இருந்துவருகின்றது. இதனாலேயே இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாண சபை உருப்பெற்றபோது திருமலை அம்மாகாண சபையின் தலைமையகமாக இடம்பிடித்தது.

திருகோணமலைப் பிரதேசத்தில் இனக்கலகங்கள் அவ்வப்போது மூண்டிருக்கவும் காணப்படுகின்றன. சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் மோசமான முறையில் திருமலைப்பகுதியில் இனக்கலகங்கள் நடந்தன. அப்போது அப்பாவித் தமிழ் மக்களின் வீடுகள், சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. உயிர்ப்பலிகளும் பெருமளவில் இருந்தன.

இதனால் யாழ்ப்பாணத்துக்குக்கூட திருமலையிலிருந்து அகதிகளாக தமிழ் மக்கள் வந்திருந்தனர்.

இதனையடுத்து இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுலானதும் செயலிலிறங்கிய இந்தியப் படையினர், திருமலைப்பிரதேசத்தில் அத்துமீறிய குடியேற்றக்காரர்களை அகற்றினர்.

இந்தியப் படையினரால் அகற்றப்பட்ட அத்துமீறல்காரர்கள் திருமலைக் கோட்டைக்குள்-கோணேஸ்வரர் ஆலயத்தை அண்டிய பிரதேசத்தில் கொட்டில்களைப் போட்டு படையினருடன் சேர்ந்திருந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர்கூட திருகோணமலையில் பதட்டம் நிலவியது. திருக்கோணேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவத்தின்போது, சுவாமி வீதி வலத்தில் வந்தோருடன் படையினர் கைகலப்பில் இறங்கினர். இதில் திருமலை நகரசபைத் தலைவரும் தாக்குதலுக்குள்ளானார்.

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு விடயத்தில் திருகோணமலை முக்கிய கேந்திர ஸ்தானமாக இருந்துவருகின்றது. மறுபுறத்தே ஆட்சியாளர்களும் வடக்கு-கிழக்கு இணைப்பை மழுங்கடிக்க அல்லது தமது பிடியில் திருமலையை வைத்திருக்கும் நோக்கில் அங்கு படைபலத்தை அதிகரித்துள்ளனர். கூடவே திருகோணமலையின் சுற்றாடலில் திட்டமிட்ட குடியேற்றங்களையும் அப்பாவிச் சிங்கள மக்கள் மூலமாக மேற்கொண்டும் வருகின்றனர்.

திருகோணமலைக்கு வடக்காகவும், தெற்காகவும் பல்வேறு பகுதிகளிலும் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெற்றவண்ணமுள்ளன.

இக்குடியேற்றங்களால் வடக்கு-கிழக்குப் பிரதேசம், தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்ற நிலையிலிருந்து அருகிச் செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

1995ம் ஆண்டு, அதாவது கடந்த வருடம் ஏப்ரல் மாதம் எல்.ரி.ரி.ஈ.யினருக்கும், அரசாங்கத்துக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததும் திருகோணமலையிலாகும்.

கடற்படையினரின் இரு கப்பல்கள் திருமலைத் துறைமுகத்தில் வைத்து எல்.ரி.ரி.ஈ.யினரால் மூழ்கடிக்கப்பட்டன.

எனவே எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கும் சந்திரிகா அரசுக்குமிடையேயான உறவு முறிவடைந்த திருமலையிலேயே ஏனைய தமிழ் அமைப்புகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையிலான உறவில் கசப்பு நிலை தோன்றியுள்ளது.

திருகோணமலையில் அவ்வப்போது சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணமே இருந்து வருகின்றன. இன்று நேற்றல்ல, கடந்த பல வருடங்களாகவே திருகோணமலை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவது வழக்கமாகிவிட்டுள்ளது.



எல்.ரி.ரி.ஈ. அமைப்பைச்சேர்ந்த 'பிஸ்டல் அணி' (Pistol Group) இச்சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்றதென்றே பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரங்களில் திருமலையில் காணி அதிகாரி ஒருவரும், பின்னர் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த இரு சம்பவங்களின் எதிரொலியாகவே சென்றவாரம் திருகோணமலையில் இருந்துவரும் ஈ.பி.டி.பி., புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய அரசியல் கட்சிகளின் காரியாலயங்கள் பாதுகாப்புப்படையினரால் முற்றுகையிடப்பட்டுச் சோதனையிடப்பட்டன.

திருமலையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காவலரண்கள், சோதனைச்சாவடிகள் என்பன போடப்பட்டுள்ளபோதிலும் துப்பாக்கி நபர்கள் துணிந்து தமது கைவரிசையைக் காட்டிவரவே செய்கின்றனர்.

எனவே உரியவகையில் இத்துப்பாக்கி நபர்களை மடக்கிப்பிடிக்க முடியாத படையினர், திருமலையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் மீது தமது சந்தேகப் பார்வையைத் திருப்பியுள்ளனர்.

அவ்வாறான சந்தேகத்தின் வெளிப்பாடாகவே திருமலையில் உள்ள தமிழ் அமைப்புக்களது அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளன.

தமிழ் அமைப்புக்கள் மீதான எதிர் நடவடிக்கையில் பொலிசார் மட்டுமல்ல, அவர்களுடன் சேர்ந்து ஒரு கும்பலே ஹர்த்தால், கல்வீச்சு என்பவற்றிலும் குதித்திருந்தது.

தமிழ் அரசியல் கட்சிகளை திருமலையிலிருந்து அகற்ற வேண்டும், என்ற கோஷத்துடன் இனவாத ரீதியிலும் கூச்சலிட்டு இக்கும்பல் கலாட்டா பண்ணியது.

இக்கலகக் கும்பலின் நடவடிக்கை பற்றிக் கருத்து வெளியிட்ட-திருமலையில் இயங்கும் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதி கருத்து வெளியிடுகையில், "அரசியல் கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றிருக்கும் எமக்கே இக்கதியென்றால், அப்பாவித் தமிழ் மக்களின் நிலை எப்படி இருக்குமென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை" என்று தெரிவித்தார்.

விசாரணைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் மேற்கொள்ளலாம். ஆனால் அவர்களின் பின்னால் ஒரு விஷமக் கும்பலும் அணி சேர்ந்திப்பதே ஆச்சரியத்தைத் தருகின்றது.

1983ம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் கொழும்பு நகரில் வெடித்திருந்தபோது விஷமக் கூட்டத்துக்கு படையினர்கூட ஒத்தாசை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் கொடுத்த உற்சாகத்திலேயே கடைகள், வீடுகள், வாகனங்கள் என்பவற்றை கலகக்காரர்கள் தீவைத்தும், உடைத்தெறிந்தும் கும்மாளம் போட்டனர்.

இலங்கையில் எந்தவொரு கலகத்துக்கும், ஆர்ப்பாட்டத்துக்கும் பின்னணியில் விஷமக் கும்பல்களும், சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டியவர்களும் கைகோர்த்து நின்றுள்ளதையே கடந்த கால நிகழ்வுகள் மூலம் அறிய முடிகின்றது.

திருமலையில்கூட கலகக்காரர்கள் இனவாதக்கோஷமிட்டு கல்வீச்சுக்களை நடத்திய வேளையில், பொலிஸாரும் அவர்களோடு சேர்ந்திருந்ததை அவதானிக்க முடிகின்றது.

ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக தாம் அரும்பாடுபட்டு வருவதாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேசி வருகின்றனர்.

ஆனால் பேரினவாதிகளின் அரவணைப்பில் இருக்கும் விஷமக் கும்பல்கள், மற்றும் அக்கும்பல்களுக்கு ஒத்தாசையான சீருடைக்காரர்கள் இருக்கும் வரை இலங்கையில் எந்த வகையிலும் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியாதென்பதே உண்மை.

நல்லதோர் தீர்வுக்கான சூழ்நிலைகளைக் குழப்பிவிட்டு கும்மாளமடிப்பதையே பேரினவாத விஷமக் கும்பல்கள் வழக்கமாகக்கொண்டு வந்துள்ளன.

அரசாங்கம் ஒரு தீர்வை எட்டுவதில் காலந்தாழ்த்தி வருகின்றது. ஆயினும் முன்பு ஆயுதப்போராட்ட அமைப்புகளாக இருந்த தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வதை விடுத்து அரசியல் தீர்வொன்றையே ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றன.

இருந்தபோதிலும் அத்தமிழ் அமைப்புக்களை ஜனநாயக அரசியலில் நம்பிக்கை இழக்கச் செய்யும் விதத்திலேயே திருமலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

விஷமக் கும்பல்கள் திருமலையில் கோஷமிட்டவாறு, தமிழ் அரசியல் கட்சிகள் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு, அல்லது அவற்றின் மீது ஆட்சியாளர்களின் கடும் போக்கு காணப்படுமானால் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது எக்காலத்திலும் எட்டப்படமுடியாததாகவே இருக்கும்.

எனவே சட்டம்- ஒழுங்கைப் போணுவதற்காக அமர்த்தப்பட்டோர் அவற்றைப் பேணுவதை ஆட்சியாளர்கள் உறுதிசெய்யவேண்டும். மறுபுறத்தே 'கட்டாக்காலிகளாக' குரைத்து நிற்கும் விஷமக் கும்பல்களையும் காலந்தாழ்த்தாது 'கட்டிப்போட' வேண்டும்.

இதன்மூலமே எதிர்காலத்தில் எந்தவொரு கௌரவமான தீர்வு முயற்சிகளுக்கும், அல்லது தீர்வுக்கும் வழியமைக்க முடியும். ●

---

## ஸ்பொட் ரிப்போர்ட்

## நகரைக் கலக்கிய துப்பாக்கி வேட்டுக்கள்!

திருமலையில் 9.10.96 அன்று தமிழ் கட்சி அலுவலகங்களில் இராணுவ சோதனை.

ஈபிடிபி., ஈபிஆர்எல்எஃப்., புளொட், ரெலோ அலுவலகங்களே சோதனையிடப் பட்டன.

10.10.96 அன்று ஈபிடிபி. திருமலை அலுவலகம்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நகரே அமளி துமளிப்பட்டது.

ஈபிடிபி. அலுவலகம் அருகேதான் புனித சவேரியார் வித்தியாலயம் இருக்கிறது. அதற்குள் புகுந்த பொலிசார் மாணவர்களை தரையில் படுக்குமாறு கூறிவிட்டு அங்கிருந்து ஈபிடிபி. அலுவலகம் நோக்கி சரமாரியாகச் சுட்டுத் தள்ளினார்கள்.

"ஒருவேளை ஈபிடிபி. அலுவலகத்தில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டால், மாணவர்களை சுட்டுவிட்டு பழியை எம்மீது போட நினைத்தார்களோ தெரிய வில்லை," என்று சொல்கிறார் ஈபிடிபி. பிரமுகர் ஒருவர்.

துப்பாக்கிப் பிரயோகம், கைக்குண்டு வீச்சு என்று நகரமே கிடுகிடுத்துக் கொண்டிருக்க உயர் பொலிஸ் அதிகாரிகளோ, இராணுவத்தினரோ உடனடியாக சம்பவ இடத்திற்கு விரையவில்லை என்பதுதான் ஆச்சரியம்.

திருமலை ஈபிடிபி. அலுவலகம்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படும் செய்தி கொழும்பில் உள்ள ஈபிடிபி. தலைமையகத்திற்குக் கிடைத்து, அங்கிருந்து உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபின்னரே திருமலையில் உள்ள பொலிஸ் உயரதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்தார்கள். பதட்ட நிலையைக் கட்டுப்படுத்தினார்கள்.

**இச் சம்பவத்தின் பின்னணி என்ன?**

பொலிஸ் தரப்பு கூறும் காரணங்களை முதலில் பார்ப்போம்.

10.10.96 அன்று திருமலை நகரில் உள்ள பொலிஸ் காவலரண்மீது மோட்டார்சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அவர்களை துரத்திச் சென்றபோது ஈபிடிபி. அலுவலகத்துக்குள் புகுந்தது மாதிரி இருந்தது, என்கிறது பொலிஸ் தரப்பு.

திருமலை பொலிஸ் உயரதிகாரி சொன்னதாக இலங்கை அரச வானொலி 10.10.96 மாலையில் ஒருசெய்தியை வெளியிட்டது. "திருமலையில் சமீபகாலமாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்து ஊர்வலம் ஒன்று மக்களால் நடத்தப்பட்டது. ஒரு குழுவொன்று அதனைத் தடுக்க முற்பட்டது. அதனால் பதட்டம் ஏற்பட்டது" என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அதேநாள் ரி.என்.எல் தொலைக்காட்சிச் செய்தியில், "ஈபிடிபி. அலுவலகத்தில் இரண்டு பிஸ்டல்கள் கைப்பற்றப்பட்டதாக திருமலைப் பொலிசார் தெரிவித்தனர்" என்று கூறப்பட்டது. ஈபிடிபி. அலுவலகத்தில் இருந்து ஆயுதங்கள் எதுவும் பொலிசாரால் எடுத்துச் செல்லப்படவில்லை. அப்படியிருக்க அவ்வாறான தகவலை ஏன் வெளியிட்டார்கள் என்பது தெரியவில்லை.

பொலிசார் தரப்பில் சொல்லப்படும் காரணங்கள் முன்னுக்குப்பின் முரணாகவும், உண்மை நிலவரத்திற்கு நேர்மாறாகவுமே இருக்கின்றன.

**உண்மையில் நடந்தது என்ன?**

8.10.96 அன்று பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரிடமிருந்து பிஸ்டலையும் அமுக்கிக்கொண்டு சுட்டவர்கள் மாயமாய் மறைந்துவிட்டனர்.

துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த மக்களை 'வெளியே தலைகாட்டக் கூடாது' என்று எச்சரித்துவிட்டே சென்றனராம்.

அதன்பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிசார், ஏன் தமக்கு உடனடியாக அறிவிக்கவில்லை என்று சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள மக்களில் சிலரைத் தாக்கியிருக்கிறார்கள்.

பொலிஸ் காவலரண்களை தாண்டிச் செல்லும் போதும் பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டனர். நகரெங்கும் பீதி பரவியது. மக்கள் வீதிகளில் நடமாடவே அஞ்சினார்கள்.

மறுநாள்- 9.10.96 அன்று காலை 7 மணியளவில் திருமலையில் உள்ள தமிழ் கட்சி அலுவலகங்கள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டன.

9.10.96 அன்றும் பொதுமக்கள் பலர் பொலிசாரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். கலவரம் ஒன்று உருவாகும் போன்ற நிலையே காணப்பட்டது.

10.10.96 அன்று காலையில் திருமலை நகர சந்தையில் சிங்கள மக்கள் பலரை கொண்டுவந்து நிறுத்தினார், பெரும்பான்மை இனக் கட்சிப் பிரமுகர் ஒருவர். பொலிசாரின் ஆசீர்வாதமும் அவர்களுக்கு இருந்தது.

"ஈபிடிபி. அப்பிட்ட எப்பா(எங்களுக்கு வேண்டாம்), புளொட் அப்பிட்ட எப்பா, ரெலோ அப்பிட்ட எப்பா, ஈரோஸ் அப்பிட்ட எப்பா" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டபடி இருந்தனர். ஹர்த்தால் நடத்தப் போவதாகவும் கூறினார்கள்.

இதனால் சந்தைப் பகுதியில் பதட்டச் சூழல் ஏற்பட்டுக் கொண்டிருக்க, திருமலை நகரில் உள்ள ஒரு காவலரண் வழியாக சென்ற ஈபிடிபி. உறுப்பினர் ஒருவர் பொலிசாரால் மறிக்கப்பட்டார். அவர் தனது தேசிய அடையாள அட்டை, ஈபிடிபி. கட்சியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இரண்டையும் காண்பித்திருக்கிறார்.

அதன்பின்னர் அவரைச் செல்லுமாறு ஒரு பொலிஸ்காரர் அனுமதி கொடுத்தார். ஈபிடிபி. உறுப்பினர் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டதும் திடீரென்று அவரைநோக்கி பொலிசார் சுடத் தொடங்கினார்கள். அவர் தமது அலுவலகத்தை நோக்கி ஓடியிருக்கிறார்.

அவர் பின்னாலேயே துரத்திச் சென்ற பொலிசார் அலுவலகத்திற்குள் செல்ல முற்பட்டபோது அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஆயுதம் தாங்கிய ஈபிடிபி. உறுப்பினர் அவர்களைத் தடுத்து நிறுத்தியதோடு கதவையும் மூடிவிட்டார்.

அதன்பின்னர் மேலும் பல பொலிசார் அங்கு விரைந்து வந்தனர். அதைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர்.

**நடந்த சம்பவம் அதுதான்.**

பொலிசார் சொல்வது போல நடத்திருந்தால் துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் மாட்டியிருக்க வேண்டும். ஏனெனில் ஈபிடிபி. அலுவலகத்துக்குள் குறிப்பிட்ட நபர் ஒளிந்திருந்தால் அங்கு சோதனை நடத்திய பொலிசாரால் அவரைக் கைது செய்ய முடிந்திருக்கும். அதுதவிர மோட்டார் சைக்கிளை மறைத்து வைக்கவும் முடியாது. சுலபமாக மாட்டுப்பட்டிருப்பார்கள்.

திருமலையில் தமது ராஜாங்கம் நடக்கிறது. தமிழ் கட்சிகள் அதில் குறுக்கிடக்கூடாது என்ற செய்தியை பொலிசாரும், இராணுவத்தினரும் வெளிப்படுத்த விரும்பியதன் வெளிப்பாடே இச் சம்பவமாகும்.

உண்மையில் இத்தகைய நடவடிக்கை மூலமாக அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளின் முகத்தில் கரி பூசப்பட்டிருக்கிறது.

"அரசாங்கத்தை நம்பியவர்களின் கதியைப் பாருங்கள்" என்று புலிகள் சொல்வதற்கும் ஒரு நல்ல உதாரணம் கிடைத்திருக்கிறது.

"தமிழ் கட்சிகளுக்கே இந்த நிலையென்றால் நம் கதி என்ன?" என்று திருமலை மக்களும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

'தமிழ்க் கட்சி ஒன்றின் மீதான நடவடிக்கைக்கே காரணங்களை ஜோடிக்கும்போது சாதாரண தமிழ் மக்களின் கைதுகள் விடயத்தில் கூறப்படும் காரணங்கள் எப்படியிருக்கும்?' என்று அச்சப்படவும் வேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தருவது 14 ரசிகன்

**சென்ற வாரம்**

**பூலானின் பெரியப்பா மகன் மையாதீன், அவளை மரத்தில் கட்டி வைத்து பொலிசில் ஒப்படைக்கிறான். பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் பூலானை தனது இச்சைக்குப் பலியாக்க முற்படுகிறார். பூலான் மறுக்கிறாள். அவளை பெல்ட்டால் விளாசிவிட்டு சிறை அறையில் போட்டுப் பூட்டுகிறார்கள்.**

இனி...

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

என்னைத் தனியான சிறைக் கூண்டுக்குள் போட்டுப் பூட்டிவிட்டு பொலிஸ்காரர்கள் போய்விட்டார்கள்.

மயங்கியதுபோல நடித்ததால் தப்பித்தேன் என்று நினைத்துக்கொண்டேன். மயங்கியதுபோல நடிக்கும் யோசனை எனக்கு வந்ததை நினைத்து என்னை நானே வியந்துகொண்டேன்.

சிறைக்கூண்டாக இருந்த அறை மிகவும் சின்னதாக இருந்தது. ஒரே அழுக்காக இருந்தது. சுவரில் ஆங்காங்கே சிவப்பு சிவப்பான புள்ளிகள் தெரிந்தன. இரத்தக்கறைகளாக இருக்கவேண்டும். கெட்டவாசனை மூக்கில் குப்பென்று அடித்தது. ஒரே குமட்டல்.

எனக்கு நாவெல்லாம் வரண்டுபோய் தாகமாக இருந்தது. பெல்ட் அடிவாங்கிய போது இருந்ததைவிட இப்போதுதான் அடிபட்ட இடமெல்லாம் பயங்கரமாக வலித்தது. தண்ணீர் குடிக்கவேண்டும் போல இருந்தாலும், கேட்டால் நான் மயக்கத்தில் இருந்து மீண்டுவிட்டேன் என்று மீண்டும் என்மீது பாய்வார்கள். அதனால் தாகத்தோடு தவித்துக் கொண்டிருந்தேன்.

நான் இருந்த கூண்டுக்கருகே பூட்ஸ் சத்தங்கள் கேட்டபோதெல்லாம் கண்களை மூடிக்கொண்டு கிடந்தேன்.

நேரம் செல்லச் செல்ல தாகத்தோடு பசியும் சேர்ந்துகொண்டது.

நாற்றம் ஒருபக்கம், தாகமும் பசியும் ஒருபக்கம், பேதாக்குறைக்கு கொசுக்கள் வேறு பதம் பார்த்துக்கொண்டிருந்தன.

'நான் என்ன செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் தண்டனை?' எப்படித்தான் மனதைக் கல்லாக்கிக் கொண்டாலும்



பூலான்

நினைக்க, நினைக்க அழுகையாக வந்தது.

இப்போது வீட்டில் அம்மா என்ன செய்து கொண்டிருப்பாள்? ஒரு மூலையில் அமர்ந்து அழுது அழுது மூக்கைச் சிந்திக் கொண்டிருப்பாள். தம்பி சிவநாராயணன் அம்மாவின் முகத்தையே கவலையோடு பார்த்துக் கொண்டிருப்பான். அப்பா ஒரு சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு சுவரையே பார்த்துக்கொண்டு வாழ்க்கையை நொந்துகொண்டு புகை புகையாக விட்டுக்கொண்டிருப்பார்.

என்னையறியாமலேயே என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. வாயில்பட்டு உப்புக் கரித்தது.

எல்லோரும் தாகத்துக்கு தண்ணீர் குடிப்பார்கள். நான் கண்ணீர் குடிக்கிறேன். அழுவதா? சிரிப்பதா?

அழுதால் சிரிப்பார்கள்? சிரித்தால் அடிப்பார்கள். நாங்கள் ஏழைகள்.

எங்கள் கிராமத்து கோவிலில் மகாபாரதக் கதை சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பாஞ்சாலியின் சேலையை துச்சாதனன் பிடித்து இழு இழுவென்று இழுத்தானாம். பாஞ்சாலி கண்ணா என்று குரல் கொடுத்தானாம். இழுக்க இழுக்க சேலை வந்து எங்கள் கிராமத்து மலைகள் போல குவிந்து கொண்டே இருந்ததாம். இழுத்தவனுக்கு கைகள் ஓய்ந்து போனதாம். கதை கேட்டபோது எனக்கு ஆச்சரியமான ஆச்சரியம். இப்போது நினைத்தால் கதை சொன்னவர் மேல் கோபம் கோபமாக வருகிறது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்கும் என்று தெரிந்தது. வெளியே பொலிசாரின் ஓயாத பூட்ஸ் சத்தங்கள் அடங்கியிருந்தன. எனக்கு தூக்கம் வரவில்லை. கண்களை இறுக மூடினாலும் தூக்கம் வரமறுத்தது.

கூண்டருகே யாருமில்லை. பொலிசார் தூங்கியிருப்பார்கள். சற்று நேரம் எழுந்து இருக்கலாம் என்று எழ முற்பட்டபோது பூட்ஸ் கால் சத்தம் கேட்டது. அப்படியே படுத்துக்கொண்டேன்.

பூட்ஸ் சத்தம் என் கூண்டருகே வந்து ஓய்ந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டு காதுகளைத் திறந்து வைத்திருந்தேன்.

என் கூண்டு திறக்கப்படுகிறது.

பூட்ஸ் காலடிகள் என்னை நோக்கி வருகின்றன.

இந்த நேரத்தில் ஏன் வருகிறார்கள்? நான் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டேன்.

வந்தவன் பக்கவாட்டில் என் விலாவில் பூட்ஸ் காலால் தட்டினான். அவன் அருகே வந்ததும் வெளிப்பட்ட கெட்ட வாசனை எனக்கு முன்பே பழக்கமானதுதான்.

அந்த இன்ஸ்பெக்டரின் உடம்பிலிருந்து வந்த வாசனைதான் அது. அதிலிருந்தே இப்போது வந்திருப்பவனும் அவன்தான் என்பது தெரிந்துவிட்டது.

"பூலான் அடியே பூலான்!" என்று தன் முரட்டுக்குரலால் அழைத்தான். நான் பதில் இல்லாமல் கிடந்தேன்.

என் முகத்தருகே அவன்விட்ட மூச்சுக் காற்று பட்டது. வயிற்றைக் குமட்டியது. முன்பைவிட சாராய நெடி அதிகமாக அவன் மூச்சில் வெளிப்பட்டது. நன்றாக குடித்துவிட்டு வந்திருப்பான்.

நிச்சயமாக கெட்ட நோக்கத்துடன்தான் வந்திருக்கிறான் கழுதை.

என் நெற்றியில் அவன் முத்தமிட்டான். "கண்ணைத் திறவடி சிறுக்கி" என்று சொல்லிக்கொண்டே என் சேலையை இழுத்து விலக்க தொடங்கினான்.

கண்களை திறந்து, மயக்கமாய் கிடக்கும் நடிப்பைத் துறந்துவிட்டு கூச்சல் போடுவதா? அல்லது மயக்கமானதுபோலவே தொடர்ந்து நடித்தால் இவன் விட்டுவிட்டுப் போய்விடுவானா? ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தேன்.

எத்தனை நேரம்தான் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொள்வது? இனிமேலும் நடிக்க முடியாது என்று எனக்குத் தெரிந்துபோனது.

அவன் என் கழுத்துக்குக்கீழ தன் முகத்தை வைத்து புரட்டிக்கொண்டிருந்தான். ஒரு புழு உடம்பெங்கும் ஊர்வதுபோல இருந்தது. தனது ஒரு கரத்தால் என் கால்களை அழுக்கிக் கொண்டிருந்தான். காலை மூடியிருந்த துணியை மேல் நோக்கி நகர்த்த ஆரம்பித்தான்.

சட்டென்று உதறியபடி எழுந்து "அய்யோ அய்யோ பிசாசு பிசாசு" என்று பலம் கொண்டமட்டும் குரல் கொடுத்துக் கத்தினேன்.

நான் எழுந்த வேகத்தில் தடுமாறி அவன் பக்கவாட்டில் சாய்ந்தான்.

காவலுக்கு இருந்த பொலிஸ்காரர் இருவர் ஓடிவருவது தெரிந்தது. நான் என் சேலையை வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து சுவரோடு சுவராய் ஒட்டிக்கொண்டு நின்றேன்.

இன்ஸ்பெக்டர் எழுந்து கொண்டான். பொலிஸ்காரர்களையும் என்னையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு தன் காவிப் பற்கள் தெரிய ஒரு இளிப்பு இளித்தான். சரியாக நிற்க முடியாமல் தடுமாறினான். மூதேவி, மூக்கு முட்டக் குடித்திருப்பான்.

"அடி... அடியே! உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறார்கள் பார்? என்னடா பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? கடமை.. கடமையைச் செய்யுங்கடா," என்றான். அவனால் ஒழுங்காகப் பேசவே முடியவில்லை.

பொலிஸ்காரர்கள் இருவரும் என்னை நோக்கி வந்தார்கள். ஒருத்தன் கேட்டான், "பயந்துபோனாயா கண்ணு? பயப்படாதே. இன்ஸ்பெக்டர் ரொம்ப நல்லவர். ரொம்ப நல்லவிதமாகத்தான் எல்லாமே செய்வார்!"

சட்டென்று ஆளுக்கொருபக்கமாக என் கைகளைப் பிடித்துக்கொண்டார்கள்.

"இங்கே பார் குட்டி, இன்ஸ்பெக்டர் சொல்லுறபடியெல்லாம் நடந்துகொள். இன்ஸ்பெக்டர் மட்டும் மனசு வைத்தார் என்றால் நீதான் மகாராணி. கிராமத்தையே ஒரு ஆட்டு ஆட்டலாம்."

"விடுங்கடா கையை!" என்று திமிறினேன். இரண்டுபேரும் இளித்தார்கள்.

"இதமா பதமா நடந்துகொள்ளலாம் என்றால் கேட்கமாட்டாய் என்கிறாயே கண்ணு! ரொம்ப சின்னப் பொண்ணு நீ. சீராவும் சிறப்பாகவும் கொண்டாடலாம் என்று பார்த்தால் அடம்பிடிக்கிறியே கண்ணு!" இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டே என்னிடம் வந்து சேலையை உருவினான். உருவிவிட்டு முறைத்து முறைத்துப் பார்த்தான்.

என் வாயை இறுக்கமாகப் பொத்திக் கொண்டான் ஒருத்தன். என்னால் கூச்சல் போடவும் முடியாமல் போய்விட்டது.

"மேயாத நிலம். ஆனாலும் பக்குவமாய்த்தான் இருக்கு! ஏண்டி குட்டி! உன் புருசன் உன்னைத் தொடவே நீ விடவில்லையாமே?"

அவன் முகத்தில் காறித்துப்ப வேண்டும் போல ஆத்திரம் உச்சியில் ஏறியது. முடியவில்லை.

அப்படியே என்னை தரையோடு சாய்த்து அமுக்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

என் வாய்க்குள் என் சேலையைத் திணித்து என்னைக் கத்தவிடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

என் அருகே வந்து குனிந்த இன்ஸ்பெக்டரை எனது காலால் எட்டி உதைத்தேன். அவனது நெஞ்சில் பட்டது.

"உதைக்கிறாளடா வேசிமகள். கால்களைப் பிடித்து கட்டுங்கடா!" என்று கத்திக்கொண்டே என் விலாவில் பலமாக உதைத்தான். உயிரே போய்விடும்போல இருந்தது.

பொலிஸ்காரர்களில் ஒருவன் என் சேலையில் ஒரு பாதியைக் கிழித்து என் கால்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டினான்.

இன்ஸ்பெக்டர் இப்போது திருப்தியாகச் சிரித்தான். பொலிஸ்காரர்கள் இருவரும் என் கைகளை தரையோடு சேர்த்து அழுத்திப் பிடித்தபடி இன்ஸ்பெக்டரின் அடுத்த செய்கைக்காகக் காத்திருந்தனர்.

வெட்கங்கெட்ட பயல். பொலிஸ்காரர்கள் முன்பாகவே தன் உடைகளை சுத்தமாகக் களைந்து போட்டான். இளித்தபடியே வந்தான்.

என்மீது குனிந்து பரவினான். எனக்கு மூச்சு முட்டியது. வாய்க்குள் துணி. மூக்கு அடைப்பது போலிருந்தது.

அந்தக் கழுதை- வேலியில்லாத காணிக்குள் புகுந்த எருமைமாதிரி- என்னை சேதப்படுத்த ஆரம்பித்தான்.


கத்திக்குத்துபட்டதுபோல அடிவயிற்றில் வலித்தது. அவன் மூச்சிறைத்தபடி என் முகமருகே குனிந்தான்.

இரண்டு கழுதைகள் கண்கொட்டாமல் இரசிக்க, ஒரு எருமை என்னை மேய்ந்து முடித்தது.

செத்துவிடலாம்போல இருந்தது. பொலிஸ் நிலையத்தில் என்னை வதைப்பார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். என்னைத் தின்று முடிப்பார்கள் என்று நினைக்கவேயில்லை.

அவன் எழுந்து உடைகளை மாட்டிக் கொண்டு, பொலிஸ்காரர் இருவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனான்.

எனக்கு கண்கள் இருண்டுகொண்டு வந்தன. பொலிஸ்காரர்கள் இருவரும் இன்ஸ்பெக்டரின் தலைமறைந்ததும் ஏதோ சொல்லிச் சிரித்தார்கள். எனக்கு காதுகள் இரண்டி-



லும் பஞ்சடைந்ததுபோல இருந்தது. அதனால் அவர்கள் கிட்ட இருந்து பேசியதுகூட சரியாகக் கேட்கவில்லை. பிடித்திருந்த என் கைகளை அவர்கள் விட்டனர். ஆனால் என்னால் கைகளை அசைக்க முடியவில்லை.

கைகளைமட்டும் அசைக்க முடிந்திருந்தால் அவர்களில் ஒருவனது கழுத்தையாவது பிடித்து நெரித்திருப்பேன்.

பொலிஸ்காரர்களில் ஒருவன் எழுந்து நின்று தன் உடைகளைக் களைய ஆரம்பித்தான். வந்து என்மேல் பரவ ஆயத்தமானான்.

என்னால் அதற்குமேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நான் மயக்கமாகிவிட்டேன்.

காலையில் கண்விழித்தபோது மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. அதனை என் வாழ்க்கையில் மறக்க முடியாது. மறக்கவும் கூடாது.

**(தொடர்ந்து வரும்)**

# "அம்மா! உன்னோடு இருக்கணும் என்று ஆசையா இருக்கம்மா"

சில்க் சுமிதாவின் மரணச்செய்தியைக் கேள்விப்பட்ட ரசிகர்கள் யாரும் 'உயிர் சிலுக்குக்கு உடல்மண்ணுக்கு' என்று உயிரை மாய்த்துக்கொள்ளாதது ஆறுதலான விஷயம்.

சில்க் சுமிதா கடித்துவிட்டு கொடுத்த ஆப்பிள் பத்துவருடங்களுக்கு முன்பாக ஏலத்தில் 300 ரூபாய்க்கு விலை போனது.

மரணமாகும்வரை சில்க் சுமிதாவின் மார்க்கெட் குறையாவிட்டாலும், அவரது கவர்ச்சிமீதான வெறித்தனமான ஈடுபாடு சற்றுக் குறைந்துதான் போயிருந்தது.

பங்களாதேஷில் சல்மான்ஷா என்னும் நடிகர் திடீரென்று தற்கொலை செய்து கொண்டார். செய்தி கேட்டதும் மளமளவென்று நாலு தீவிர ரசிகர்கள் தங்கள் உயிரைமாய்த்துக் கொண்டார்கள்.

தற்கொலைக்கு காரணம் காதல் விவகாரம்தான். கல்யாணமான சல்மான்ஷா வேறொரு பெண்ணையும் காதலித்தார். மனைவி சீறியெழுந்தார். மனம் உடைந்து போன சல்மான்ஷா தற்கொலை செய்து கொண்டு எல்லோருக்கும் 'குட்பை' சொல்லி விட்டார்.

சல்மான்ஷா சாவதற்கு முன்னர் நடித்த கடைசிக்காட்சி என்ன தெரியுமா? நீதிக்காகப் போராடி தூக்கில் தொங்கும் காட்சி தான்.

அதுபோல சில்க் சுமிதா கடைசியாக நடித்த காட்சியும் மரணமாகும் காட்சிதான்.

என்னமாதிரியான பொருத்தங்கள் பாருங்கள்.

சில்க் சுமிதாவுக்கு ஒரு குணம் இருந்தது. பகிரங்க விழாக்களில் பெரும் புள்ளிகள் அவரோடு வலியப்போய் வழிந்து வழிந்து பேசிக்கொண்டிருப்பதை விரும்புவாராம்.

ஒரு விழாவில் சில்க்கின் கையைப் பிடித்து அவரைப் பக்குவமாக மேடையேற்றி விட்டாராம் ஒரு பிரபல நடிகர். அந்த நடிகர் பலபேர் முன்பாகவே அவ்வாறு செய்ததை சில்க் சுமிதாவும் பெருமையாகவே நினைத்தாராம். இத் தகவலை சொல்லியிருப்பவர் சுஹாசினி மணிரத்னம். பிரபல நடிகரின் பெயரை மட்டும் சொல்ல மறுத்துவிட்டார். சுஹாசினி.

சில்க் சுமிதாவுக்கு மதுப்பழக்கம் இருந்தது. சிகரெட்டும் புகைப்பார். சில்க் சுமிதாவின் காதலர் ராதா கிருஷ்ணன் மூலமாக போதை மருந்து பாவிக்கும் பழக்கமும் ஏற்பட்டதாம்.

சில்க் சுமிதாவின் முக்கிய இரகசியம் ஏதோ ஒன்று இராமகிருஷ்ணன் கையில் சிக்கியிருக்க வேண்டும். அந்தரங்கமான ஏதாவது ஒரு சம்பவத்தை இரகசியமாக கண்காணித்தோ படம்பிடித்தோ வைத்துக்கூட மிரட்டியிருக்கலாம். அதனால்தான் அவர்களின் பிடியில் இருந்து சுமிதாவால் விடுபட முடியவில்லை என்னும் சந்தேகங்கள் கிளம்பியுள்ளன.

சில்க் சுமிதாவின் தாயார் நரசம்மா நிருபர்களுக்கு பேட்டியளித்துள்ளார். அவரது பேட்டியிலிருந்து சுமிதா தனது காதலரின் கட்டுப்பாட்டில் இருந்து மீளமுடியாமல் இருந்தார் என்பது புலனாகின்றது.

தனது தாயாரைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதாராம் சில்க் சுமிதா. "அம்மா உன் கூடவே இருக்கணும் என்று ஆசையா இருக்கம்மா" என்று



சுமிதாவும் தாயாரும்

அழுதாராம் சில்க் சுமிதா.

சிலநாட்கள் மகளுடன் தங்கியிருந்தார் நரசம்மா. சுமிதாவின் காதலர் கொடுத்த தொல்லை பொறுக்காமல் நரசம்மா சொந்த ஊருக்கே திரும்பிச் சென்றாராம்.

சுமிதாவுக்கு ஒரு வளர்ப்புத்தாய் இருக்கிறார். பெயர் அன்னபூரணி. சுமிதாவை சினிமாவில் நடிக்கவைத்ததே அவர்தான்.

அன்னபூரணியம்மாவையும் சுமிதாவை சந்திக்கவிடாமல் துரத்தியடித்தவர் ராதாகிருஷ்ணன்தானாம்.

ராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரை சுமிதா தங்கமுட்டையிடும் வாத்து. வேறு யாருமே அதன் முட்டைகளை எடுத்துக் கொள்ளாமல் ஒரே கூடைக்குள் விழுமாறு காவல் காத்தார் ராதாகிருஷ்ணன்.

சுமிதாவின் மரணத்தின் பின்னர் ராதாகிருஷ்ணன் "அவள் சொத்துக்களே எனக்கு வேண்டாம். அவள் பெயரில் சமூகத் தொண்டு செய்யப்போகிறேன்" என்று நீலிக் கண்ணீர் வடித்திருந்தார்.

சுமிதா மரணம் தற்கொலைதான் என்று பொலிசார் அறிவித்த பின்னர், சுமிதாவின் சொத்துக்கள் யாவும் தனக்கே சேரவேண்டும் என்று இப்போது சுமிதா குடும்பத்தினருடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறார்.

# வசமாக மாட்டினார் ஜூனியர் கென்னடி

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் கென்னடி. அமெரிக்க ஜனாதிபதிகளில் காதல் மன்னன் என்று பெயரெடுத்தவர் அவர்தான்.

இப்போது கென்னடியின் மகன் ஜூனியர் கென்னடி தந்தையின் இடத்தை கச்சிதமாக நிரப்பிக்கொண்டிருக்கிறார்.

காதல் விவகாரங்களில் படுகில்லாடி. அடிக்கடி காதலிகளை சட்டை மாற்றுவது போல மாற்றிக்கொண்டே இருந்தவர் ஜூனியர் கென்னடி. அவர் சமீபத்தில் வசமாக மாட்டிக்கொண்டார். அதாகப்பட்டது அவருக்கு திருமணம் நடந்திருக்கிறது.

மணமகளின் பெயர் கரோலின் பெசட். பொஸ்டன் பல்கலைக்கழகப் பட்டதாரி.



நடிகை ஹான்னாவுடன் ஜூனியர் கென்னடி

பெசட்டும் ஜூனியர் கென்னடியின் காதல் வலையில் வீழ்ந்தவர்தான். பெசட்டைக் கண்டு காதல்வசப்பட முன்னர் ஹான்னா என்னும் நடிகையைக் காதலித்துக் கொண்டிருந்தார் ஜூனியர் கென்னடி.

நடிகை ஹான்னாவும் ஜூனியர் கென்னடியும் தனியான ஒரு தீவுக்குச் சென்று ஜாலியாக இருந்தெல்லாம் பொழுதைக் கழித்தார்கள். அந்தத் தீவில் இருவரும் நடத்திய தீவிர காதல் ஆராய்ச்சி பற்றிய ஏகப்பட்ட கிசுகிசுக்கள் பத்திரிகைகளில் வெளியாகின.

இருவரும் அவற்றைப் பற்றிய கவலையே இல்லாமல் சுற்றினார்கள். ஒருநாள் பூங்கா ஒன்றில் ஹான்னாவுக்காக காத்திருந்தார் ஜூனியர் கென்னடி. காத்திருந்த நேரத்தில் கண்ணில்பட்டார் ஒரு கட்டழகி. அவர்தான் கரோலின் பெசட். கண்டதுமே மனதைப் பறிகொடுத்துவிட்டார் ஜூனியர். பெசட்டும் அப்படித்தான். ஜூனியர் கென்னடி மீது பெசட்டும் கண்டதும் காதலாகி பைத்தியமாகி விட்டார்.



பேசட்டும் ஜூனியரும்

பெசட்டை காதலிக்க ஆரம்பித்ததும் நடிகையை ஓரம்கட்டிவிட்டார் ஜூனியர். இருவரும் தெய்வீகக் காதலர்களாகிவிட்டனர்.

ஜூனியர் கென்னடியைச் சந்திக்க முன்பாக மைக்கேல் பெர்ஜின் என்பவரைக் காதலித்துக் கொண்டிருந்தார் பெசட். ஜூனியரை பெசட் காதலிப்பது தெரிந்ததும் மைக்கேல் ஒதுங்கிக் கொண்டார்.

நடிகை ஹான்னா உட்பட பல பெண்களுடன் கும்மாளமிட்டுத் திரிந்த ஜூனியர் கென்னடி பெசட்டுக்கு அல்வா கொடுக்க முடியாமல் மாட்டிக்கொண்டார்.

கடந்த செப்டம்பர் மாதம் 21ம் திகதி 30 வயதான பெசட்டை 35 வயதான ஜூனியர் கென்னடி திருமணம் செய்து கொண்டார். அமெரிக்காவில் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள ஒரு தீவில் திருமணம் நடைபெற்றது. நண்பர்கள் 40 பேர் மட்டுமே கலந்துகொள்ள மிக எளிமையாக திருமணம் நடந்து முடிந்தது.

ஜூனியர் கென்னடியின் தாயார் ஜாக்குலினும் காதல் விவகாரங்களில் கொடிகட்டிப் பறந்தவர். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் தப்பாமல் பிறந்த பிள்ளை ஜூனியர் கென்னடி.

திருமணத்தின்பின்னரும் கென்னடி விளையாட்டுப் பையனாகத்தான் இருப்பாரோ தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## அண்ணா, அண்ணா மூத்தண்ணா!



இந்த ஆதிகால மனிதனை எங்கிருந்து பிடித்து வந்தார்கள்? என்று வியப்பாக இருக்கிறதல்லவா? வியப்பை உதறிப் போட்டுவிடுங்கள். இதுமனித உருவம் அல்ல. அதையும் தாண்டி இறுக்கமானது. பலமானது. ஆயுள் கெட்டியானது. என்ன குழப்பமாக இருக்கிறதா? இது ஒரு சிலை. ஆனால் மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்ட சிலை. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. அதுதான் ஜெர்மனியில் உள்ள 'மேட்மன்' அருங்காட்சியகத்தில் இதனைப் பத்திரமாக பாராமரித்து வருகிறார்கள். ஆதிகாலமனிதனுக்கு உடலில் மொசு மொசுவென்று முடி இருக்குமாம். இந்த சிலையிலும் முடியும் தத்ரூபமாக காணப்படுகிறது.

இது தவிர பல கோடி ஆண்டுகளாக வாழ்ந்த வேறு பல உயிரினங்களின் மொடல் சிலைகளும் 'மேட்மன்' அருங்காட்சியகத்தில் இருக்கின்றன.

## ஓஹோ என்று வளர்ந்தவர்



பாகிஸ்தானைச் சேர்ந்த முகமட் ஆலம் சன்னாதான் உலகில் உயரமான மனிதர். 7 அடி 7 1/4 அங்குலம்.

உலகில் மிக உயரமான மனிதர் ரொபேர்ட் வட்லோ. அமெரிக்காவைச்சேர்ந்தவர். அவரது உயரம் 8 அடி 11 1/10 அங்குலம். அவர் இப்போது உயிரோடு இல்லை. அதனால் தற்போதுள்ளவர்களில் முகமட் ஆலம் சன்னாதான் உயரமானவர் என்று கின்னஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கின்னஸின் பார்வையில் படாத ஒரு மனிதரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது பெயர் பிலிப் பெரோலின். இவரது உயரம் 8 அடி 9 அங்குலம். எனினும் இவரால் எழுந்து நடக்க முடியாது. முதகிலும் கூன் விழுந்திருக்கிறது. அதனால் உயரமான மனிதர் என்று கின்னஸில் இவரால் இடம்பிடிக்க முடியவில்லை.

5 அடி 4 அங்குலம் கொண்ட மிகப்பெரிய சக்கர நாற்காலியில்தான் பிலிப்பெரோல் நடமாடுகிறார். தன்னைப் போல உடல் ஊனமுற்றோருக்கு ஆறுதல் சொல்லி நம்பிக்கையூட்டும் சேவையில் ஈடுபட்டுவருகிறார்.

கழுத்தில் ஏற்பட்ட பாதிப்பால் உடல் ஊனமுற்ற சிறுமி ஒருவருக்கு பெரோல் ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறார் பாருங்கள்.

பெரோலுக்கு 64 வயது.

போர்ட்டோரிகோ என்னும் நாட்டைச் சேர்ந்தவர். இவரது எடை 478 இறாத்தல். யப்பாடி!



## மணியான மினி



முன்பெல்லாம் ஹயாக 4 பேர் அமர்ந்து செல்லக்கூடிய கார்களுக்குத்தான் மரியாதை. "கப்பல் மாதிரி கார் வைத்திருக்கிறானப்பா" என்று சொல்வதுண்டு. (கொஞ்சம் பொறாமை, கொஞ்சம் வியப்பு) இப்போதெல்லாம் குட்டிக் கார்களுக்குத்தான் செமத்தியான மரியாதை. கப்பல் மாதிரியான கார்களை நிறுத்திவைக்கவும் இடம் தேட வேண்டிய காலமல்லவா இது. எனவே அடக்கமான கார்களுக்கு அமோக மரியாதை.

படத்தில் இருக்கும் குட்டிக்கார்(மினிக்கார்) புதிய தயாரிப்பு! 'சுமார்ட்' என்று பெயர்சூட்டியுள்ளனர். மெர்சிடெஸ்-சுவாட்ச் நிறுவனங்களின் கூட்டுத் தயாரிப்பு. அடக்கமாய் தெரிந்தாலும் இயங்க ஆரம்பித்தால் படு வேகம். இன்னமும் சந்தைக்கு வரவில்லை. பரீட்சார்த்தமாக ஒரு காரை வெள்ளோட்டம் விட்டுப் பார்த்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு சந்தைக்கு வந்துவிடும்.

## மலைக்க வைக்கும் விலை



பயமாக இருக்கிறதா? நயமான நகம்தான் இது. பயப்படாதீர்கள். உலகில் மிக நீளமாக நகங்களை வளர்த்து சாதனை படைத்தவர் சிறீதர் சில்லால் என்பது முரசு வாசகர்களுக்கு தெரிந்த செய்தி. இந்தியரான சிறீதர் சில்லாலின் நகங்களை விலைக்கு வாங்க பலர் போட்டி போடுவதாக முன்னரே முரசு தகவல் வெளியிட்டிருந்தது அல்லவா.

நகங்களை விற்பனைக்கு விட இப்போது முன்வந்துவிட்டார் சிறீதர் சில்லால். இந்த நகங்களுக்கு அவர் விதித்துள்ள விலையைக் கேட்டால் தலைசுற்றும். இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள். நம்மூர் மதிப்பில் கிட்டத்தட்ட ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய்கள்.

ஆசையாக வாங்குவதற்கு முன்வந்த பலர் விலையைக் கேட்டதும் தலைமறைவாகிவிட்டார்கள்.

ஆனால் சிறீதர் சில்லாலுக்கு அதனால் லாபம்தான். நீண்டநகம் வளர்த்து கின்னஸில் இடம்பிடித்தது ஒரு பக்கமிருக்க, தனது நகங்களுக்கு மிக பிரமாண்டமான விலை விதித்திருப்பவர் என்னும் ஆச்சரியத் தகவலுக்காகவும் கின்னஸில் இவரது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

கொஞ்சம் நியாயமாக விலை சொல்லக்கூடாதா என்றால், தான் நகங்களை வளர்க்கப் பட்ட பாடு, காதலித்த பெண்கூட தன் நகத்தைக் கண்டுவிட்டு நைசாக நழுவியது என்றெல்லாம் ஏராளான சோகக் கதைகளை அடுக்குகிறார். யார் வாங்குவாரோ?



## தகவல் பெட்டி

## சலாம் போடு குனிந்து

தோற்றத்தில் குள்ளம். பதவியோ உயரம். அதற்கான காரணம் உள்ளத்தில் மகா உயரமான நம்பிக்கை. இவரது பெயர்: ஈஸ்வரன். தமிழ்நாட்டுக்காரர். மதுரையில் உள்ள யூனியன் வங்கிக் கிளையில் உதவி மனேஜர் உத்தியோகம்.

உயரத்தைப் பார்த்து எல்லோரும் கேலி செய்ய, அதுவே ஈஸ்வரனுக்கு மன உறுதியை நம் நாட்டு விலைவாசிபோல எக்கச்சக்கமாக உயர்த்திவிட்டது. தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறி உயர்ந்த பதவியை பிடித்துவிட்டார்.

ஈஸ்வரன் டக்கடா என்று நடந்து வந்தால் வங்கியில் உள்ளவர்கள் சூப்பராகக் குனிந்து சலாம் போடுகிறார்கள். உதவி மனேஜர் அல்லவா. ஒரு 'ஜம்ப்' செய்து தனது நாற்காலியில் ஏறி தேனிபோல் சுறு சுறுப்பாக வேலை செய்கிறார்.





ஈஸ்வரனுக்கு நல்ல உத்தியோகம் இருந்தாலும், திருமண யோகம் மட்டும் வேண்டாம் என்கிறார்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் பெண் மற்றவர்களின் கேலிப்பேச்சுக்கு உள்ளாகி மனம் நோக வேண்டிவருமே. அதனால் திருமணமே வேண்டாம் என்று பிடிவாதமாக இருக்கிறார் மனிதர்.

## வீட்டுக்குள் விமானம்



வளர்ந்துவரும் விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் கைக்கெட்டா திருந்த சமாச்சாரங்களை கையருகே கொண்டு வந்து நிறுத்துகின்றன.

படத்தில் இருப்பது புதிய ரக குட்டிவிமானம். காரை நிறுத்தக்கூட ஒரு பார்க்கிங் தேவை. இதற்கு அதுவும் தேவையில்லை. பாவனை முடிந்தவுடன் பாகம்பாகமாய் பிரித்து கைகளில் தூக்கிச் செல்லலாம். இதன் மொத்த எடையே 48 கிலோதான்.

இதன் உடம்பு சூப்பர் பிளாஸ்டிக் அலுமினியத்தால் செய்யப்பட்டது. எனினும் வலிமையானது. இறக்கைகளின் நீளம் 28 அடி. மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கக் கூடியது. ஒரு லீட்டர் பெற்றோலில் மூன்று கிலோ மீட்டர் தூரம் செல்லக் கூடியது. இரண்டுபேர் இருந்து பயணம் செய்யலாம்.

பயணம் முடிந்ததும் களவு போகாமல் இருக்க வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிடலாம்.


படிப்பகம்

## சுமிதா நடித்த காட்சி!

# மொடல் அழகி மர்ம மரணம்

அவளது பெயர் சந்தியா. கட்டழகுச் சிங்காரி. விளம்பரப் படங்களுக்கு மொடலிங் செய்வதுதான் அவள் தொழில். விளம்பர நிறுவனம் ஒன்றின் அதிபருக்கு சந்தியாமீது ஆசை வருகிறது. அவள் உடல் அழகை காண்பதற்காக மொடலிங் என்றபோர்வையில் சதி செய்கிறான். அரை குறை ஆடைகளுடன் போஸ் கொடுக்குமாறு கேட்கிறான். சந்தியா மறுத்துவிடுகிறாள்.

"அடியே சந்தியா. உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று மிரட்டிவிட்டுச் செல்கிறான். அன்று இரவு தனது படுக்கையறையில் மரணமாகிக் கிடக்கிறாள் சந்தியா.

சந்தியா கொல்லப்பட்டாளா? தற்கொலை செய்து கொண்டாளா? என்று அறிவதற்காக பொலிசார் விசாரணையை முடுக்கி விடுகின்றனர்.

இப்படியொரு காட்சி 'நடுஇரவில்' என்ற படத்தில் இடம் பெறுகிறது. சில்க் சுமிதா கடைசியாக நடித்த காட்சியும் இதுதான். மொடல் அழகி சந்தியாவாக நடித்திருந்தார் சில்க் சுமிதா.

நடு இரவில் படத்தில் சில்க் சுமிதாவின் காதலர் டாக்டர் ராதாகிருஷ்ணனின் மகனான ராமுவும் நடித்திருக்கிறார். படக்கதைப்படி அவர்தான் சந்தியாவை (சில்க்கை) கொலை செய்தார் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

எப்படி ஒரு அபூர்வ ஒற்றுமை பார்த்தீர்களா? சில்க் மரணத்திலும் டாக்டர் ராதா கிருஷ்ணன்மீதும் மகன் ராமு மீதும் தான் சந்தேகப் பார்வைகள் விழுந்துள்ளன.

## குவாலாவில் மன்சூர் அலிகான்

தமிழில் சொந்தமாக படம் தயாரித்து கதாநாயகனாக நடித்தவர் மன்சூர் அலிகான். நீண்ட பெயர் கொண்ட படம் தயாரித்து பரபரப்பாகவும் பேசப்பட்டவர். கதாநாயகனாக நடித்தாலும் வில்லன் பாத்திரங்களிலும் தொடர்ந்து நடிக்கிறார்.

'வில்லன்' நடிப்பு மூலம் கிடைக்கும் பணத்தை வைத்து சொந்தப் படம் தயாரித்து கதாநாயகனாக நடித்தும் விடுவார்.

தமிழில் படம் தயாரித்து ருசிகண்ட மன்சூர் அலிகான் ஹிந்தியிலும் ஒரு படம் தயாரிக்கிறார். படத்தின் பெயர் குவாலா. கதாநாயகன் மன்சூர் அலிகான். கதாநாயகி மம்தா குல்கர்னி. மற்றொரு ஹீரோ சங்கிபாண்டே.

மும்பாயில் உள்ள நடிப்புப் பயிற்சிக் கல்லூரியில் படித்தபோது ஹிந்தி பேசக் கற்றுக்கொண்டவர் மன்சூர். குவாலாவில் நடிக்க ஹிந்தி தெரிந்திருப்பது உபயோகமாகி விட்டது.

## முறியடிப்பு

'சின்னத்தம்பி' படத்தின் வசூல் சாதனையை 'காதல் கோட்டை' முறியடித்துவிட்டது. சென்னையில் உள்ள ஒரு திரையரங்கை ஒரு வருட குத்தகைக்கு எடுத்து படத்தை ஓடவிட்டுள்ளனர்.

'காதல் கோட்டை' ஒரு வருடம் தொடர்ந்து ஓடி சாதனை படைக்கும் என்று விநியோகஸ்தர்கள் சொல்லியுள்ளனர்.

## முன்னாள் பேபி

ஏராளமான படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து மனதில் இடம்பிடித்தவர் பேபி ஷாலினி. பின்னர் அவர் படிப்பில் தீவிர கவனம் செலுத்தியதால் அவரது தங்கை பேபி ஷாமிலி குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்தார்.

பேபி ஷாலினி இப்போது தளதளவென்று வளர்ந்து விட்டார். சென்னையில் நடைபெற்ற அழகிப் போட்டி ஒன்றிலும் கலந்து கொண்டார். வெற்றிபெறத்தான் முடியவில்லை.

பேபி ஷாலினியை ரஜினியின் ஜோடியாக நடிக்கவைக்க முயற்சி நடந்தது. ஷாலினி தரப்பில் ஓ.கே. ரஜினிதான் 'நோ' சொல்லிவிட்டாராம். "அது ரொம்ப சின்னப் பொண்ணு. இப்போ வேண்டாமே!" என்றுவிட்டாராம் ரஜினி.

## ரம்பா 17

சமீபத்தில் தமிழ்நாடு சன்ரீ.வி பேட்டியில் தனது வயது 17 என்று பேட்டி கொடுத்தார் ரம்பா. அத்தோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. நடிகைகளில் தான் மட்டுமே இளமையானவள் என்றும் சொல்லியிருந்தார் ரம்பா.

பேட்டியைக் கவனித்த ஏனைய நடிகைகள் மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மட்டும் என்ன வயதானவர்களோ? என்று பொருமுகிறார்களாம்.

## சில்க்கைப் புறக்கணித்த ந...

சில்க் சுமிதா அயல்வீட்டுக்காரர்களுடன் பந்தா இல்லாமல் பழகு... என்றால் பிரியமாம். அயல்வீடுகளுக்குச் சென்றால் கேட்டுவாங்கி... இறந்த சேதி கேட்டு துடித்துப் போனார்களாம் அயல்வீட்டுக்காரர்க...

சில்க் சுமிதாவின் மரணவீட்டில் தமிழ்ப்பட நடிகர்கள் எவருமே கல... ஏன் இந்தப் புறக்கணிப்பு? என்று பொருமியிருக்கிறார் ரே... என்னு ஒன்று இருக்கிறது அதிலிருந்துகூட ஒருத்தர்... வில்லையாம்.

சில்க் சுமிதா உயிரோடு இருந்தபோது பெரி... அவரை தேடிப்போய் பழக்கம் பிடித்தனர். வழிந்து... அவர் இறந்தபோது மட்டும் தலைக்கறுப்பை... என்ன உலகம் இது? என்று வேதனைப்பட்டு... ரேவதி.

நடிகர்கள் மட்டுமல்ல பிரபல ... சுமிதாவின் இறுதிச் சடங்... விட்டார்கள். அதுதான் ...

## தீபாவ...

தீபாவளிப் ப... பல படங்கள் ...

கமலின் 'அ... ரத்னத்தின் '... நடித்துள்ள '... நடித்த 'நேதா... துள்ள 'அலெ... படங்களுக்கு ... போட்டி.

இவற்றில் மு... செல்லப்போகு...

## உய...

நடிகர் பா... ராசி இருக்கி... உயரமான நடி... அந்தப்படம் வெ...

பாண்டியரா... சேர்ந்திருப்பது ... விட ரஞ்சிதா ... நடித்துவரும் ... பொண்டாட்டி'... பார்க்கலாம்.

## புது...

மந்த்ரா முரு... ஒரே ஒரு ... பெயர் ... வெளிய... மாக... வி...



பிரபு-மதுபாலா
படம்:-பாஞ்சாலங்குறிச்சி

## நக்மாவின் தங்கை ஜோடி

நக்மாவின் சிபாரிசால் கார்த்திக் செய்துள்ள காரியம் ரோஷினிக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பது. யார் அந்த ரோஷினி? நக்மாவின் தங்கை ரத்திகாதான் ரோஷினியாக பெயர் மாறியிருக்கிறார். ஏற்கனவே ஒரு ராதிகா பிரபல நடிகையாக இருப்பதால் பெயர் குழப்பத்தை தவிர்க்கவே பெயர் மாற்றம். வயதான நடிகையென்று நினைத்து விடுவார்களோ என்ற பயமும் மற்றொரு காரணமாக இருக்கலாம்.

கார்த்திக்கும்-ரோஷினியும் இணையும் படத்தின் பெயர் 'சிஷ்யா'.

நக்மா மேட்டுக்குடியில் கார்த்திக்கை கலங்கடித்தார். இப்போது நக்மாவின் தங்கை என்ன செய்யப் போகிறார் பார்ப்போம். நக்மா பாய்ந்தது எட்டடியென்றால் ரோஷினி பாயப்போவது பதினாறடியாக இருக்குமோ? பார்க்கலாம்.

## திறப்பு விழாவும்–நடிகைகளும்

நகைக் கடைத் திறப்பு விழாக்களுக்கு நடிகைகளை அழைப்பது தமிழ்நாட்டில் ஒரு 'பாஷன்.' பணத்தைக் கையில் கொடுத்தால்தான் திறப்பு விழாவுக்கே சம்மதம் கிடைக்கும்.

பானுப்பிரியாவும், விசித்ராவும் புது ஐடியா ஒன்றை உபயோகிக்கிறார்கள். திறப்புவிழாவுக்கு பணமாகக் கொடுத்தால் வாங்கமாட்டார்கள்.

திறந்துவைக்கப்படும் கடையில் உள்ள நகைகளை ஒரு நோட்டம் விடுவார்கள். அவற்றில் தமக்குப் பிடித்தமானதை கட்டிக்காட்டி வாங்கிப் போட்டுக் கொள்வார்கள்.



நெப்போலியன்-சங்கவி
படம்:-பகவத்சிங்

## ரம்பா...

இந்தியில ... நடித்துக் ... மிதுன் சக்கர... ரம்பாவுக்கு ... தாம். ஆன... வன்மையாக...

'ஜலாத்' ... மூன்று ப... சேர்ந்து நடி... அவருடன் ... கட்டிவிட்ட...

## அப்பா...

பிரபுதே... வாகப் போ... இருக்கிறார்... ததில் பெ... கண்டுள்ளா...

குழந்தை... மீண்டும் ம... விடவேண்டு... உழைக்கிறா...

பிரபுதே... சுந்தரம் 'ஜீ... கதாநாயக... நடிக்கிறார்... பிரசாந்த். ... எழுமுன்னர்... ரவுண்ட் வ...

பிரபுதே... பிரசாத் தெ... நடித்திருந்... பெரிய ... கிடைக்கவி...

## "ஜோடிப் பொருத்தம் பிரமாதம்"

குஷ்பு-சி.சுந்தர் இருவரும் தற்போது எங்குபோனாலும் ஜோடியாகவே செல்கின்றனர். சுந்தர் சமீபத்தில் பரிசாகக் கொடுத்த வைரமோதிரம் குஷ்புவின் விரலில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தின் 235வது நாள் விழாவில் குஷ்புவும் சுந்தரும் ஜோடியாக கலந்துகொண்டார்கள். விழாவுக்கு வந்திருந்தவர்கள் ஜோடிப் பொருத்தத்தை ரொம்பவும் பாராட்டினார்களாம்.

'அருணாச்சலம்' படப்பூஜையின்போது தமது திருமணத் தேதியை அறிவிக்கலாமா என்று சுந்தர் யோசித்து வருகிறார். குஷ்புதான் 'அருணாச்சலம்' படப்பிடிப்பெல்லாம் முடிந்தபின் படத்தின் வெற்றிச் செய்தியோடு திருமண அறிவிப்பை வெளியிடலாம் என்று சொல்லி வருகிறாராம்.

இதற்கிடையே ரஜினி வெளியூர் பறந்துவிட்டார். தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று முடிந்தபின்னர், முடியையும் வளர்த்துக் கொண்டு திரும்பி வருவாராம்.

தேர்தல் சமயத்தில் உள்ளூரில் இருந்தால் பிரசாரத்திற்கு அழைப்பார்கள் என்றுதான் ரஜினி அமைதி தேடிப் பறந்துவிட்டார்.

## முகப்பில்

விஜயகாந்த்
படம்:-அலெக்ஸ்சாண்டர்

மோகினி

வாணிவிஸ்வநாத்
படம்:-மைஇந்தியா



ரமேஷ் அரவிந்-சுருதி
படம்:-கற்பூரபொம்மை

## முழுக்கு

நடிகர் ரகுவரனைத் திருமணம் செய்து கொண்ட ரோகிணி நடிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டார். இனிமேல் நடிகைகளுக்கு பின்னணிக்குரல் மட்டும் கொடுப்பாராம்.

## தெலுங்...

மலையா... தமிழில் பிர... படத்தில் ந... அண்மையி... படங்களில் ... யுள்ளார்.

www.padippakam.com

## மனசுக்குள் வரலாமா?

'காதல் தேசம்' புகழ் அப்பாஸ் நடிக்கும் புதிய படங்களில் ஒன்று 'மனசுக்குள் வரலாமா?' என்று இளம்வட்டத்தை சுண்டிவிழுக்கும் பெயராக வைத்துள்ளனர்.

கதாநாயகி தேர்வு நடிந்துகொண்டிருக்கிறது. முக்கிய வேடத்தில் நடிப்பவர் லதா. எம்ஜி.ஆரின் ஜோடியாக நடித்து கலக்கிய அதே லதாதான். லதாவுக்கு படத்தில் ஜோடி மணிவண்ணன்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், கே. கவுதம். சரவணன் நடித்த 'விஸ்வநாத்' படத்தை இயக்கியவர் கவுதம். இசை: தேவா.

## மீனா ஏமாற்றம்

'அவ்வை சண்முகி', 'பாராதிகண்ணம்மா' இரண்டும் தீபாவளிக்கு வெளிவருவதால் மீனாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இரண்டிலும் நாயகி அவர்தான். ஆனாலும் ஒரே ஒரு சோகம்.

ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தில் தனக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்திருந்தார் மீனா. அதிஷ்டக்காற்று ரம்பா, சௌந்தர்யா இருவர் பக்கமும் வீசிவிட்டது.

பாவம் மீனா ஏமாந்துபோனார். எதிர்பார்த்து ஏமாந்த இன்னொருவர் நக்மா.

அவ்வை சண்முகியிலும் மீனாவுக்கு ஒரு நெருடலான சமாச்சாரம் ஹீராவின் கவர்ச்சி விருந்து. எங்கே ஹீரா தன்னை ஓரம்கட்டிவிடுவாரோ என்று பயப்படுகிறார் மீனா. ஹீராவுக்கும் கமலோடு டான்ஸ் உண்டாம். அஜித் பொறாமைப்படமாட்டாரா?

## முடிவு மாறியது

சத்யராஜுடன் 'ராஜா ராணி', விஜயகாந்துடன் 'தாயகம்' ஆகிய படங்களில் நடிப்பதாக இருந்தவர் விஜயசாந்தி. பின்னர் ஒத்துவரவில்லையென்று ஒதுங்கிக்கொண்டார்.

அர்ஜுன் நடிக்கும் 'தாயின் மணிக்கொடி' படத்தில் ஒப்பந்தமானார் விஜயசாந்தி. படப்பிடிப்பு ஆரம்பித்தபின்னர் முன்வைத்த காலை பின்னுக்கு இழுத்துக் கொண்டார் விஜயசாந்தி. தொடர்ந்து 'தாயின் மணிக்கொடி' படத்தில் விஜயசாந்தி நடிப்பாரா? என்பது சந்தேகம்தான்.

# சினிவிசிட்

## ரசிகையைக் காதலி

நடிகர் விஜய் ஒரு ரசிகைமீது காதலாகி கசிந்துருகிக் கொண்டிருக்கிறார். நடிகைகளின் மீதான காதல் கல்யாணத்தில் முடிய பெற்றோர் அனுமதிக்கமாட்டார்கள். அதனால் ரசிகைமீது பார்வையைத் திருப்பி உள்ளார் விஜய்.

ரசிகை கீதா. இலண்டனில் இருந்து டாக்டருக்கு படித்து வருகிறார். விஜய்யின் படங்களை வீடியோவில் பார்த்துவிட்டு புல்லரித்துப்போய் கடிதங்கள் போட ஆரம்பித்தாராம். கடிதங்களைப் படித்த விஜயும் புல்லரித்துப்போனாராம். நேரில் வந்து தரிசனம் தருமாறு விஜய் அழைக்க, ரசிகையும் பறந்துவந்தார். படப்பிடிப்பொன்றில் இருவரும் சந்தித்து மனம்விட்டுப் பேசினார்கள். படிப்பை முடித்துவிட்டு கெட்டி மேளம் கொட்டலாம் என்று இலண்டனுக்கு திரும்பப் பறந்துவிட்டார் ரசிகை.

## பெயர் தானம்

பாக்யராஜின் சீடர் சி.சிவக்குமார். இயக்கும் படம் 'ரெட்டை ஜடை வயசு'. இந்தத் தலைப்பைத் தானமாகக் கொடுத்தவரும் பாக்யராஜ் தானாம்.

பாக்யராஜ் சிவாஜியுடன் நடித்து இயக்கிய படம் 'தாவணிக் கனவுகள்'. அப்படத்திற்கு முதலில் சூட்ட இருந்த பெயர் 'ரெட்டை ஜடை வயசு'. இப்போது பெயரை சிஷ்யனுக்கு கொடுத்துவிட்டார் பாக்யராஜ்.

அஜித்குமார்- மந்த்ரா ஜோடியாக நடிக்க படம் வளர்ந்து வருகிறது.



விஜயகாந்த்-சங்கீதா படம்:- அலெக்ஸாண்டர்



சில்பா சிரோத்கர் படம்:- அரசியல்

## மினி சினி

*கன்னடத்தில் முதலிடத்தில் இருந்த மாலாஸ்ரீயைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தில் இருப்பவர்கள் ஸ்ருதி, பிரேமா. தமிழில், பாலச்சந்தரின் 'கல்கி'யில் ஸ்ருதியும், மோகன்லாலிற்கு ஜோடியாக 'மகான்' படத்தில் பிரேமாவும் நடித்து வருகிறார்கள்.

*பல புதிய இயக்குநர்களை அறிமுகப்படுத்தியவர் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி. இவர் தற்போது பாலசேகர் என்பவரை 'லவ் டுடே' என்ற படத்தில் இயக்குநராக அறிமுகப்படுத்தவுள்ளார். இப்படத்தில் விஜய்-சுவலட்சுமி ஜோடியாக நடிக்கின்றார்கள்.

*மலையாளத்தில் வெற்றி பெற்ற 'சுகவாசம்' என்ற படம் தமிழில் 'புன்னகைப் பூக்கள்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகின்றது. இதில் 'வள்ளி' புகழ் சஞ்சய் கதாநாயகனாக நடித்துள்ளார்.

*'ரகசிய பொலிஸ்' படத்தைச் சொந்தமாகத் தயாரித்து நடித்த சரத்குமார், அடுத்த வருடத்தில் இரண்டு படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இந்த இரண்டு படங்களிலும் கதாநாயகன் சரத்குமார் இல்லை.

* 'நாட்டாமை','ஆனஸ்ட்ராஜ்', 'காதல் கோட்டை' போன்ற படங்களில் பாடல் காட்சிகளில் நடித்துள்ள ராணி தனது பெயரைத் தற்போது ரக்ஷா என்று மாற்றியுள்ளார்.

* நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தான் இசையமைக்கும் 'புண்ணியவதி' படத்திற்காக 'அடி பணிஞ்சா நல்லபடியளப்பா....' என்ற பாடலைப் பாடியிருக்கிறார் இசைஞானி இளையராஜா.

* வி.ஐ.பி. என்றால் மிகமுக்கிய பிரமுகர் (வெறி இம்போட்டன்ட் பேர்சன்) என்று அர்த்தம். ஆனால் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் படமான 'வி.ஐ.பி.'யின் அர்த்தம் வேலை இல்லாப் பட்டதாரியாம்.

* 'காதல் கோட்டை' படத்தை அடுத்து கார்த்திக்-சுவலட்சுமி நடிக்கும் 'கோகுலத்தில் சீதை' படத்தை இயக்கி வருகிறார் அகத்தியன். இதைத் தொடர்ந்து கே. பாலச்சந்தர் தயாரிக்கும் 'உறவுகள்' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

* 'மைனே பியார் கியா' என்ற இந்திப்படத்தில் கதாநாயகியாக நடித்த பாக்யஸ்ரீ இப்போது 'ஓங்காரம்' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். இதில் இவருக்கு ஜோடியாக டாக்டர் ராஜசேகர் நடித்து வருகிறார்.

* ராஜ்கிரணோடு சங்கீதா ஜோடியாக நடித்த 'எல்லாமே என் ராசாதான்' பெரு வெற்றிபெற்றது. இந்த ஜோடி மீண்டும் ஒரு படத்தில் இணைந்து நடிக்கவுள்ளார்கள். படத்தின் பெயர்- 'சந்திரன்'.

## புது நாயகி

நடிகர் கார்த்திக் கொத்தும் சமாச்சாரங்களில் கில்லாடி. லேட்டஸ்ட்டாக அவர் கொத்தியிருப்பது ஈஸ்வரிராவ் என்ற நடிகையை. பாலுமகேந்திரா தனது புதிய படத்தில் நடிக்க தெரிவு செய்து வைத்திருந்த நடிகைதான் ஈஸ்வரிராவ். கார்த்திக் ஈஸ்வரிராவை தனது படமொன்றில் நடிக்க வைத்துவிட்டார். 'கூட்டாளி' படத்தில் ஈஸ்வரிராவ்தான் கதாநாயகி மிகவும் தாராளமாக பயன்படுத்திருக்கிறார்களாம்.

## கமலின் பெண் குரல்

'அவ்வை சண்முகி' படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. ஆபிரிக்காவுக்குச் சென்று மீனாவோடு ஒரு காதல் பாட்டு காட்சியில் கமல் நடிக்கவேண்டும். அதுவும் முடிந்தால் தீபாவளி விருந்தாக வந்துவிடும் 'அவ்வை சண்முகி'.

படம் சிறப்பாக வந்திருக்கிறது. பிரமாதமாக ஓடும் என்று சொல்கிறார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.

அவ்வை சண்முகி 'மேக் அப்' தொடர்பாக கமல் தெரிவித்துள்ள விபரங்கள் இதோ:

"இந்தியன் படத்தைவிட இந்தப் படத்துக்கு 'மேக்-அப்' போடுவதற்கு உயிரை விட்டிருக்கோம். 'ரப்பர் ப்ராஸ்தெடிக் பீஸ்'னு சொல்லாறாங்க அந்த மெட்டிறியலை! அதை முகத்தில மொத்தம் எட்டு பீஸ் யூஸ் பண்ணித்தான் 'இந்தியன்' 'மேக்-அப் போட்டேன். இந்த மாமி வேஷத்துக்கு அத்தனை துண்டுகள் வேண்டாமென்று முடிவு செஞ்சோம்.

கன்னம், முகவாய்க்கட்டை, கழுத்துக்கெல்லாம் சேர்த்து ஒரே பீஸா அமெரிக்காவிலிருந்து ரெடி பண்ணிக்கொண்டாந்தோம். ஆனா அதைவிட இது வெயிட் ஜாஸ்தி. ஒரு நாளைக்கு ஒரு பீஸ் யூஸ் பண்ணினா அப்புறம் தூக்கி எறியவேண்டியதுதான்.

மார்பு, கை, காலில் இருக்கிற முடியெல்லாம்கூட எடுக்க வேண்டியதாப் போச்சு. ஜாக்கெட் போட்டா கை கொஞ்சம் மென்மையா தெரியணும்கிறதுக்காக சூட்டிங் தொடங்க ஒரு மாசம் முன்னாடியே எக்ஸர்சைஸ் பண்றதை நிறுத்தி கொஞ்சம் லூஸ் ஆக்கிட்டேன்." என்கிறார் கமல்.

மாமி வேஷத்துக்கும் கமலே குரல் கொடுத்திருக்கிறார்.

சேலையோடும், கச்சிதமான மேக்-அப் போடும் கமலைப் பார்த்த கமலின் மனைவி சாரிகா "நீங்க இப்போது ஒரு லேடி. ஆம்பளை போட்டுக்கற சென்டு போட்டுக்காதீங்க" என்று தான பாவிக்கும் சென்ட கொடுத்தாராம்.

## மீண்டும் எழுதுகிறார்

நடிகர் வினுச்சக்கரவர்த்தி சிறந்த குணச்சித்ர நடிகர். வில்லனாகவும் நடித்திருக்கிறார். மற்றுமொரு திறமையும் அவரிடம் இருக்கிறது. திரைப்படங்களுக்கு கதை எழுதுவதிலும் வல்லவர்.

'வண்டிச்சக்கரம்', 'ரோசாப்பு ரவிக்கைக்காரி' போன்ற படங்களுக்கு கதை எழுதியிருக்கிறார். இடையில் சில காலம் கதை எழுதுவதை நிறுத்தியிருந்தார். இப்போது மீண்டும் கதை எழுதத் தொடங்கிவிட்டார்.

வினுச்சக்கரவர்த்தி கதை எழுதும் படத்தில் கதாநாயகனாக நடிக்கப் போகிறவர் விஜயகாந்த். பெயர் இன்னமும் சூட்டப்படவில்லை.

## சுல்தானிடம் மம்தா

'மும்பாய்' படஉலகில் கவர்ச்சிக் கொடிகட்டிப் பறப்பவர்களில் ஒருவர் மம்தா குல்கர்னி. காதல் லீலைகளிலும் தாராளமானவர். எல்லாவற்றிலும் படு படு தாராளம்.

புருனே சுல்தானின் அன்பான அழைப்பு மம்தாவுக்கும் கிடைத்ததாம். அழைப்பை கேட்டவுடன் மம்தாவுக்கு இருப்பே கொள்ளவில்லை. பறந்துபோய் பத்து நாட்கள் சுல்தானின் விருந்தினராக தங்கிவிட்டு வந்தாராம். மம்தா குல்கர்னியின் தீவிர இரசிகராம் புருனே சுல்தான். சுல்தானின் குடும்பத்தினரும் மம்தாவின் படங்களை விரும்பிப் பார்ப்பார்களாம்.

புருனே சுல்தானின் கவனிப்பால் மம்தா குல்கானி திக்குமுக்காடிப் போய் இருக்கிறார். சுல்தானின் பிறந்த நாளுக்கு முன்னரே மம்தா புருனே சென்று திரும்பி விட்டாராம்.



படிப்பகம்

# கைகுலுக்கல் பலவிதம்
## ஒவ்வொருவரும் ஒரு ரகம்

ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது கைகுலுக்கிக் கொள்வது மேல்நாட்டு வழக்கம் என்றபோதிலும் இப்போது எங்கும் பரவலாகக் காணப்படுகிறது. இவ்வாறு கைகுலுக்குவதும் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாகக் காணப்படும். இவற்றைக் கொண்டு அவர்களின் குணாதிசயங்களை மதிப்பிடமுடியும்.

சிலர் பெயரளவிற்குக் கைகுலுக்குவார்கள். இவர்கள் சோம்பேறிகள். நம்பமுடியாதவர்கள். மனதை ஒருமுகப்படுத்தி இவர்களால் எந்த வேலையையும் செய்ய முடியாது. எதிலும் நிதானமாக நடந்து கொள்வார்கள். சற்றுச் சிக்கலான விஷயங்களைச் செய்யும்படி கூறினால் மலைத்துப் போய் விடுவார்கள். தன்னுடைய சொல்லும், செயலும் பிறரைப் புண்படுத்தக் கூடுமோ என்று கவனிக்காமல் ஏதாவது செய்து விடுவார்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருப்பவர்கள். ஆனால் எல்லோருடனும் சுமூகமாகப் பழகுவார்கள்.

உறுதியாகக் கையைப் பற்றி அன்புடனும், நட்புடனும் குலுக்குவதுதான் சிறந்ததாகும். இவ்வாறு செய்பவர் துடிப்பாளர். எல்லாம் நல்லதாகவே நடக்கும் என்று நம்புகிறவர். ஆனால் அந்தத் துடிப்பு சரியான வழியில் செலுத்தப்படுவதாக இராது. தெளிவான நோக்கமின்றி எங்காவது போய்க் கொண்டும் ஏதாவது செய்து கொண்டும் இருப்பார்கள். உடல் இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகவே எங்காவது போய்க் கொண்டே இருக்க வேண்டும் என்ற பழக்கமுடையவர்கள். இருட்டில் ஒளி தெரிகிறதா என்று தேடிக் கண்டுபிடித்து விடுவார்கள். கவலையில் ஆழ்ந்துள்ள மற்றவர்களுக்கு கைதூக்கி உதவுவார்கள். எல்லோருடனும் மனப்பூர்வமாகவும், நம்பிக்கையுடனும் பழகுவார்கள். பிறர் எளிதில் இவர்களைத் தன்பக்கம் திருப்பி விட முடியும். கற்பனைத் திறன் இருந்தபோதிலும் அதை உருப்படியாகப் பயன்படுத்தாமல் கனவு காண்பதில் செலவழிப்பார்கள்.

சிலர் கைகுலுக்குவது எலும்புகள் நொறுங்கிவிடுமோ என்று அஞ்சும் அளவிற்கு இருக்கும். பொதுவாகக் கைகளினால் உழைத்துப் பிழைப்பவர்கள் இவ்வாறுதான் செய்வார்கள். இவர்கள் முரட்டு சுபாவம் கொண்டவர்கள். மென்மையான இயல்பே இவர்களிடம் இராது. பழமைக் கருத்தைக் கொண்டவர்களாகவும், பிடிவாதக்காரர்களாகவும் இருப்பார்கள். கஷ்டப்பட்டு நாமாகக் கையை விடுவித்துக் கொள்ளும் வரை விடமாட்டார்கள். இவர்களுடைய செயற்பாடுகள் குறிக்கோள் கொண்டதாகவே இருக்கும். எந்தப் பிரச்சனையையும் உறுதியுடன் எதிர்நோக்கிச் சமாளிப்பார்கள். அபாரமான ஆற்றல் கொண்டவர்கள். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தாம் மேற்கொண்ட காரியத்தைச் செய்யக் கூடியவர்கள். ஆனால் செய்தது போதும் என்று நினைத்து விட்டால் சட்டென்று அதை நிறுத்தி விடுவார்கள்.



வேண்டா வெறுப்பாகக் கைகுலுக்கும் வழக்கமும் சிலரிடம் காணப்படும். வேகமாகக் கையை நீட்டிச் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்வார்கள். இவர்களை அதிக அளவுக்கு நம்பக்கூடாது. ஏதோ குற்றம் புரிந்துவிட்டு அதிலிருந்து தப்பித் திரிவது போல இவர்களுடைய நடத்தை இருக்கும். பொதுவாக நாணயம் இல்லாதவர்கள். இவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கடைசியாக நோய் பரப்பும் கிருமிகள் ஒட்டிக்கொண்டு விடும் என்ற பயத்தினால் கை குலுக்காத சிலரும் இருக்கிறார்கள். அதிக கவனமுள்ளவர்களாக நடந்து கொள்ளும் இவர்கள் அவசரப்பட்டு எதையும் செய்யமாட்டார்கள். தனக்கு நன்மை உண்டாகும் என்று நிச்சயமாக நம்பினால்தான் ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவார்கள். செய்யும் வேலையை மாற்றிக் கொள்ளவும், புதிய துறையில் இறங்கவும் இவர்களுக்குத் துணிவு இராது.

# உங்கள் குழந்தைகளுக்கு
## உகந்த ஆடைகள் தேவை!



தமக்கு நல்ல ஆடைகள் இருக்கின்றனவோ, இல்லையோ, தமது குழந்தைகள் நல்ல, அழகான விலையுயர்ந்த உடுப்புக்களுடன் பவனி வர வேண்டும் என்றே பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகின்றனர். குழந்தைகளுக்கு உடுத்துகின்ற உடைதான் தமது அந்தஸ்தின் அடையாளம் என்கின்ற மனப்பாங்கு, இன்றைய பெற்றோரில் மிகப் பெரும்பாலோருக்கு இயல்பாகிப் போயிருக்கின்றது.

இதனால், வசதியில்லையென்றாலும் கூட, கடன் பட்டாவது விலையுயர்ந்த உடைகளைக் குழந்தைக்கு வாங்கித்தர அவர்கள் தயங்குவதில்லை.

குழந்தைகளை விதம் விதமாய் உடுத்திப் பார்ப்பதில் தவறொன்றுமில்லை. ஆனால் குழந்தைக்காக நீங்கள் வாங்கும் உடையானது.....

- நீங்கள் வாழும் தட்பவெப்ப நிலைக்கு உகந்ததாக இருக்கிறதா?
- குழந்தைக்குப் பொருத்தமானதாக (நிறம், உயரம், பருமன் போன்றவற்றைப் பொறுத்து) இருக்கின்றதா?
- கொடுக்கும் விலைக்கேற்ப நேர்த்தியாக இருக்கின்றதா?
- உங்கள் பொருளாதார விளிம்புக்குள் அமைவதாக இருக்கின்றதா? என்று பார்த்து வாங்க வேண்டும்.

**விலையுயர்ந்த உடைகள் நல்ல உடைகள் ஆவதில்லை.**

குழந்தைகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்பவர்கள். எனவே அவர்களது அளவுகள் கிடுகிடுவென கூடிக்கொண்டே போகின்றன. இன்று தைக்கின்ற உடைகள் சில மாதங்களில் (அதிக பட்சம் ஒரு வருடத்திற்குள்) மாறி விடுவதால், குழந்தைகளுக்கான உடைகளைப் பெற்றோர் தொடர்ந்து வாங்க வேண்டியுள்ளது. அத்தோடு மட்டுமல்லாது மூன்று நான்கு வயது வரை, குழந்தைக்கு ஒரு நாளிலேயே பல முறை துணி மாற்ற வேண்டிய கட்டாயம் உள்ளதால், குழந்தைகளின் உடைகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகிறது. நான்கு வயதிற்குப் பிறகும் கூட குறைந்த பட்சம் நாளொன்றுக்கு மூன்று முறையாவது துணி மாற்ற வேண்டியுள்ளது அல்லவா?

மேலும் விலையுயர்ந்த உடைகள் வாங்குவதால் அவை சிறந்த உடைகளாக அமைந்து விடுவதில்லை. அலங்கார ஒட்டுக்கள், குமிழிகள், நாடாப் பின்னல்கள் போன்றவற்றைக் குழந்தைகள் (பத்து மாதம் தாண்டினால் போதும்) பிய்த்து எறிய சில நிமிடங்களே போதும். இதற்காகக் குழந்தைகளை நொந்து கொள்வதால் எந்தப் பயனுமில்லை.

இங்கு இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். விலையுயர்ந்த ஆடைகள் பெரும்பாலும் நைலோன், டெர்லின், பொலியஸ்டர் போன்ற செயற்கை இழைகளால் ஆனவையாக இருக்கும். இவ்வகை இழைகள் தோற்பரப்பில் காற்றோட்டத்தைத் தடை செய்வதாலும், ஈரம் இழுக்கும் தன்மையற்று இருப்பதாலும், வியர்வைத் தேக்கம், துர்நாற்றம், அரிப்பு, தோல் அழற்சிகள் தோன்ற அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (குழந்தையின் சருமம் மிகவும் மென்மையானது.)

நமது தட்பவெப்ப நிலையில், பருத்தி ஆடைகளே குழந்தைகளுக்குப் போதுமானவை. பருத்தி ஆடைகளைக் குறைவான விலையிலேயே வாங்க முடிகிறது. அதுவும் ஆடைகள் அதிரடிப் புரட்சிகள் நடத்திக் கொண்டிருக்கும் இன்றைய நாட்களில், பருத்தி ஆடைகள் வகை வகையாகச் சந்தைகளில் வந்து குவிந்திருக்கின்றன.

மலைப்பிரதேசங்களிலும், குளிர்ப்பிரதேசங்களிலும் வாழ்பவர்கள்தான் கம்பளி மற்றும் செயற்கை இழை ஆடைகளை நாட வேண்டியுள்ளது. அதுவும் வெறும் மேலுடுப்புக்களுக்காகத்தான். உள்ளாடைகள் எங்கும் எப்போதும் பருத்தியால் ஆனவையாகத்தான் இருக்க வேண்டும்.

லேடீஸ் ஸ்பெஷல்

# டேக் இட் ஈசி
## விட்டமின் 'சி'



வளர்சிதை மாற்றங்களுக்கும், நோயிலிருந்து உடம்பைப் பாதுகாப்பதற்கும் 'அஸ்கார்பிக் அமிலம்' என அழைக்கப்படும், விட்டமின் 'சி' தேவை. விட்டமின் 'சி' பற்றாக்குறையால் சொறி- கரப்பான் என்னும் நோய் ஏற்படும். நீண்டகாலம் வரை பழங்களையும், புதுக் காய்கறிகளையும் சாப்பிடாதவர்களுக்கும், அதிக வெப்ப நிலையில் சமைக்கப்படுவதன் காரணமாக, அஸ்கார்பிக் அமிலம் அழிக்கப்பட்டுப்போன உணவைச் சாப்பிடுபவர்களும் இந்த நோயால் பீடிக்கப் படுகின்றனர்.

இரத்தச் சோகை, ஈறுகளில் இருந்து இரத்தம் கசிதல், முக்கியமாகத் தொற்று நோய் விஷயத்தில் நோய் எதிர்ப்புத் தன்மை வெகுவாக வீழ்ச்சியடைதல் ஆகிய இவை யாவும் சொறி கரப்பானின் அறிகுறிகளாகும். எலுமிச்சை, தோடை, அப்பிள், தக்காளி, கோவா, முந்திரிகைப்பழம் போன்றவற்றில் விட்டமின் 'சி' நிறைய உள்ளது.

குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்கள் தேவையான அஸ்கார்பிக் அமிலத்தைப் பெறுவதற்காகப் புதிதாகப் பறித்த காய்கறிகளையும், பழங்களையும் சாப்பிட வேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரையில் பிறந்த மூன்றாவது மாதம் முதலே காய்கறி, பழரசங்களை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

# சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது சுகந்தினி)**

## எள்ளுப் பொடி

தேவையானவை:

எள்ளு- 1/4கிலோ
உப்பு- சிறிதளவு
பெருங்காயம்- சிறியதுண்டு
மிளகாய் வற்றல்- 8
உளுத்தம் பருப்பு- 2 கைபிடி

செய்முறை:

எள்ளை அரைமணிநேரம் தண்ணீரில் ஊறவைத்துக் களைந்து, கல் அரித்து, வடிய வைத்து நிழலில் உலர விடவும்.

உப்பைத் தவிர மற்றப் பொருட்களை வாணலியில் தனித்தனியாக வறுத்துக் கொள்ளவும்.

பின்னர் மிளகாய்வற்றல், பெருங்காயம், உளுத்தம் பருப்பு, உப்பு இவற்றைச் சற்றுக் கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும். பிறகு எள்ளையும் பொடி செய்து இதனுடன் சேர்த்துக்கொள்ளவும்.

இந்த எள்ளுப்பொடியைச் சூடான சோற்றில் 2 கரண்டி நல்லெண்ணெய் சேர்த்து தூவிக் கிளறவும்.

# பிளவுஸ் ஃபாஷன்
## பொருத்தமும் அழகும்

புடவைகளுக்கேற்ப பிளவுஸ்களைத் தேர்ந்தெடுத்து அணியும் காலம் மலையேறி விட்டது. இப்பொழுது அதிக வேலைப்பாடுகள் நிறைந்த ஆடம்பரமான பிளவுஸ்களையும், அவற்றிற்கேற்ப மிகமிக எளிமையான புடவைகளையும் அணிவதுதான் ஃபாஷன்.

பிளவுஸ்களை எப்படித் தெரிவு செய்வது, எப்படிப்பட்ட பிளவுஸ்களைப் போட்டால் பொருத்தமாக- அழகாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ளச் சில குறிப்புக்கள்:

* மிகப் பருமனாக இருக்கும் பெண்கள் குட்டையாகக் கை வைத்துத் தைத்த பிளவுஸ்களை அணிந்தால் இன்னும் பருமனாகத் தெரிவார்கள். எனவே இவர்கள் முழங்கையளவு கை வைத்து, அதே சமயம் இடுப்புச்சதை வெளியே பிதுங்காதபடி இறக்கம் வைத்த பிளவுஸ்களை அணியலாம்.
* ஒல்லியான உடலமைப்புடைய பெண்கள் நீளமான கை வைத்து இறுக்கமில்லாத பிளவுஸ்களை அணியலாம். இவர்களது முதுகுப் பகுதியில் எலும்புகள் அசிங்கமாகத் தெரியாதபடி, அவற்றை மறைக்கும் வகையில் கழுத்துள்ள பிளவுஸ்களை அணிய வேண்டியது அவசியம்.
* பூக்களோ கோடுகளோ இல்லாத சேலைகளை அணியும் போது, சேலையின் நிறத்தில் பிளவுஸ் அணியாமல் அதற்கு நேரெதிரான வெளிர் நிறத்திலோ, டார்க் நிறத்திலோ அணியலாம்.
* பட்டுப்புடவைகளுக்குப் பளபளக்கும் ஆடம்பரமான பிளவுஸ்கள் அணிவதைத் தவிர்த்து, எளிமையான கை வேலைப் பாடுகளுடன் கூடிய சாதாரண பிளவுஸ்களை அணிந்தால் அழகாக இருக்கும்.

தற்போது தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சில பிளவுஸ் ஃபாஷன்களைப் பாருங்கள்.



படம்1

**படம்1.**

'ஆத்ரேயா வேவ்ஸ்' எனப்படும் இந்த வகை பிளவுஸ்கள் பிளெயின் சேலைகளுக்கு மிகப்பொருத்தமாக இருக்கும். 20 முதல் 45 வயதுப் பெண்கள் வரை யார் இதை அணிந்தாலும் எடுப்பாக இருக்கும்.



படம் 2

**படம் 2**

இந்தப் பிளவுஸின் பெயர் 'பாஸ்'. பட்டுப் புடவைகளுக்கு இவை மிகச் சரியாகப் பொருந்தும். இந்த பிளவுஸ்களுக்கு அதிக சரிகை இல்லாத சாதாரண பட்டுப்புடவைகளை அணிந்தால் போதும். புடவையின் போர்டருக்கு ஏற்ப முதுகுப் பகுதியிலும், கைகளிலும் டிசைன்களோடு இவை கிடைக்கின்றன.

**படம் 3**

'பிரீமியம்' எனப்படும் இந்த வகை பிளவுஸ்களும் பட்டுப்புடவைகளுக்குப் பொருத்தமாக இருக்கும். இரண்டு அல்லது மூன்று நிறங்களில் வரும் பட்டுப் புடவைகளுக்கு இவை எடுப்பாக இருக்கும். இவற்றில் சரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய பிளவுஸ்களும் கிடைக்கின்றன.



படம் 3



படம் 4

**படம்4**

பிளெயின் புடவைகளுக்குப் பூக்கள் போட்ட பிளவுஸ்களும், பிரின்டட் பிளவுஸ்களையும் அணிந்து அலுத்துப் போனவர்கள் இது போன்ற 'பிரீமியர்' பிளவுஸ்களை அணியலாம். இரண்டு பக்கங்களிலும் போர்டர் இருக்கும் பட்டுப்புடவைகளுக்கும் இவைபொருந்தும். இவற்றை 3/4 என்று சொல்லக்கூடிய முழங்கை வரை நீளமான கைவைத்துத் தைத்து அணிந்தால் அழகாக இருக்கும்.

**படம் 5**

பார்ப்பதற்கு மிக எளிமையாகத் தெரியும் இந்த பிளவுஸ்கள் பார்ட்டி மற்றும் விசேஷங்களுக்கு அணிந்து செல்ல ஏற்றவை. கண்ணாடிகள் பதிக்கப்பட்டு எம்பிரொய்டரிங் செய்யப்பட்ட இந்த வகை பிளவுஸ்கள் எல்லாவித சேலைகளுக்கும் பொருத்தமாக இருக்கும்.



படம் 5

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AM

பெயர்:........................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-10-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**கௌரி சுப்பிரமணியம்**
ரம்பக்குளம் மகளிர் வித்தியாலயம், வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



**பரிசு பெற்றவர்**

W. எலிசபெத் மேரி
14/6, காளிகோயில் வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.


பட்டுச்சேலை பரிசுப் போட்டிப் பரிசை வென்ற அதிஷ்டசாலிகளுள் ஒருவர்.

www.padippakam.com

# அந்த நாள் ஞாபகம்




'தேவா', 'நீயே மலரே' உட்பட பல படங்களில் ஒரு குழந்தை நட்சத்திரமாகவே [illegible] ஷாலினி [illegible]



[illegible] இசை ஞானி இளையராஜா தான். [illegible] பஞ்சு அருணாசலம். மற்றவர் இயக்குநர் மகேந்திரன்.

டி. ராஜேந்தரின் மகன்தானே இது? இல்லை ஐயா இல்லை. டி.ராஜேந்தர்தான் இதுவும். ராஜேந்தர் குழந்தையாக இருக்கும்போது அவரைப் பெண் குழந்தைபோல சோடித்துப் பார்ப்பாராம் அம்மா. அப்படிச் சோடிக்கப்பட்டு எடுத்த புகைப்படம்தான் இதுவும். ராஜேந்தர், ராஜேந்திரியாகவே இருந்திருக்கலாம். அழகுக்கு என்ன குறைச்சல்? நல்லாத்தானே இருந்திருப்பார்(ள்).





## நுளம்புக் கடி

பொழுது பட்டால்
எங்கிருந்தோ வந்து
'அம்புஸ்' கிடந்து
பாதுகாப்பு (புகை) வளையத்தையும்
தாண்டி வந்து
தாக்குதல் நடத்த
நாமென்ன செய்தோம்?
**
உங்கள் ராஜ்ஜியத்தில்
பங்கு கேட்டோமா?
உரிமைகளை மறுத்தோமா?
நீங்கள்தான்- எங்கள்
உரிமைகளில் தலையிடுகிறீர்கள்!
நித்திரையைப் பறிக்கிறீர்கள்;
ரத்தத்தைக் குடிக்கிறீர்கள்!
**
இறுதி எச்சரிக்கை....!
தாக்குதலை நிறுத்துங்கள்!
இல்லாவிட்டால்
உங்கள் பதுங்கு குழிகளைத்
தேடி அழிக்கப்
படை ஒன்றைத் திரட்டுவோம்!
**
'இறுதித் தாக்குதல்' என்ற பெயரில்
உங்களைத்
தாக்கி அழிக்க
நவீன (தெளி) கருவிகளை
இறக்குமதி செய்வோம்.
**
யுத்தம் நடப்பதால்-
இதற்கெல்லாம் எம்மிடம்
பணம் இல்லையென்ற
எமது பலவீனம்
உங்களுக்கும் தெரிகிறது.
**
என்றாலும்
இறுதியில்
நாங்கள் வெற்றிபெறா விட்டாலும்,
தோற்கப் போவது
நிச்சயம், நீங்களே!
உங்கள்
தாக்குதல் பட்டு
எலும்பும் தோலுமாய்
நாங்கள் ஆன பின்
எலும்பை நீங்கள்
எப்படித் தாக்குவீர்?

**எம்.ஏ.எம்.மர்சூக்- மருதமுனை.**

## தேன் கிண்ணம்

## என் வழியே....!

இது எனது தேர்வு,
எனக்கான வழி;
குறுக்கிடாதீர்கள்-
நான் பயணிக்க வேண்டும்!
••
நாளை-
காந்தியில்லாமலிருக்கலாம்.....
எனக்குள்-
ஒரு இட்லர் இருக்கிறான்!
எனக்குள்
ஒரு இட்லர்
இல்லாமலிருக்கும்போது
நான் காந்தியாயிருக்கிறேன்!
••
வேண்டாம்!
மரண விளிம்பில்
வாழ்க்கையை நோக்கி
நகரும் எனக்கு,
வாழ்க்கையின்
மையத்திலிருக்கும்
உங்கள் ஆறுதல்கள்-
தேவையில்லாதவையே!
••
உண்மை சொன்ன,
எவனைத்தான்
விட்டு வைத்தது
இந்த உலகம்?
பூலோகம்- கோளம் என்று
கோட்பாடு சொன்ன
சாக்ரடீசை கூட
சாகடித்ததல்லவா
இந்த உலகு?
••
எனது
அறுவடைகளெல்லாம்
பூக்களாய்த்தான்
இருக்கும்!
பூக்களையன்றி
வேறெதுவும் நான்
விதைக்கவில்லையே!
அதனால்....
••
எனது-
கால் அழுக்குப் பற்றியா
கவலைப்படுகிறீர்கள்-
நீங்கள்....?
முதலில்
உங்கள் தலையிலுள்ள
ஒட்டடையை
தட்டி விடுங்கள்
கொஞ்சம்....!
••
குழந்தையேயில்லாத
ஒரு மலடனின்
குடும்ப
கட்டுப்பாடு பற்றிய
சிந்தனை மாதிரி,
என் வெற்றி மீதான
உங்கள் பொறாமைகள்
முட்டாள் தனமானதே!
••
இது எனது தேர்வு,
எனக்கான வழி;
குறுக்கிடாதீர்கள்-!
நான் பயணிக்க வேண்டும்!
••
என்னை நீங்கள்
இடிக்க நினைத்தால்.....
எனக்குள்-ஒரு
இட்லர் முளைப்பான்!
கை குலுக்கிப் பாருங்கள்;
ஒரு-
காந்தியைக் காண்பீர்கள்!
••



**யூயெல் மப்றாக்- அட்டாளைச்சேனை.**

## அகதி முகாமில்!

தூவானம் கொட்டும் செக்கல் நேரத்தில்
கடலோர கரையில் கால்வைத்த மனிதங்கள்
வாழ்க்கையின் புரள்வுகளோடு பொதிகள்
சுமந்து வந்து அந்த சின்ன முகாமுக்குள்
சிறை போட்டுக் கொண்டன...
கண்களுக்குள் கங்கை பெருக்கெடுக்க.
*
அவர்கள் இன்னும் சிரிக்கவில்லை;
இதழ்களில் குத்திக்கிழித்த பே(ா) ராயுதம்.
*
ஏராளமான தீக்குச்சி முகங்கள் புகை
கக்கும் பெருவெளியில் படுத்துக்கிடக்கின்றனர்,
சூர்ய மூஞ்சியில் தேய்பட நினைக்கும்
கறுப்புத் தலையை நீட்டியவர்களாய்...
ஏன் பிறந்தோம் இந்த மண்ணில்
நிம்மதி காணாத பரம்பரையினராய் வாழவா?
என்ன செய்வார்கள் அவர்களும்?
அடிமைத்தனத்துக்கு அடங்காமல் எழுந்து
நீதிப் போராட்டத்தில் ஊறிப்போன
மானுடப்பிறவிகள்தானே....!
*
நடையும்; குல்லாத் தோணியும் மனிதருக்கு
பயந்து தொடர்ந்த பயணம் சோகமானாலும்
இன்னுமொரு நிம்மதியை தேடித்தானே?
*
இரவு இவர்களின் வேண்டாத விருந்தாளி.
லவமாக பிடித்த மௌனம்; நெருப்பு அங்கி.
*
கட்டுரைகளும்; அறிக்கைகளும் வெளிவரும்
நேரத்திலேயாவது இவர்களிடம் வந்து
பேசிவிட்டுப் போங்கள்! தாய்ப்பாலுக்காய்
அழும் அந்த சிறு குழந்தைகூட தன்னிலை
மறந்து தூங்க, தாய்ப்பால் குடிக்கட்டும்...!
தாய்மடி மறுக்காமல் இருக்கும் வரையாவது....!!

**உவைஸ்கனி.**

## அமைதி

அவன் உங்கள்
நண்பனா?
பரவாயில்லை
சொல்லுங்கள்!
**
துப்பாக்கி வேண்டுமா?
தருகிறேன்;
யாரையாவது
சுட்டுவிட்டு சாகுங்கள்!
**
எங்காவது வைக்க
குண்டு வேணுமா?
தருகிறேன்- ஆனால்
ஆயிரம் பேர் சாகவேண்டும்.
**
என்ன
தொழில்துறை
ஒழுங்காக நடக்கிறதே
'ஸ்ரைக்' பண்ணுங்க.
**
என்ன வாழ்வு
இது...?
துப்பாக்கி குண்டு
இல்லாமல்,
மனிதனும் இல்லாமல்...!

** குறிப்பு: 2000ம் ஆண்டில் இலங்கையில் இருந்தவரெல்லாம் இறந்தபின் எஞ்சிய ஒருவன் எழுதியது. **

**சுபா வரன், கண்டி.**

## வயதின் வெறுமை

நீ நீயாகவே இருக்கின்றாய்!
உடல்தான் மாறிவிட்டது.
நான் நானாகவே இருக்கின்றேன்;
மீசைதான் முளைத்துவிட்டது.
▫▫
நீ நீயாகவே இருக்க
நான் நானாகவே இருக்க
சிறுவயதில் நாம்
ஆடிய இடம் மட்டும்
வெறுமையாய் இருக்கின்றதே-
நம்முடைய மனதைப் போல!
▫▫

**இ. பிரசாந், மட்டக்களப்பு.**

## அழியாத கோலங்கள்

மனிதச் சம்பலும்
மயானச் சாம்பலுமாக
மடை பரப்பியுள்ள
மகோன்னதச் சூழல்!

பனையோலை உராய்ப்புக்கும்
தெரு நாயின் குரைப்புக்கும்
மாண்டு மாண்டு
மீண்டு வரும்
மரணக் கணங்கள்!

என் தூக்கம்
சுருண்டு போய்க் கிடக்கிறது,
தீவிரவாதப் பிரச்சனைக்கான
தீர்வு போல!
என் இரவுகள்
இழு பட்டுப் போய்க் கிடக்கின்றன
தீவுக்குத் தேவையான
சமாதானம் போல!

வேப்பெண்ணெய்
விளக்கொளியில்
மேய்கின்றேன்-உன்
விலாசந்தனை.

அநாதையாய் எனை
ஆக்கி விட்டு
அகதியாய் எங்கோ
அலைபவளே!

என் விலாப் பக்கம்
விளக்கெரிய
வெளியே
தேசம் எரிகிறது.

இங்கு
இவை மட்டுமா எரிகின்றன?
இல்லை......
நானும் தான் எரிகின்றேன்!

உள்ளே
எண்ணெயும் குருதியும்
ஊற்றிக் கொண்டு,
அவை எரிய
உள்ளத்தில்
உன்னை
ஏற்றிக் கொண்டு
நான் எரிகின்றேன்....!

**த. தயாபரன், ஆரையம்பதி.**

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.10.96 தொடக்கம் 26.10.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன். |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி, (வக்கரம்) |
| மீனம் | - கேது. |
| கர்க்கடகம் | - செவ்வாய். |
| சிம்மம் | - வெள்ளி. |
| கன்னி | - புதன், இராகு. |

சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, புதிய முயற்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள்வரவு, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| சனி- பலவிதபேறு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், பொருள் வரவு. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | மு.ப. 10 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பொறுமையிழப்பு, வீண் பகை. | பி.ப. 2 மணி |
| சனி- துயர் அதிகம், பிரயாண மிகுதி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த வாழ்க்கை | மு.ப. 10 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், மனக் குழப்பம். | பி.ப. 4 மணி |
| வெள்ளி- பிரயாணமிகுதி, செலவு. | பகல் 12 மணி |
| சனி- தேகசுக நன்மை, இனசன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் பகை. | மு.ப. 9 மணி |
| திங்கள்- தொழில்நிலை மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, இனசன நன்மை. | மு.ப. 10 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பெரியோர் நட்பு. | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, வெளியிடப் பயணம். | பி.ப. 3 மணி |
| புதன்- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| சனி- பொருள் வரவு, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கடன் படல். | பி.ப. 3 மணி |
| புதன் - வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பொருள் வரவு. | மு.ப. 11 மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் நிலைச் சிறப்பு, பணவரவு | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | மு.ப. 10 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சிப் பேறு. | பகல் 11 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- இனசன நன்மை, வீண் முயற்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், வீண் பகை. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவக் கேடு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில்நிலை மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, தெய்வானுகூலம். | மு.ப. 10 மணி |
| சனி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை கஷ்டம், பணவரவு தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக் குழப்பம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் அலைச்சல், பிரயாணக் கஷ்டம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். | பி.ப. 3 மணி |
| புதன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பலவித பேறு. | பி.ப. 3 மணி |
| சனி- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பலவித பேறு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| சனி- காரியானுகூலம், தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3


படிப்பகம்





## பால் நிலா

வான் கடலில் நிலவோடம் ஓடும்
விண் மீன்கள் கண்சிமிட்டி ஆடும்
கார் முகில்கள் வந்ததனை மூடும்
கருகி மனம் வேதனையில் வாடும்.

முகில் விலகி நிலவுமுகம் காட்டும்
மனம் குளிர தண்ணொளியைக் கூட்டும்
பால் நிலவைக் காட்டி அன்னை ஊட்டும்
பிள்ளையதை உண்டு பசி ஓட்டும்.

பார் முழுதும் பட்டொளியை வீசும்
பார்க்கின்ற விழியெல்லாம் கூசும்
காதலர்கள் தூது மொழி பேசும்
காணாத கண்களதை ஏசும்

ஏனங்கே நிற்கின்றாய் மாமா?
எட்டாத கனியாகலாமா?
வாவென்றும் வராவிட்டால் மாமா
வந்திடுவார் ஆம்ஸ்ரோங் மாமா.

-ஒடையூரான்-

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர்-நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஆணவம்

அது ஓர் அடர்ந்த காடு. சிங்கம், புலி, யானை போன்ற பயங்கர மிருகங்களும், மான், முயல், மயில் போன்ற சாதுவான மிருகங்களும் வாழும் இடம் அது.

அங்கே கலைமான் ஒன்று துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அதன் கொம்பு கிளை கிளையாய்ப்படர்ந்து அழகாக, பார்ப்பவர் எவரையும் கவரக் கூடியதாக இருந்தது.

அந்த மானின் அருகே வெள்ளை வெளேர் என்ற நிறத்துடன் இலவம்பஞ்சு உருண்டை போல் மொசுமொசு என்று ஒரு முயல் குட்டி வந்தது. அந்த முயல் ஒவ்வொரு இடமாகத் துள்ளிக் குதித்து இரையைத் தேடிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த மான்,


"ஏய்! முயல் பையா!" என்று அழைத்தது. அருகே முயல் வந்ததும்,

"என்னைப் பார்த்தாயா? என்னைப் போன்றதொரு அழகான விலங்கை இது வரை நீ இந்தக் காட்டில் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டது மான்.

"இல்லை," என்று தலையாட்டியது முயல்.

"என் தலை மேல் இருக்கும் கொம்பைப் பார்த்து மயங்காத மனிதர்களே கிடையாது. நான் இறந்த பின் என் தலையைக் கொம்புடன் பாதுகாக்க எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள் தெரியுமா?" என்று பெருமை பேசியது மான்.

"எனது சந்ததியினரின் கொம்புடன் கூடிய தலைகள் இன்றும் பல கோடீஸ்வரர்களின் மாளிகைகளை அலங்கரித்து வருகின்றன தெரியுமா உனக்கு?" என்றது மான்.



"தெரியாது," என்று சொல்லியது முயல்.

"நீ ஒரு அற்பப் பிராணி. உனக்கு என் அழகைப் பற்றி என்ன தெரியும்? எங்கள் இனத்தில் மானமுள்ள இனம் ஒன்றுள்ளது. உனக்கு அதுவாவது தெரியுமா?" என்று மறுபடியும் முயலைப் பார்த்துக் கேட்டது மான்.

"இல்லை. அதுவும் எனக்குத் தெரியாது" என்றது முயல்.

"சொல்கிறேன் கேள், அதன் பெயர் கவரிமான். மயிர் நீப்பின் உயிர் வாழா இனம் அது. அது மட்டுமன்றி கஸ்தூரிமான் என்று இன்னும் ஒரு இனம் உண்டு. இவற்றில் இருந்து பல வாசனைப் பொருட்கள் மனிதர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை போன்று உங்கள் இனத்தில் உண்டா?" என்று ஆணவத்தோடு கேட்டது மான்.

"இல்லை" என்றது முயல்.

"என்னைப் போல் உன்னால் மின்னல் வேகத்தில் ஓட முடியுமா? இதோ பார் நான் எப்படி ஓடுகிறேன் என்று, முடிந்தால் நீயும் என் பின்னால் வா?" என்று கூறிவிட்டு வேகமாக ஓடியது மான்.

சிறிது தூரம்தான் ஓடியிருக்கும். அங்கே-இரண்டு மரங்களின் நடுவே வேடனால் விரிக்கப்பட்டிருந்த வலையில் போய் மான் விழுந்தது. தப்பி ஓடுவதற்காகத் தன்னைச் சுதாகரிக்க முயன்ற மானின் கொம்பு வலையில் வசமாக மாட்டிக் கொண்டது.

தலையை அப்படியும், இப்படியும் அசைத்து விடுபட முயன்றது மான். ஆனால் முடியவில்லை.

மானின் பின்னால் ஓடிவந்த முயல் இதைப் பார்த்தது. உடனே மானுக்குக் கிட்டப் போனது முயல்.

"வலையில் மாட்டிக் கொண்டேன். இன்னும் சற்று நேரத்தில் வேடன் வரப்போகிறான். என் கதி அதோகதிதான்" என்று முயலைப் பார்த்து அழத் தொடங்கியது மான்.

"கவலைப்படாதே," என்ற முயல் வலையைத் தன் பற்களால் கடித்து மானை விடுவிக்கத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் வலை அறுபட்டு மான் விடுபட்டது.

"உன் ஆணவம் உன் கண்ணை மறைத்து விட்டது. அதனால் உன் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்பட்டு விட்டது பார்த்தாயா?" என்று அமைதியாகச் சொன்னது முயல்.

"உண்மைதான் தம்பி. அழகு ஆபத்தானது தான். அத்துடன் நான் ஆணவமாகப் பேசியதும் தவறு என்று உணர்ந்து கொண்டேன். என்னை மன்னித்து விடு" என்று மான் கூறியது.

## வாரம் ஒரு நாடு

### ருமேனியா



தலைநகர்:- புக்காரெஸ்ட்
பரப்பு-2,37,500 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 2.28 கோடி
மொழி- ருமேனியன், ஹங்கேரியன், ஜெர்மன்
எழுத்தறிவு- 96%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- லியு
தனிநபர் வருமானம்:- 1090 டொலர்.

அமைவிடம்:-

மத்திய ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் கருங்கடலை ஒட்டி அமைந்துள்ளது.

வரலாறு:-

துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்த வல்லச்சியாயும், மால்டோவியாவும் இணைந்து 1861 ல் ருமேனியாவாக உருவானது. 1877 ல் சுதந்திரமடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1947ல் மக்கள் குடியரசாகப் பிரகடனம் செய்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிற்பீரோவே உச்ச அதிகாரம் படைத்தது. ஜனநாயகம் வேண்டி நடைபெற்ற மக்கள் புரட்சியில் அதிபர் நிகலாய் செளசெங்கு கொல்லப்பட்டார். 1990ல் பொதுத் தேர்தல். தேசிய இரட்சணிய முன்னணி, ஆட்சி பீடத்தில் உள்ளது.

பொருளாதாரம்:-

விவசாயப்பகுதிகள் கூட்டுறவின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. தொழிற்துறை வளர்ச்சியடைந்துள்ளது. எண்ணெய்த் தொழில், சீமெந்து, நீர்மின்சார உற்பத்தி, டீசல் இயந்திரங்கள், நுகர்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இயந்திரங்கள், உரம் போன்றவை ஏற்றுமதிப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.10.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 163
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 161

பரிசுக்குரியவர்:
எம். பைஸால்,
அல்-அஸ்ரப் மகா வித்தியாலயம், வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எல். றிஸ்னா, புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03. | யோ. ஹம்சானந்தி, பாலர் பாடசாலை, இறம்பைக் குளம், வவுனியா. |
| சி. வீணாதேவி, நு/அ/சென் மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | இ. ஜெனிட்டா, இந்து மகாவித்தியாலயம், பாண்டிருப்பு-01, கல்முனை. |
| வி. லசாந், டிரினிடி கல்லூரி, கண்டி. | எஸ். அர்ச்சனா, புனித சிசிலியா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| என். ரிஷாதா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | வி. தினேஸ், நு/ கொட்டகலை, த.ம.வி., கொட்டகலை. |
| சிவநேசராசா வியூகரன், சிவானந்த வித்தியாலயம், கல்லடி, உப்போடை. | பாத்திமா ருஸ்னா ரசீம் கான், பா.ம.ம. வித்தியாலயம், புத்தளம். |

## புதுமை நட்பு

தென் அமெரிக்காவில் உள்ள ஈக்குவடோர் நாட்டில் வெள்ளை எறும்பு மரம் என்ற ஒரு வகை மரம் உள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் 'செக்ரோபியா அல்பிடா'. இந்த மரத்தில் எப்போதும் எறும்புகள் அதிகமாக இருக்கும். யாராவது இந்த மரத்திற்குக் கிட்ட வந்தால் படையெடுத்து விரட்டிவிடும். பிற செடி, கொடிகளைக் கூட இந்த மரத்தைச் சுற்றி வளரவிடாது. ஈக்குவடோரில் இந்த மரத்தில் மட்டுமே எறும்புகள் வாழும்.



## துதிக்கை மீன்

துதிக்கை மீன் என்று ஒரு வகை மீன் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அதிகம் இருக்கும். இது அலைகளால் மோதப்பட்டுக் கரையில் கும்பல் கும்பல்களாக வந்துவிழும்.



இதன் உடல் முழுவதும் எலும்புக் கவசத்தால் மூடியிருக்கும். இந்த எலும்புக் கவசத்தில் துளை போல் ஒன்று இருக்கும். அதனுள் வாய் இருக்கும். துடுப்புகள், வால்பகுதி எல்லாம் எலும்புக் கவசத்தின் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். சிலவகை துதிக்கை மீன்கள் எதிரிகளால் தொல்லை ஏற்படும்போது விஷ திரவம் ஒன்றை வெளியேற்றும். அது நீரில் பரவி எதிரிகளைத் துரத்தும்.

## போன்சாய்

'போன்சாய்' என்றால் என்ன?
பெரிய மரங்களின் உருவத்தைச் சுருக்கி, அவற்றைச் சிறிய தொட்டிகளில் சிறிய வடிவமாக வளர்ப்பது ஆகும். 'போன்சாய்' என்றால் 'தொட்டிகளில் அல்லது ட்ரேயில் வளர்த்தல்' என்று பொருள். இது ஒரு சீனக்கலை.

'போன்சாய்' மரம் பெரிய மரங்களை ஒத்திருக்குமா?
ஆம். உருவம் மட்டுமே சிறியதாய் இருக்கும். மற்ற எல்லா அம்சங்களும் பெரிய மரத்தையே ஒத்திருக்கும் இவையும் பூக்கும், காய்க்கும்.



இது எப்படி வளர்க்கப்படுகிறது?
விதை மூலமாகவோ அல்லது மற்றொரு மரத்தின் கிளையை வெட்டி வேறொரு தொட்டியில் வைத்தோ வளர்க்கப்படுகிறது.

மரத்தின் வளர்ச்சி எப்படித் தடை செய்யப்படுகிறது?
வேர்கள், கிளைகள் போன்றவற்றை அடிக்கடி வெட்டுதல், மரத்தை வேறு தொட்டிகளுக்கு மாற்றுதல் என்று தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் மரம் குள்ளமாகவே இருக்கும்.

இதைச் செய்வதற்கு அதிக கவனம் தேவையா?
ஆம். தண்ணீர் ஊற்றுதல், உரமிடுதல், வேறு தொட்டிக்கு மாற்றுதல் போன்றவற்றைக் கவனமாகச் செய்ய வேண்டும்.

## ஒரு வரிச் செய்திகள்

* ஸெரியம் என்ற உலோகத்தை நகத்தில் கீறினாலே தீப்பற்றிக் கொள்ளும்.
* உலகில் ரஷ்ய கடற்படைதான் மிகப்பெரியது.
* ஆகஸ்ட்- 5ம் திகதி ஜப்பானில் 'மீன்கள் தினம்' ஆகும்.
* உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தை வரைந்து முடிக்க 6 ஆண்டுகள் ஆனதாம்.
* உலகிலேயே மிகப்பெரிய பூப்பண்ணை நெதர்லாந்தில் உள்ளது.
* சோமாலிய நாட்டில் உள்ள சிங்கங்களுக்குப் பிடரி மயிர் கிடையாது.
* மிகப் பெரிய வாயுள்ள விலங்கு நீர் யானை.
* முதன் முதலாக அஞ்சலட்டையை அறிமுகப்படுத்திய நாடு அவுஸ்திரேலியா.

## பழைய கால்வாய்

இங்கிலாந்தில் முதன் முதலில் பல கால்வாய்களை ஏற்படுத்தி நீர்வழிப்போக்குவரத்தை அதிகப்படுத்தியவர்கள் கிரேக்கர்கள். கி.மு. 120ம் ஆண்டு வெட்டப்பட்ட 17 கிலோ மீட்டர் கால்வாய் இன்றும் இங்கிலாந்தில் நல்ல நிலையில் புழக்கத்தில் உள்ளது.



www.padippakam.com

அசத்தல்

# மறுபடி தா!

**இதுவரை** மதன்-கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரியகீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கிறாள். கொலைப்பழி மதன் மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்துரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற்கரையில் காதலி கீதாவை அழைத்து கொலைசெய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத்துரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மூலமாக மதன் விடுதலையாகிறான்.

மதனுக்கு மனச்சாட்சி உறுத்துகிறது. காதலி கீதா கொலைக்கு மரியகீதாவின் கொலைதான் மூலகாரணம்; அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடித்தால் மட்டுமே மனநிம்மதி கிடைக்கும் எனக் கூறும் மதன் துப்பறியும் நிறுவனமொன்றை நாடுகிறான்.

**இனி..**

மர்மக் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

"**சு**சி, வர வர நீ நடந்துக்கிற விதம் எனக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கலை."

"அப்படி என்ன செஞ்சேன் பரத்?"

"கை கழுவ போனப்போ பேரரை தனியா கூப்பிட்டு என்ன பேசினே?"

"அதுவா? அஞ்சு ரூபா டிப்ஸ் கொடுத்தேன்."

"அஞ்சு ரூபா டிப்ஸா? எதுக்கு? அதுவும் ரகசியமா?"

"நமக்கு எவ்வளவு பில் வந்துச்சி...?"

"நீ தானே கொடுத்தே....நான் கவனிக்கலை."

"மூணு ரூபா நாப்பது காசு வந்திச்சி."

"அடிப்பாவி! முப்பது ரூபாய்க்கு சாப்பிட்டிருப்போமே....."

"அதுக்குதான் டிப்ஸ். ஒரு சின்ன அட்ஜஸ்ட்மெண்ட்."

"அதுக்குதான் பிடிவாதமா இந்த ஹோட்டலுக்கு அழைச்சுட்டு வந்தியா? திஸ் ஈஸ் டூ பாட் சுசி. ஏன் இந்த திருட்டுத்தனம்?"

"இது திருட்டு இல்லை பரத். த்ரில். ஒரு வகை சிக்னெஸ்."

"எனக்குப் பிடிக்கலை. பாரு நீ ஏமாத்தின தொகைக்கு ரெண்டு மடங்கு தண்டச் செலவு செய்வே."

"சாபமா முனிவரே?"

"திரும்பிப் பார்க்காம ஓட்டு. சுசி மஞ்சள் கோட்டை கிராஸ் பண்ணாதே......"

"நெவர் மைண்ட் சார். யாரையும் காணோம்."

"காணமா? இதோ வந்துக்கிட்டிருக்கார் உன் அங்கிள். டிராஃபிக் சார்ஜெண்ட்."

"ஹேய் மாடம்! ஸ்டாப் ஸ்டாப்!"

"நிறுத்திடு சுசி."

"பேர் சொல்லுங்க."

"சார், சார்.....நாங்க அர்ஜண்ட்டா போக வேண்டியிருந்ததாலே கிராஸ் பண்ணிட்டேன். ஸாரி சார். விட்டுடுங்க."

"அப்படி என்ன அர்ஜெண்ட்?"

"எனக்கு பிரசவ வலி சார்."

"வாட்?"

"இல்லை. அபார்ஷன் சார்."

"உளறாதிங்க. டிரைவிங் லைசென்ஸ் இருக்கா?"

"எதுவும் கிடையாது சார். நீங்க கேஸ் எழுதிக்கங்க சார். அட்ரஸ் சொல்றேன். சுசிலா....."

"யு....யு..."

"யுதான் இனிஷியலா?"

"சார்.....ப்ளீஸ் என் கண்ணைப் பாருங்க சார்."

"கண்ல என்ன?"

"காந்த சக்தி? ப்ளீஸ்...கேஸ் வேணாம் சார்."

"ஸ்டுப்பிட்! ஹேவ் திஸ். மொபைல் கோர்ட் வரும் ஃபைன் கட்டிட்டு போங்க."

"எக்ஸ்கியூஸ் மி சார்ஜெண்ட். எவ்வளவு ஃபைன் கட்ட வேண்டிவரும்."

"அம்பது ரூபா."

"அதாவது ஏமாத்தின தொகையோட ரெண்டு மடங்கு."

"வாட்?"

"உங்களுக்குப் புரியாது. நீங்க போங்க சார்."

"பரத் ரொம்ப மோசம் நீங்க. வாயை திறந்திருந்தா இந்த ஃபைனை தவிர்த்திருக்கலாம்."

"ஹோட்டல்ல நீயும் அந்த திருட்டுத்தனத்தை தவிர்த்திருக்கலாம். ரைட் இப்போ அப்படி ஓரமா நின்னு ஃபைன் கட்டிட்டு வா. நான் ஒரு ஆட்டோ பிடிச்சி ரோஸ்லின் வீட்டுக்குப் போறேன்."

"ரோஸ்லின்?"

"இப்போ கமிஷனர் ஆஃபிஸ்ல அட்ரஸ் வாங்கினமே..."

"என்ன பரத் இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போறிங்க?"

"இந்தா அட்ரஸ். வந்து சேரு. ட்ரிப்பிளிகேன். ஆட்டோ! ஆட்டோ!"

□□★★□□

"**தோ**த்திரம் தோத்திரமே....."

"டேப்பை நிப்பாட்டு ரோஸ்லின். வாசல்ல யாருன்னு பாரு."

"யாருங்க, என்ன வேணும்?"

"மிஸ்டர் ராஜசேகர் வீடு இதுதானே?"


"ஆமாம். நீங்க யாரு?"

"நான் ஒரு வக்கீல். கதவைத் திறங்க. கொஞ்சம் பேசணும். இருக்காரா?"

"இருக்காரு. ராஜ். உங்களைத்தான் பார்க்க வந்திருக்காங்க. உள்ளே வாங்கசார்."

"யாரு? செருப்பைக் கழட்ட வேணாம். சும்மா வாங்க. உக்காருங்க."

"நீங்கத்தான் மிஸ்டர் ராஜசேகர் இல்லையா?"



"ஆமாம்."

"இவங்க உங்க மிஸஸ்?"

"ஆமாம்."

"என் பேர் பரத். மரியகீதாவோட கொலை செஞ்ச நபரை பொலிஸ் தன் வழி வகைகளிலே கண்டு பிடிக்க முயற்சிகள் செய்துகிட்டு இருக்கு. தனிப்பட்ட முறையிலே நானும் கொஞ்சம் முயற்சி பண்ணலாம்னு இருக்கேன். உங்க ஒத்துழைப்பு வேணும்."

"ரோஸி காப்பி கொண்டா."

"கொஞ்ச நேரம் போகட்டும் சார். இந்த வீட்ல நீங்க ரெண்டே பேர்தானா?"

"ஆமாம்."

"எப்போ மேரெஜ் ஆச்சி?"

"ஆறு வருஷம் ஆச்சி."

"குழந்தைங்க...."

"கர்த்தர் அருள்றப்போ அருளட்டும்னு காத்திருக்கோம்."

"மேடம், மரியகீதா உங்க கூடப்பிறந்த தங்கையா?"

"ஆமாம் சார்."

"உங்களுக்கு எந்த ஊரு?"

"மங்களூர்."

"எத்தனை தங்கைகள். உங்களுக்கு?"

"ஒரே ஒருத்திதான் சார்."

"வேற கூடப் பிறந்தவங்க?"

"ஒரு அண்ணன் இருக்கான், ஜோசப்ன்னு!"

"எங்கே?"

"மங்களூர்லதான். மோட்டார் மெக்கானிக். உதவாக்கரை. குடும்பத்திலே ஒட்டுதல் இல்லை. மரியகீதா கொலை செய்தி படிச்சேன். இதான் தங்கச்சியை பொறுப்பா பார்த்துக்கிட்ட லட்சணமான்னு லெட்டர் எழுதினான். நேர்ல கூட வரலை."

"அப்பா, அம்மா?"

"இறந்துட்டாங்க."

"எத்தனை வருஷமா மரியகீதா உங்களோட இருந்தாங்க?"

"நாலு வருஷமா."

"அதுக்கு முன்னாடி?"

"கொச்சின்ல ஒரு ஹாஸ்டல்ல தங்கி ஒரு டெம்பரரி ஜாப் பாத்தா. திடீர்னு லூஸ்ட் பண்ணிட்டாங்க. இங்கே வந்தா."

"சார், நீங்க எந்தக்கம்பெனில ரெப்?"

"பிடில்-சாயர். மாசத்திலே அஞ்சு நாள் வீட்ல இருந்தா பெரிசு. செய்தி வந்தப்போ நான் கும்பகோணத்திலே இருந்தேன்."

"மரியகீதா கொலை சம்பந்தப்பட்ட அத்தனை விபரங்களும் பொலிஸ் டிப்பார்ட்மெண்டை கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் வந்திருக்கேன். மதன்னு ஒருத்தர் மேலே பொலிஸ் வழக்குபோட்டு தோத்துப் போனதும் தெரியும். மரியகீதா யாரையோ நேசிச்சா, ஆனா, அது யாருன்னு விபரம் தெரியாதுன்னு கோர்ட்ல விபரம் சொல்லியிருக்கிங்க. போலிஸ் கணிப்புப்படி அந்த காதலன் தான் மரியகீதாவுக்கு கர்ப்பம் கொடுத்தவன். கொலையும் செஞ்சவன். போலிஸ் உங்க ரெண்டு பேரையும் துருவித் துருவி சேகரிச்ச விவரங்களை வச்சிக்கிட்டு மரியகீதா எங்கெங்கே போனா, யாரோடெல்லாம் பழகினான்னு விசாரிச்சிக்கிட்டிருக்காங்க. அதே முறையிலே தான் நானும் விசாரணையிலே இறங்கலாம்னு இருக்கேன். அவங்களுக்குக் கிடைக்காத சில தகவல்கள் எனக்குக் கிடைக்கலாம். அதே மாதிரி.... மரியகீதாவோட ரூமை போலிஸ் துப்புரவா பார்த்திருக்கும். இருந்தாலும் நானும் ஒரு தடவை பார்க்க விரும்பறேன். உங்களுக்கு மறுப்பு இல்லையே.....?"

"இல்லை சார். இன்னும் எத்தனை பேர் வேணும்னாலும் வாங்க. ஒத்துழைக்கத் தயாரா இருக்கோம். குற்றவாளி கிடைச்சா போதும். போலிஸ் பார்த்துட்டுப் போனபடியே இருக்கு. ரூம்லே நாங்க அப்புறம் நுழையவும் இல்லை. எதையும் கலைக்கவும் இல்லை. வாங்க."

"இந்த பாசி மணிடிசைன் அவ செஞ்சி மாட்டினதுதான் சார்."

"ஜன்னல்களை திறந்து விடுங்க. என்னங்க ஒரே ரஜனிகாந்த் படமா இருக்கு?"

"ரஜனிகாந்த்ன்னா அவளுக்கு வெறி சார்."

"நாடகங்களிலே நடிப்பாங்க, இல்லே?"

"அற்புதமா நடிப்பா. எஸ்.வி. சேகர் ட்ரூப்ல பர்மனெண்ட் ஆர்ட்டிஸ்ட்டா சேர்த்துக்கறதா சொல்லியிருந்தாங்க சார். படிப்படியா டி.வி. சீரியல், சினிமான்னு எங்கேயோ போயிட்டிருப்பா சார். சச் ஏ சார்மிங் ஃபிகர். போட்டோ பார்த்திருக்கிங்களா?"

"பார்த்தேன்- பிணமாத்தான்."

"இதோ பாருங்க. இதான் மரியகீதா. பத்தொம்போது வயசுதான்னா நம்புவிங்களா?"

"கஷ்டமாத்தான் இருக்கு. இதென்னங்க ஆஷ்ட்ரே எல்லாம் இருக்கு?"

"எவ்வளவோ சொல்லிப் பார்த்தும். அந்த ஒரு கெட்ட பழக்கத்தை நிறுத்த முடியல சார். ஆம்பளை மாதிரி குடிப்பா. ரோஸி, வாசல்ல யாருன்னு பாரு. சில சமயம் கஞ்சாவும் குடிப்பா."

"ஐ.சி. கேரக்டர் எப்படிங்க ராஜசேகர்? சும்மா சொல்லுங்க?"

"நாடகத்திலே நடிக்கிறவ. கொஞ்சம் சோஷியல் டைப் வேற. ஆம்பளைங்களைத் தொட்டுப் பேசுவா. அதுக்காக கேரக்டர் மோசம்னு சொல்லிட முடியாது."

"டைரி எழுதற பழக்கம் உண்டா?"

"ம்கூம்."

"ஒவ்வொரு டிராயர்லயும் மேக்கப் சாமான் தான் இருக்கு. , மரியகீதாவுக்கு தபால்கள் வருமா?"

"ம்கூம். வந்ததில்லை. என்ன ரோஸி, யாரு?"

"சுசிலான்னு சொல்றாங்க. அவரைப் பார்க்கணுமாம்."

"உள்ளே வரச் சொல்லுங்க. நம்மாள் தான். இது அட்டாச்ட், பாத்தா?"

"ஆமாம். வொயிட் வாஷ் பண்ணி நாளாச்சு."

"என்ன சுசி, எவ்வளவு ஃபைன்?"

"என்கூட பேசாதிங்க!"

"ஒக்கே சுசி, இதான் மரியகீதாவோட ரூம். லேடீஸ் ரூம் பத்தி ஒரு லேடி நுணுக்கமா ஆராயலாம். பாரு, ஏதாச்சும் கிடைக்குதான்னு. வாங்க ராஜசேகர், நாம ஹாலுக்கு போய் பேசலாம்."

"ரோஸி, ரெண்டு காபி போடு. இப்போ சாப்பிடலாமா?"

"சாப்பிடலாம். மரியகீதா லவ் விவகாரம் உங்களுக்கும் தெரியாதா சார்?"

"தெரிஞ்சிருந்தா பொலிஸ்ல சொல்லியிருப்பேனே. ரோஸி என்கிட்டே கூட சொல்லலை."

"மரியகீதா பழகின ஆண்கள்ன்னு மனோகர், கருணாகரன், சுபாஷ்ன்னு மூணு பேரை குறிப்பிட்டு போலிஸ்ல சொல்லியிருக்கிங்க. மூணு பேருமே நாடக சம்மந்தப் பட்டவங்கதானா?"

"மனோகர் ஒரு நாடக கம்பெனி வச்சிருக்கார். சுபாஷ் அடையாறு ஃபிலிம் இன்ஸ்டிடியுட் டைரக்ஷன் கோர்ஸ் ஸ்டூடண்ட். கருணாகரன் ஒரு டிராமா ஆக்டர். போலிஸ் அவங்களை விசாரிச்சுட்டதா சொன்னாங்களே......"

"யெஸ். விசாரிச்சுட்டாங்க. அவங்கமேல சந்தேகப்படும்படியா எதுவும் இல்லையாம்."

"ராஜசேகர்சார்! குட் ஈவினிங். மூணு தடவைவந்தேன். நீங்க ஊர்ல இல்லைன்னுட்டாங்க."

"எக்ஸ்க்யூஸ் மி சார். என் ஃபிரண்டு. ஒரு நிமிஷம் பேசிட்டு வந்துடறேன்."

"டேக் யுவர் ஒன் டைம்."

"என்னப்பா? நான் அப்புறமா உன்னை வீட்டுல வந்து சந்திக்கிறேன்."

"அதில்லை சார். நான் எதுக்கு வந்தேன்னா...."

"எதுவா இருந்தாலும், நான் அப்புறம் வந்து பேசிக்கிறேன். போய்ட்டு வாப்பா."

"நீங்க உங்க சௌகரியத்துக்கு எப்ப வேணாலும் குடி வாங்க. ஆனா....."

"என்னய்யா சுத்த அர்த்தங்கெட்ட ஆளா இருக்கே. வீட்ல விருந்தாளி வந்திருக்காங்க, பேசிக்கிட்டிருக்கேன். நீ போய்யா. அப்புறம் வந்து பார்க்கறேன்னு சொல்றேனில்லே....."

"சரி சார், அப்போ நான் எதிர் பார்ப்பேன். அவசியம் வாங்க. என்னைத் தொலைச்சி எடுக்கறாங்க பார்ட்டி."

"சில பேருக்கு ஒரு தடவை சொன்னா புரியாது சார். இந்தாங்க காபி எடுத்துக்கங்க. என்ன பேசிக்கிட்டிருந்தோம்?"

"இங்கே சிகரெட் பிடிக்கலாமா?"

"பரவாயில்லை பிடிங்க."

"ஓகாட். தீர்ந்துடுச்சி. பக்கத்திலே பெட்டிக் கடை இருக்கா சார்?"

"தெரு முனையிலே இருக்கு."

"ஒரு நிமிஷத்திலே வாங்கிட்டு வந்துடறேன்."

"ஹலோ! உங்களைத்தான் சார் உங்களைத்தான் ஹலோ!"

"என்னையா?"

"ஆமாம், கொஞ்சம் நில்லுங்க."

"என்ன?"

"நீங்கதானே இப்ப மிஸ்டர் ராஜசேகர் கிட்டே பேசிட்டு வந்திங்க?"

"ஆமாம், ஏன்?"

"நீங்க அவருக்கு ஃபிரெண்டா?"

"இல்லையே...."

"நீங்க யாரு?"

"வீடு புரோக்கர் சார், என்ன விஷயம்?"

"எப்படி, வாங்க, விற்க.... உதவுவிங்களா?"

"இல்லை சார். வாடகைக்கு பிடிச்சிக் கொடுப்பேன்."

"ராஜசேகர்கிட்டே என்ன பேசினிங்க?"

"எதுக்கு விசாரிக்கிறிங்க நீங்க?"

"நான் போலிஸ் டிபார்ட்மெண்ட். கேள்வி கேக்காம பதில் சொன்னா தேவலை."

"அந்தாள் கொழுந்தியா கொலை விஷயமா விசாரிச்சிட்டிருக்கிங்களா? அதான் அப்படி என்னை விரட்டினாரா?"

"சொல்லுங்க. ராஜசேகர்கிட்டே என்ன பேசினிங்க இப்போ?"

"மாம்பலத்திலே ஒரு வீடு வாடகைக்குப் பிடிச்சி கொடுக்கச் சொன்னார். நானும் பிடிச்சிக் கொடுத்தேன். வீடு பிடிச்சி ஆறு மாசமாச்சி. அட்வான்ஸ் கொடுத்ததோட சரி. குடியும் வரலை. ஆறு மாச வாடகையும் கொடுக்கலை. நீதானேப்பா பேசி விட்டேன்னு வீட்டுக்காரன் என்னை உலுக்கறான்."

"சரி, ராஜசேகர் இப்போ இருக்கிறது சொந்த வீடு தானே?"

"ஆமாம், இப்பதான் மூணு வருஷம் முன்னாடி இடம் வாங்கி கட்டிக்கிட்டார்."

"அப்புறம் எதுக்கு மாம்பலத்திலே வீடு?"

"அது தெரியலை நமக்கு. சொன்னார் பிடிச்சிக்கொடுத்தேன். இன்னொரு விஷயமும் சொன்னார்."

"என்ன?"

"நான்வீடு பிடிக்கச் சொன்னேன்னு என் வைஃப்கிட்டே சொல்லாதேன்னார்."

"ஐ.சி. ரைட்டு. ரொம்ப தேங்க்ஸ் நீங்க போகலாம், உங்க அட்ரசைச் சொல்லிட்டு."

☆☆☆

"**எ**ன்ன மிஸ்டர் ராஜசேகர், உங்க தெரு சுத்த மோசமா இருக்கு."

"ஏன் சார்."

"அஞ்சு ரூபா நோட்டுக்கு சில்லறை வாங்க எட்டு கடை ஏறி இறங்க வேண்டியதாய் போச்சு. அப்புறம்..... செய்தி வந்தப்போ நீங்க எங்க இருந்ததா சொன்னிங்க?"

"கும்பகோணம்."

"எங்கே தங்கியிருந்திங்க?"

"ஏ.ஆர்.ஆர்.ஹோட்டல்ல ரூம் நம்பர் 107."

"உக்காருங்க மேடம். நிக்கிறிங்களே.... சுசி போலாமா?"

"இன்னும் ரெண்டு நிமிஷத்திலே வந்துடறேன் பரத். ப்ளீஸ் வெய்ட்."

"மேடம், இந்த விசாரணை தொடர்பா மறுபடி வருவேன். வரலாமில்லையா?"

"தாராளமா வாங்க."

"இது சொந்த வீடா?"

"ஆமாங்க. இப்பதான் மூணு வருஷமாச்சி கட்டி."

"சின்ன இடத்திலே கச்சிதமா பிளான் செஞ்சி கட்டிருக்கிங்க."

"இவரே பிளான் போட்டார் சார்."

"பரவாயில்லையே. நல்லாத்தான் பிளான் போட்டிருக்கார். வாடகைக்கு விட்டால் ரெண்டாயிரம் ரூபாய்க்குக்கூட வர ஆளிருக்கு."

"அவ்வளவு தருவாங்களா?"

"தாராளமா. எல்லா வசதியும் இருக்கே. மாம்பலம் மாதிரி ஏரியால கொஞ்ச வாடகைக்கு ஒரு வீடு பிடிச்சிக்கிட்டு, இதை வாடகைக்கு விட்டா இதுவே கூட ஒரு வருமானம் ஆய்டும். இல்லை சார்?"

"இதே யோசனையை இவர் கிட்டே நான் சொன்னேன். இவர் வேணாம்னு சொல்லிட்டார். மாசத்திலே இருபத்தஞ்சி நாள் இவர் டூர் போய்டறார். நானும், வேலைக்காரியும் தான் இங்கே இருக்கோம்."

"போலாமா பரத்?"

"ரைட். நாங்க புறப்படறோம் சார். தாங்க் யு ஃபார் ஆல்."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம்.பரமேஸ்வரன்.
வயது: 18
முகவரி: 995, செல்வநாயகபுரம், பிள்ளையார் கோவிலடி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.நிர்மலா.
வயது: 27
முகவரி: சி/3/6, கம்கருபுர, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: புவனேந்திரன் வேந்தன்.
வயது: 24
முகவரி: DILL STEINER STR-9, 75173 PFORZHEIM, GERMANY.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எம்.முபாரக்.
வயது: 22
முகவரி: பி.27 றுவைதா மன்சில், கொடேகொட. ஹெம்மாத்தகம.
பொழுது போக்கு: கிரிக்கெட், முத்திரை சேகரித்தல்.



பெயர்: எம்.நஸ்ரீன்.
வயது: 17
முகவரி: பழைய தபால் நிலைய வீதி, காத்தான்குடி.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம்.பாரிஸ்.
வயது: 25
முகவரி: P.O.BOX-90007. SULAIBIKHAT, KUWAIT.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: எம்.நௌபர்.
வயது: 22
முகவரி: S.L.HOUSE-NO-02, ROOM NO-40, P.O.BOX-1679, BURAYDAH, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: எம்.றியால்.
வயது: 23
முகவரி: சி.28/1, ஹபுகஸ்தலாவை.
பொழுது போக்கு: முத்திரை, நாணயம் சேகரித்தல்.

பெயர்: ரி.ஜெகதலக்குமரன்.
வயது: 18
முகவரி: பாடசாலை வீதி, மன்னம்பிட்டி.
பொழுது போக்கு: ரீ.வி, பத்திரிகை.

பெயர்: ஏ.பாலகுமார்.
வயது: 24
முகவரி: 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: கே.கணேஷன்.
வயது: 30
முகவரி: P.O.BOX-1252, CODE NO-211, SALALAHA M.O.D.E.S, OMAN.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: எம்.முகமட் அஸ்லம்.
வயது: 15
முகவரி: நிக்கவெவ-02, கணேவல்பொல.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

**மக்சீம் கார்க்கி**

## 98

அவள் புன்னகை செய்தாள். ஆனால் அந்தப் புன்னகையால் லூத்மீலாவின் முகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. அந்தப் பெண்ணின் அடக்க குணத்தால் தனது மகிழ்ச்சியெல்லாம் அடைபட்டு ஆழ்ந்து போவது மாதிரித் தாய்க்குத் தோன்றியது. அந்தக் கடின சித்தக்காரியின் இதயத்திலே தனது உணர்ச்சித் தீயை மூட்டி விடத்தான் வேண்டும் என்ற உறுதியான ஆர்வ உணர்ச்சி தாயின் மனத்தில் திடீரெனத் தோன்றியது. அந்தக் கடின சித்தத்தையும் வசப்படுத்தி, ஆனந்த பரவசமான தன் இதயத்தின் உணர்ச்சிமாகப் பெருகி வளர்ந்து, அங்கு வசந்த கால சூரியனின் சிருஷ்டி சக்தியைக் குடியேற்றி ஒளி ஊட்டின; என்றென்றும் வளர்ந்தோங்கும் பிரகாசத்தோடு அவை அவள் இதயத்தில் நின்று நிலைத்து ஒளி செய்தன.

"மக்களுக்கு ஒரு புதிய கடவுளே பிறந்து விட்டது போல் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும்-எல்லாம், எல்லோருக்காகவும்- ஒவ்வொன்றும்! இப்படித்தான் நான் உங்களைப் புரிந்து கொள்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால், நீங்கள் அனைவரும் தோழர்கள்; நீங்கள் அனைவரும் அன்பர்கள்; நீங்கள் அனைவரும் சத்தியம் என்னும் தாய்க்குப் பிறந்த ஒரே வயிற்றுப் பிள்ளைகள்!"

**அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் அதே இடத்தில் நின்றிருந்தான். அவள் பெஞ்சை நோக்கிச் சென்று மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் அமர்ந்தாள். இரண்டு முறை அம்மனிதனைப் பார்த்ததாக அவளுக்கு நினைவு வந்தது.**

களை அந்தக் கடின சித்தமும் பிரதிபலிக்கும்படி செய்துவிட வேண்டும் எனத் தாய் விரும்பினாள். அவள் லூத்மீலாவின் கைகளை எடுத்து அவற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டே பேசினாள்:

"அன்பானவளே, சகல மக்களுக்கும் ஒளியூட்டுவதற்கு ஒன்று இருக்கிறதென்பதை, அந்த ஜோதியைச் சகல மக்களும் ஏறிட்டு நோக்கும் காலம் வரத்தான் செய்யும் என்பதை, அந்த ஜோதியை அவர்கள் இதயபூர்வமாக வரவேற்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க எவ்வளவு நன்றாயிருக்கிறது!"

தாயின் அன்பு ததும்பும் அகன்ற முகத்தில் ஒரு நடுக்கம் குளிர்ந்தோடிப் பரந்தது. அவளது கண்கள் பிரகாசம் எய்தின. புருவங்கள் அந்தப் பிரகாசத்தை நிழலிடுவது போலத் துடிதுடித்தன. பெரிய பெரிய எண்ணங்களால் அவள் சிந்தை மயங்கிப் போயிருந்தாள்; அந்த எண்ணங்களுக்குள் தனது இதயத்துக்குள்ளே உள்ள சகல நினைவுகளையும், தான் வாழ்ந்த வாழ்வனைத்தையும் பெய்து வைத்தாள். அந்த எண்ணங்களின் சாரத்தை அவள் ஸ்படிக ஒளிவீசும் உறுதியான வார்த்தைகளாக வடித்தெடுத்தாள். அந்த வார்த்தைகள் அவளது இலையுதிர்கால இதயத்தில் பிரமாண்ட

மீண்டும் அவள் உணர்ச்சியாவேசத்துக்கு ஆளாகிவிட்டாள். அவள் பேச்சை நிறுத்தி மூச்செடுத்தாள். தழுவப்போகிற மாதிரி தனது கைகளை அகல விரித்துக் கொண்டு பேசினாள்:

"அந்த வார்த்தையை-தோழர்கள் என்னும் அந்த வார்த்தையை-எனக்கு நானே சொல்லிக் கொள்ளும்போது, என் இதயத்திலே அவர்கள் அணிவகுத்துச் செல்லும் காலடியோசையை என்னால் கேட்க முடிகிறது."

அவள் தன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டாள். லூத்மீலாவின் முகம் சிவந்தது; உதடுகள் துடிதுடித்தன; தெள்ளத் தெளிந்த பெருங் கண்ணீர்த் துளிகள் அவளது கன்னத்தில் வழிந்தோடின.

தாய் அவளைத் தன் கரங்களால் இறுகத் தழுவினாள்; மௌனமாகப் புன்னகை செய்தாள்; தனது இதயத்தின் வெற்றியை எண்ணி அன்போடு மகிழ்ந்து கொண்டாள்.

அவர்கள் பிரியும்போது, லூத்மீலா தாயின் முகத்தைப் பார்த்து மெதுவாகச் சொன்னாள்:

"உங்களருகில் இருப்பது எவ்வளவு நன்றாயிருக்கிறது தெரியுமா?"

☆ ✣ ☆

தாய் தெருவுக்கு வந்தவுடன், குளிர்ந்து விறைக்கும் வாடைக்காற்று அவளது உடம்பை இறுகப் பிணைத்து அவளது நாசியைத் துளைத்தது; ஒரு கணம் மூச்சையே திணற அடித்தது. அவள் நின்றாள்; சுற்றும் முற்றும் பார்த்தாள். பக்கத்து மூலையில் தொள தொளத்த தொப்பியோடு ஒரு வண்டிக்காரன் நின்று கொண்டிருந்தான். அதற்கு அப்பால் தெருக்கோடியில் கூனிக் குறுகி, தனது தலையை உள்ளிழுத்து தோள்களுக்குள் புதைத்தவாறே ஒரு மனிதன் நடந்து சென்றான்; அவனுக்கும் அப்பால் ஒரு சிப்பாய் தன் செவிகளைத் தேய்த்து விட்டவாறே ஓடிக்கொண்டிருந்தான்.

'அந்தச் சிப்பாயை எங்காவது கடைக்கு அனுப்பியிருப்பார்கள்' என்று அவள் எண்ணினாள். எண்ணிக் கொண்டே, தனது காலடியில் நசுங்கி நொறுங்கும் பனிக்கட்டிகளின் சத்தத்தைக் கேட்டவாறே நடந்து போனாள். அவள் ரயில் நிலையத்துக்கு நேரங்காலத்தோடேயே வந்து சேர்ந்து விட்டாள். அழுக்கும் அசுத்தமும் அடைந்திருந்த மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் அறையில் ஒரே ஜனக்கூட்டமாக இருந்தது. அங்கிருந்த தொழிலாளர்களை எல்லாம் குளிர் உள்ளே அடித்து விரட்டியிருந்தது. வண்டிக்காரர்களும், வீடு வாசலற்று கந்தல் கந்தலான உடையணிந்த அனாதைகளும் அங்கு நிறைந்திருந்தார்கள். அங்கு பிரயாணிகளும் இருந்தார்கள். சில விவசாயிகள், மென்மயிர்க்கோட் அணிந்த கொழுத்த வியாபாரி ஒருவன், ஒரு மதகுரு, அம்மைத் தழும்பு முகங்கொண்ட அவரது மகள், ஐந்தாறு சிப்பாய்கள், நிலை கொள்ளாது தவிக்கும் சில அங்காடிக்காரர்கள்-இவர்கள் தான் அங்கிருந்தார்கள். ஜனங்கள் தேநீர் குடித்தார்கள்; புகை பிடித்தார்கள்; ஓட்கா அருந்தினார்கள்; சளசளத்து பேசிக் கொண்டிருந்தார்கள்; சிற்றுண்டிச்சாலையின் அருகே யாரோ குபுக்கென்று வாய் விட்டுச் சிரித்தார்கள். அவர்களது தலைக்கு மேலாக புகைச் சுழல் வட்டமிட்டுச் சுழன்றது. கதவுகளைத் திறக்கும் போது அவை முனகிக் கீச்சிட்டன; கதவுகளை அடைக்கும் போது ஜன்னல் கண்ணாடிகள் நடுநடுங்கி கட கடத்து ஓசை செய்தன. அந்த அறையிலே சுருட்டு நாற்றமும் கருவாட்டு நாற்றமுமே நிறைந்திருந்தன.

தாய் வாசல் பக்கத்தில் ஓர் எடுப்பான இடத்தில் உட்கார்ந்து காத்திருந்தாள். எப்போதாவது கதவு திறக்கப்பட்டால் அவளது முகத்தில் குளிர்ந்த காற்று உறைக்கும். அந்தக் குளிர் அவளுக்கு இன்பம் அளித்தது; அப்படிக் காற்று உறைக்கும் போதெல்லாம் அவள் அதை இழுத்துச் சுவாசித்து அனுபவித்தாள். ஜனங்கள் பெரும்பாலோர் மூட்டை முடிச்சுக்களோடும் கனத்த மாரிக்காலத் துணிமணி அணிந்து உள்ளே வந்தார்கள். அவர்கள் கதவு வழியே நுழைய முடியாமல் திண்டாடினார்கள்; திட்டிக் கொண்டார்கள். தரை மீதோ பெஞ்சின் மீதோ சாமான்களைத் தாறுமாறாகப் போட்டுவிட்டு, தமது கோட்டுக் காலரிலும் கைகளிலும் தாடி மீசைகளிலும் படிந்துகிடக்கும் பனித்துகள்களைத் தட்டி விட்டார்கள்.

ஒரு தோல் பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு ஓர் இளைஞன் உள்ளே வந்தான்; சுற்றுமுற்றும் பார்த்தவாறே அவன் தாயை நோக்கி நேராக வந்தான்.

"மாஸ்கோவுக்கா?" என்று கேட்டான்.

"ஆமாம். தான்யாவைப் பார்க்கப் போகிறேன்" என்றாள் அவள்.

"ஆஹா!"


அவன் அந்தத் தோல் பெட்டியை அவளருகிலே பெஞ்சின் மீது வைத்தான்; சிகரெட்டைப் பற்ற வைத்தான்; தன் தொப்பியை உயர்த்தி வைத்தான்; அடுத்த வாசல் வழியாகச் சென்று மறைந்தான். தாய் அந்தக் குளிர்ந்து போன தோல் பெட்டியைத் தட்டிக் கொடுத்துக் கொண்டாள். பிறகு அதன் மீது முழங்கையை ஊன்றிச் சாய்ந்தவாறே திருப்தியுணர்ச்சியோடு தன்னைச் சுற்றியுள்ள ஜனங்களைப் பார்த்தாள். ஒரு நிமிஷம் கழித்து அவள் அந்த இடத்தை விட்டு எழுந்து வெளி வாசல் புறத்துக்கு அருகிலுள்ள பெஞ்சை நோக்கி நடந்தாள். அவள் தலையை நிமிர்த்தி, தன்னைக் கடந்து செல்பவரின் முகங்களைக் கவனித்தவாறே, அந்தத் தோல் பெட்டியைக் கையில் சுமந்து கொண்டு நடந்து சென்றாள். பெட்டி ஒன்றும் அவ்வளவு பெரிதாகவோ கனமாகவோ இல்லை.

ஓர் இளைஞன் தனது குட்டையான கோட்டின் காலரைத் தூக்கி விட்டவாறே தாயின் மீது மோதினான். அவன் தன் கையால் தலையைத் தடவியவாறே பேசாமல் ஒதுங்கிச் சென்றான். அவனைக் கண்ட மாத்திரத்தில் அவனை எங்கோ பார்த்த மாதிரித் தோன்றியது; அவள் திரும்பிப் பார்த்தாள்; அவனும் தனது வெளுத்த கண்களால் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கூரிய பார்வை அவளது நெஞ்சைக் கத்திபோலக் குத்தியது; தோல் பெட்டியைப் பிடித்திருந்த அவளது கரம் பலமிழந்து தள்ளாடியது; திடீரென்று அந்தப் பெட்டியின் கனம் அதிகரித்துவிட்டது போல் தோன்றியது.

'இவனை நான் இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறேனே' என்று யோசித்தாள் அவள். தனது இதயத்திலே தோன்றிய புழுக்க உணர்ச்சியை அவள் வெளியேற்றி விட முனைந்தாள். தனது இதயத்தை மெதுவாக, எனினும் தவிர்க்க முடியாதபடி உறையச் செய்யும் அந்த உணர்ச்சியை அலசி ஆராய அவள் விரும்பவில்லை. அதை ஒதுக்கித் தள்ளினாள். ஆனால் அந்த உணர்ச்சியோ விம்மி வளர்ந்து அவளது தொண்டைக் குழிவரையிலும் முட்டிமோதி அவளது வாயில் ஒரு வறண்ட கசப்புணர்ச்சியை நிரப்பியது. அவள் தன்னை அறியாமலேயே அந்த மனிதனை மீண்டும் திரும்பிப்பார்க்க வேண்டும் என்ற ஆசைக்கு ஆளானாள். அவள் திரும்பினாள். அவன் அதே இடத்தில் கால்மாறி நின்றுகொண்டு, ஏதோ செய்ய எண்ணுவது போலவும் நின்றுகொண்டிருந்தான். அவனது வலது கை கோட்டுப்பித்தான்களுக்கிடையில் நுழைந்து போயிருந்தது. இடது கை கோட்டுப் பைக்குள் இருந்தது. எனவே அவனது வலது தோள் இடது தோளை விட உயர்ந்ததாகத் தோன்றியது.

அவள் பெஞ்சை நோக்கிச் சென்று மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும், தன்னுள் உள்ள எதுவோ நொறுங்கிப் போய்விடும் என்று பயத்தோடு உட்காருவது போல் ஓரிடத்தில் அமர்ந்தாள். வரும் துன்பத்தை உணர்த்தும் கூரிய முன்னுணர்வினால் கிளறப்பட்ட நினைவில், இரண்டு முறை அம்மனிதனைப் பார்த்ததாக, திடுமென்று அவளுக்கு நினைவு வந்தது. ரீபின் தப்பியோடும் போது நகரின் கோடியிலுள்ள வெட்ட வெளி மைதானத்தில் அவனை ஒரு முறை அவள் கண்டிருக்கிறாள்; இரண்டாவது முறையாக அவனை விசாரணையின் போது பார்த்திருக்கிறாள். ரீபின் தப்பியோடும்போது தன்னை விசாரித்த பொலிஸ்காரனுக்குத் தப்பான வழியைச் சுட்டிக் காட்டினாளே, அந்தப் பொலிஸ்காரனும் நீதிமன்றத்தில் இவன் பக்கத்தில் அப்பொழுது நின்று கொண்டிருந்தான். சரிதான். தன்னைப் பின் தொடர்ந்துதான் அவன் வருகிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்; தெளிவாக அறிந்து கொண்டாள்.

(தொடர்ந்து வரும்)



நீங்கள் அனைவரும் தோழர்கள்; நீங்கள் அனைவரும் அன்பர்கள்; நீங்கள் அனைவரும் சத்தியம் என்னும் தாய்க்குப் பிறந்த ஒரே வயிற்றுப் பிள்ளைகள்!

# மனிதர்களும் மனிதமும்

**ஷர்மிளா இஸ்மாயில் – கண்டி**



பாலு பத்து வயதிலேயே அன்பின் அம்மா இறந்து போனபின் தனிமை என்பதை முழுதும் உணர்ந்தான். எப்பவுமே அப்பாவுக்கு குடும்பத்தில்- அதுவும் இவன் மீது ஒட்டுதலே இல்லை.

குடிப்பதற்கும் ரேஸ் போட்டு குதிரை வாலை பிடிப்பதற்கும் நேரம் போதவில்லை அவருக்கு. 'அம்மா...' நினைக்கும்போது தொண்டை அடைத்துக் கொள்ளும் அவனுக்கு.

எத்தனை அன்பானவள். அவனில் எவ்வளவு பிரியம் வைத்திருந்தாள். ஒரே பிள்ளை, ஒரு மனைவி. நன்றாக வைத்துப் பராமரித்துப் பாதுகாக்கும் கடமையுணர்வில்லாத அப்பா. நினைக்கையில் எரிச்சல் வந்து நெஞ்சைப் பிறாண்டும்.

அம்மா இறந்து நாலைந்து மாதங்களிலேயே இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொண்டுவந்தவர். உடல் பருத்த- பார்வையில் ஈரமற்ற பெண்ணை சித்தி என்று சொல்லி அறிமுகப்படுத்திய கணங்களில் இதயம் முழுதாய் நொறுங்கிப் போனான்.

அம்மாவை வைத்த இடத்தில் சித்தியை வைக்க மனம் ஒப்பவில்லை. சித்தியும் கொடுமைக்காரிதான். இவனை ஒரு பொருட்டாக மதிக்கவேயில்லை. ஏதோ எடுபிடி வேலைக்காரன் என்ற அவளது கணிப்பு இவனுக்குப் புரிந்தது.

அப்பாவுக்கு இதனை எப்படி வெளிப்படுத்துவது எனப் புரியவில்லை. வெளிப்படுத்தினாலும் அதிக பலன் கிட்டாது என்பதை அத்தனை சிறிய வயதிலேயே உணர்ந்து தெளிந்தான்.

அவனுக்கு கோபம் வந்தது. அப்பா மீது, சித்தி மீது, உலகத்தின் மீது, விதியின் மீது அவனுக்கு பொல்லாத கோபம் வந்தது. வயதேற ஏற மனதில் வன்மம் வளர்ந்தது. கிடைத்த அன்பை- நேசத்தை தொலைத்து விட்டு இப்படியான வெற்று வாழ்வின்மீது வன்மம் பிறந்தது. அவனுக்கென்று இனி யாருமில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

வீட்டைவிட்டு அவனாகவே விலகிச் சென்றபோது யாருமே வருத்தப்படவில்லை. "தொலைந்தது சனியன்" என சித்தியின் வெறுப்பும் எரிச்சலும் உஷ்ண வார்த்தைகளாய் வெளிவந்தன.

உலகம் இத்தகையதா? பாலுவின் கேள்விக்கு விதம் விதமான பதில்கள் கிடைத்தன. முகங்களைப் போலவே மனிதர்களினதும் மனங்களும் வேறுபட்டு நிற்பதை அவன் நன்கு புரிந்து தெளிந்தான்.

நல்ல மனம் கொண்ட நண்பனொருவன் ரகுவைச் சந்தித்தான். ரகு வித்தியாசமானவன். பண்புகள் சிறந்த நல்ல மனிதாபிமானி. பாலுவை அவன் நண்பனாக அங்கீகரித்து ஒரு வேலையும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தான்.

**அப்பாமீது, சித்திமீது, விதியின்மீது அவனுக்கு பொல்லாத கோபம் வந்தது. வாழ்வின் மீதும் வன்மம் பிறந்தது.**

பாலுவுக்கு கண்ணீர் வந்தது. பந்த பாசங்கள் ஏதுமின்றி தனியாய்- தனிமையான வாழ்க்கையை அர்த்தமற்ற வாழ்க்கை என வெறுத்துப்போன சமயம் நட்பெனும் மலர் அவனுக்காகவே மலர்ந்ததில் மகிழ்ச்சியே.

அவசர அவசரமாகக் காலம் ஓடிக் கொண்டிருந்தது. "அப்பாவுக்கு சுகமில்லை யாம் படுத்த படுக்கையில் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்." செய்தி வந்தது. பாலுவின் மனமெங்கும் அலைகள். ஓயாது ஒலித்த அந்த சப்தம்- பாலு முறைத்துக் கொண்டான். "என்னை எதுக்காக பார்க்கணும் அவர்?" விட்டேற்றியாகக் கேட்டவன் வேறு பேசாது சென்றுவிட்டான்.

ரகு ஆறுதலாய்ச் சொன்னான், "என்ன இருந்தாலும் உன் அப்பா அவர். பழைய கோபதாபங்களை மறந்திடு பாலு. மனதில் வன்மம் வளர்ப்பது சரியில்லை. போனது போகட்டும். வாழ்க்கை ஒரு முறைதான். அதுல கோபதாபம், பழி வாங்கறவெறி, மன்னிக்க முடியாத குற்றம் என்பதெல்லாம் சரியில்லை. போ. அப்பாவப் பார்த்துட்டு வா. மன்னிச்சிடு; மறந்திடு."

பாலு ஏற்றுக் கொண்டான். சொல்வது ரகுவல்லவா? ஆனால் முகத்தில் ஒரு தீவிரம்.

போய்ப் பார்க்கையில் அப்பா போய் விட்டிருந்தார். சித்தி அவனைப் பார்த்து கதறினாள். மூன்று பிள்ளைகள். அத்தனையும் பெண்கள். சித்தி இனி என்ன செய்யப்போகிறாள்? யோசித்துவிட்டு கடமைகளை முடித்து வந்தான். "போகாதே பாலு. அவரும் போய்ட்டார். இனி எங்களுக்கு யாருமில்ல." பாலு மெதுவாக நடந்தான். கலங்கிய விழிகள்; ஆனால் கண்ணீர் விழவில்லை. "இனி எனக்கும் யாருமில்ல" மெதுவாகச் சொல்லிக் கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

# மௌன உடைவுகள்!

மானுடபுத்ரன்

**அ**க்கா அழுது கொண்டிருந்தா. அத்தான் நேற்றுத்தான் வீட்டுக்கு வந்துவிட்டுப் போயிருந்தார். அக்காவைப் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்; அழுது கொண்டுதான் இருப்பா. "ஏனக்கா அழுகிறாய்?" என்று கேட்டால் "ஒண்டுமில்லைத் தம்பி சும்மா தான்" என்று சொன்னாலும் சில வேளைகளில் கேவிக் கொண்டு சொல்லுவாள். "உன்ரை அத்தானை நினைச்சால் சிரிக்கவே முடியும்?". அத்தானில் என்றால் எனக்கு எந்தக் குறையையும் காண முடியவில்லை. மற்ற இன்னும் இருக்கிற நாலு அத்தான்மார்களில் இவர் எவ்வளவு நல்லவர்; தங்கம்.

அக்கா குமரிலை எண்டால் ஆரைக் கண்டாலும் சிரிப்பாள், எப்பவுமே அவள் அழுது நான் பார்க்கவில்லை. அவளும் சிரிப்பாள். மற்றவையையும் சிரிக்க வைப்பாள். என்ன கலகலப்பு. அக்காவைக் கண்டால் ஆரெண்டாலும் சிரிப்பினம், ஊரிலை தெரியாத ஆக்களில்லை. வயதுபோன ஆக்களுக்கும் அக்காவைத் தெரியும். "நீ சிரிச்சுக் கொண்டிரு. ஒரு வேலையும் செய்யாதை. சொன்னால் சிரிக்கிறவைக்கு ஆயுள் கூட எண்டு சொல்லு!" அம்மா அடிக்கடி இப்பிடிப் புறுபுறுத்தாவெண்டாலும் அக்கா சிரிப்பா. அவவுக்கு அதுமட்டும்தான் தெரியும்.

ஒருநாள் உப்பிடித்தான், ஏதோ பகிடி விட்டுச் சிரிக்கேக்குள்ளை வாய்க்குள்ளாலை ஒரு இலையான் போய் பிறகு செல்லையா டாக்குத்தரிட்டைக் கொண்டு போய் மூக்குக்குள்ளை ஏதோ மருந்து போட்டுத் தும்ம வைச்சுத்தான் வெளியிலை எடுத்தது.

கலியாணம் முடிச்சு கொஞ்ச நாள் நல்லாத்தான் இருந்தாள். நிவேதன் பிறக்கேக்குள்ளையும் நல்ல ஈடுபாடாய்த்தான் இருந்தாள்.

அத்தான் ஏன்தான் அவளைக் கவலைக்குள்ளாக்கிறார்? அவள் எப்பிடி அத்தானைக் கொண்டு கவலைப்படுகிறாள். எவ்வளவு யோசித்தாலும் விளக்கத்தில் வருகுதில்லை.

அத்தானுக்கு மாத்தளையிலை ஒரு மரக்காலையும் குருநாகலையிலை ஒரு சாப்பாட்டுக்கடையும் இன்னும் ஒரு மிளகாய் அரைக்கும் மில்லும் இருக்கு. எத்தினையோ தடவை அத்தானோடை போய் அவரின் பெரிய சாப்பாட்டுக் கடையிலை இருந்திருக்கிறன். ஆனால் அவர் மறந்தும் காசெடுக்கேக்குள்ளையோ அல்லது மிச்சம் குடுக்கேக்குள்ளையோ ஆரோடையும் கதைக்கவோ

**அக்கா எத்தினை கற்பனைகளோட கலியாணம் முடிச்சிருப்பா. எல்லாத்தையும் அத்தான் மண்விழுத்திப்போட்டார் எண்டு நினைக்கிறாவோ தெரியாது**

சிரிக்கவோ மாட்டார். இது அவரின்ரை சுபாவம். எனக்கு முழுசா இல்லாட்டிலும் அவரின் சுபாவம் பிடித்திருந்தது.

அக்கா அத்தானிட்டை என்னவெல்லாமோ எதிர்பார்த்திருப்பா போல. அவவை மாதிரி கலகலப்பாக இருக்கவேணும், சிரிக்க வேணும் பேசவேணும், ஆக்களோடை பழக வேணும்; எல்லாத்துக்கும் நேர்மாற்றம் அத்தான்.

அக்கா எத்தினை கற்பனைகளோடை கலியாணம் முடிச்சிருப்பா. எல்லாத்திலையும் அத்தான் மண் விழுத்திப் போட்டார் எண்டு நினைக்கிறாவோ தெரியாது. உலகத்திலை எத்தனை மனிசர் இருக்கினம். சில பேருக்கு மூக்கு நுனியில் கோபம் இருக்கும்.

இப்படித்தான் ஒருநாள் அக்கா அழுதழுது சொன்னா. நிவேதனுக்கு காலிலை தகரம் வெட்டிப்பழுத்துப் போட்டுது. "அதைக் கொஞ்சம் காட்டி ஏற்பூசி போட்டுக் கொண்டு வாங்கோவன்" எண்டு சொன்னா. "நீயும் வா எனக்கெண்டால் தனியப் போகேலாது" எண்டு சொல்லிப்போட்டு படுத்திட்டாராம். அண்டைக்கு அக்காவுக்கு ஏலாமல் வந்த நாளாம். அக்காவுக்கு ஏலாமல் வந்தால் தாங்கமாட்டா. சரியாத்தான் கஷ்டப்படுவா.

என்ன செய்யுறது. உந்த மனிசன் போக மாட்டுது எண்டு சொல்லிப் போட்டு அக்காவே அந்த வருத்தத்தோடை போய் நிவேதனுக்கு ஏற்பூசி போடுவிச்சதையும் பிறகு வரும் போது மயங்கி விழுந்ததையும் சொல்லி அழுதா. ★★

**நே**ற்று அத்தான் வரும் போது நானும் இருந்தேன். ஒவ்வொரு ஞாயிறும் அத்தான் வீட்டுக்கு வருவார். வீட்டுக்கு வரும்போது கைநிறையச் சாமான்களும் தின்பண்டங்களும் வாங்கி வருவார். இந்த முறை வரும் போது நல்லா இளைச்சுப் போனார். கொஞ்சம்கூட நடக்கக் கஷ்டப்பட்டார். வேர்த்தது. வயித்திலை வலி எண்டும் சொன்னார். போய் டொக்டரிட்டைக் காட்டினால் அவர் இரத்தம் சிறுநீர் எல்லாம் பரிசோதிச்சுப் பார்த்துச் சொன்னார்: அத்தான்ரை இரத்தத்திலை சீனி கலந்திருக்காம்.

அக்கா டொக்டருக்கு முன்னாலை நிண்டு கொண்டு அழுதா. அத்தான் ஆரிட்டையும் சொல்ல மாட்டார். வருத்தம் வந்தாலும்தான். மருந்தையும் ஒழுங்காகக் குடிப்பாரா என்பதும் சந்தேகம். அக்காவுக்கு அத்தானின் கவலை. சீனி கூடினால் எவ்வளவு கஷ்டம்?

மரக்காலைக்குப் போனால் இல்லாட்டில் கடைக்குப் போனால் ஆர் கவனிக்கிறது?

அப்படியே நேர காலமும் போய்க் கொண்டிருந்தது. அத்தானோடை அக்கா வாழ்ந்து பழகி விட்டா. மாமியும் அடிக்கடி அத்தானை ஏசுவா. "ஏன்ரா பொடி உன்ரை பொஞ்சாதியோடையெண்டாலும் கொஞ்சம் சிரிச்சுப் பேசேன்" எண்டு. அப்பத்தான் மாமி ஆரோ சொன்னதைச் சொன்னா; என்னட்டை ஆரிட்டையும் சொல்லக்கூடாது எண்ட சத்தியத்தோடை.

அத்தான் முந்தியெல்லாம் சரியான கவர்ச்சி ஆன ஆளாம். படிப்பிலையும் வலு கெட்டியாம். அக்காவைப் பேசினாப் பிறகு அக்காவைத்தான் கட்டுவன் எண்டு ஒற்றைக் காலிலை நிண்டவராம். அதுக்கிடையிலை நல்லாப் பசையுள்ளவை வந்து அத்தானை கொழுத்த சீதனத்தோடை கேட்டவையாம். அத்தான் ஏலா எண்டு சொல்ல எக்கணம் அவையள்தான் ஏதாச்சும் செய்வினை கிய்வினை எண்டு...... அத்தானின் அம்மா என்னிடம் ஒரு நாள் சொல்ல நான் அதை அக்காவிட்டைச் சொல்ல.......அக்காவுக்கு உதிலை எல்லாம் நம்பிக்கை இல்லை. பறையாமல் இருந்திட்டா. அக்கா சொன்னா "உன்ரை கொத்தான்தானாமே முந்தி பள்ளிக் குடத்திலை ஃபுட்போல் கப்டன்?"

எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது. இப்பிடியே இருந்து இருந்து அக்காவுக்கு கவலையோ என்னவோ? திடீரெண்டு அக்காவுக்கு ஒரு காய்ச்சல் பிடிச்சுது. ஒரு மாதம் இரண்டு மாதம், நிக்கேல்லை. கண்ணெல்லாம் மஞ்சள் நிறமாகி கையெல்லாம் மஞ்சள் நிறமாகி..... ஆரம்பத்திலை மஞ்சள் காய்ச்சல் எண்டு தான் டாக்குத்தர்மார் சொல்லிச்சினம். பிறகுதான் காலம் போகக்குள்ள சொல்லிச்சினம், மூளைக் காய்ச்சல் எண்டு.

அக்கா அத்தானோடை ஒன்பது பத்து வருஷம் வாழ்ந்திட்டா. அத்தானுக்கெண்டால் சரியான கவலை; அக்காவைப் பாத்து பாத்து விம்முவார். அவராலை தாங்க முடியாமல் கஷ்டப்பட்டார். மரக்காலைக்கோ- சாப்பாட்டுக்கடைக்கோ போகாமல் வாட்டிலை அக்காவின் கட்டிலுக்குப் பக்கத்திலையே எப்பவும் நிப்பார். அக்காவுக்கு இப்ப



எழும்ப ஏலாது. படுத்த படுக்கைதான். குளுக்கோஸ்தான் சாப்பாடு. ஊசியாலை ஏத்தி வயிறு பசியடங்குமே? மெலிஞ்சு முள்ளுந் தோலுமாயிட்டா.

சாப்பாடில்லை. மருந்து அக்காவைத் திண்டிட்டுது. ஆரைப்பார்த்தாலும் நம்பிக்கையில்லை எண்டு சொல்லாமல் சொல்லிச்சினம்.

அக்காவின்ரை பேச்சு நிண்டுட்டுது. நாலு நாள் போனா வெள்ளிக்கிழமை காலைமை அக்கா செத்துப்போனா.

★★★

உயிர் போறதை அத்தான் கண்டிட்டு... கெக்கட்டம் போட்டுச் சிரித்தாராம். முழு ஆஸ்பத்திரியுமே கிடிகலங்கிச்சாம். பெரிசா வாய் விட்டுச் சிரிச்சாராம். கொஞ்ச நேரம் செல்ல நான் போக என்னையும் பார்த்துச் சிரிச்சார். எனக்கெண்டால் பயமாய் கிடந்திச்சு. அத்தான் சிரிக்கிறார். மற்றவையையும் சிரிக்க வைக்கிறார். அக்கா உயிரோடு இருக்கேக்குள்ளை சிரிக்காதவர் உப்பிடிச் சிரிக்கிறாரே. சிரிச்சுக் கொண்டு ஆஸ்பத்திரிக் கேற்றாலை ஓடினார். நான் கதறிக் கொண்டு அக்காவிற்குப் பக்கத்தில் நின்றேன்.

மாமி தலையிலை அடிச்சுக் கொண்டு சொன்னா; அத்தானுக்குப் பைத்தியம் பிடிச்சுப் போட்டுதாம்.

# மறப்பது சுலபமா?

களுவாஞ்சிக்குடி யோகன் - சுவிஸ்

**பு**துவீடு மாறியதில் சந்தோஷமே. இருந்தும் இத்தனை காலமாக சேர்ந்திருந்த நண்பர்களைப் பிரிந்தது மனதிற்கு ஏதோ செய்தது.

இந்த ஜெகனும் ஒன்றும் புதியவனல்ல. என்னுடனேயே முகாமில் இருந்தவன். வேலை நிமித்தமாக வேறொரு சிறிய நகரில் வாழ்ந்தவன்.

போனமாதம் சந்தித்தபோதுதான்; தனக்கு கல்யாணம் முடிவாகி பெண் வருவதாயும், தான் பார்த்த புதுவீட்டில் றூம் இருப்பதாயும், என்னை அங்கு வரும்படியும் வற்புறுத்தினான்.

நானும் இரண்டு மாதத்தால் காதலி தர்ஷினியை கூப்பிடுவதாகத் திட்டம். யோசித்தேன். இரண்டு குடும்பங்களும் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும். தலையாட்டி விட்டு இங்கு வந்துவிட்டேன்.

நினைவுகளைச் சுமந்துகொண்டு படுத்திருந்த என்னை நித்திரை அணைத்துக் கொண்டது.

விடிந்ததும் வேலைக்கு வெளிக்கிட்ட போது ஜெகன் சொன்னான், "மச்சான் இந்த புதன்கிழமைக்குள் பிரியா "சுவிசுக்கு" வந்திடுமடா. ஏஜன்சிக்காரன் இரவு ரெலிஃபோன் எடுத்தவன்," என்றான்.

அன்று புதன்கிழமை பகல் நேர வேலை முடிந்து வீடு திரும்பியதும் தெரிந்த முகங்களும், அறியாத முகங்களுமாக பலர் வீட்டிலிருந்தனர். எல்லோருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு எனது அறைக்குள் நுழைந்தேன். உள் வந்த ஜெகன் "டேய் பிரியா வந்திற்றா, வா அறிமுகப்படுத்திறன்" என்று இழுத்துக்கொண்டு போனான். பின் தொடர்ந்து அவர்கள் அறைக்குள் நுழைந்து, "வணக்கம்" என்றேன். "ஹலோ" என்று திரும்பினாள். ஒரு கணம் அதிர்ந்து விட்டேன். எனக்கு நாவறண்டு பேச்சு வரவேயில்லை. நெஞ்சு தாங்க முடியாமல் சுமையேறிக் கொண்டிருந்தது. அவளோ மிகச் சாதாரணமாக மற்றவர்களைப் பார்த்துக் கதைத்துக் கொண்டிருந்தாள். என்னைச் சமாளித்துக் கொண்டு அறைக்குள் வந்து கதவைச் சாத்தினேன்.

கதவைத் தட்டிக் கொண்டு ஜெகன் வந்தான். "குறை நினைக்காத மச்சான், சனம் வந்ததால சாப்பாடு முடிஞ்சிபோச்சு, தேத்தண்ணி போட்டுத் தாறன்" என்றான்.

"வேண்டாம் ஜெகன். அது பிரச்சினையில்ல. நீ வந்தவர்களைப் போய்க் கவனி." என்று அனுப்பி வைத்தேன்.

'தர்ஷினி என்ன இது? உனது ஊருக்குப் போய் எனக்கு கடிதம் போடாமல் இந்த நாடகந்தானா நடத்திக் கொண்டிருந்தாய்?' என்று கேட்டுக் கதறி அழவேணும் போலிருந்தது.

'கூடாது. நிச்சயமாய் நான் அழக்கூடாது.' நிதானிக்க முடியாமல் குமுறிக் கொண்டு கட்டிலில் கிடந்தேன்.

காலை ஐந்தரை ஆனதும் எலாம் அடித்து வேலைக்குத் துரத்தியது. சேட்டைப் போட்டு வெளியில் இறங்கியபோது, சிவா வந்தான். "என்னடாப்பா இந்தக்குளிரில வெறும் சேட்டோடு வாறீர்? உடம்பு உக்கப் போகுது." என்று மிரட்டினான்.

என்ன பொல்லாத உடம்பு என்று நினைத்த நான், "பஸ்சுக்குள்ள சூடுதானே? அதனாலதான் சேட்டோடு வாறன்," சொல்லிக்கொண்டு நகர்ந்தேன்.

மறுபடியும், மறுபடியும் தர்ஷினியின் நினைவுகள் என்னை துன்புறுத்தின. இவளுடன் பழகிய நாட்கள்- சேர்ந்திருந்த சந்தர்ப்பங்கள் எல்லாம் மீண்டும் மனதில் வந்து இடம்பிடித்துக் குடிகொண்டன.

**பி**ரியா, தர்ஷினி என்ற இந்தப் பிரிய தர்ஷினி! வேறொரு மாவட்டத்திலிருந்து எங்கள் பாடசாலையில் வந்து சேர்ந்தாள். இவள் வந்ததும் எனது பாடசாலையே மாறிவிட்டது! எப்படி அந்த ஒழுக்கம்,

**ஒரு நாள் இயற்கையைப் பற்றிப் பேசினோம். இன்னொருநாள் பூக்களைப் பற்றிப் பேசினோம். பாடசாலை விடுமுறையில்கூட அவளைப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை!....**

அமைதி வந்ததோ சொல்ல முடியாது.

கத்திப் பேசுபவர்கள் கூட மெதுவாகப் பேசினார்கள். ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது குறைந்தது. மொத்தத்தில் பாடசாலையே எழுந்து ஓர் உதறு உதறிக் கொலரைச் சரி செய்தது போலிருந்தது.

கிராமப் புறத்திலுள்ள எங்கள் சின்ன நகருக்கு இவள் ஒரு ராணிதான்! றோஸ் நிற முகம், பளிச்சென்று வீசும் கண்கள், சுருண்டு, சுருண்டு நெளியும் கூந்தல், எப்போது பார்த்தாலும் குளித்ததுபோல் புத்தம் புதிதாய் தோற்றமளிப்பாள்.

"பொட்னி" கிளாசில் என் பக்கத்தில் வந்திருந்தாள். எனக்குப் பெருமை பீறிட்டது. ஆனால் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. எங்கள் வகுப்பில் ஒருநாள் சின்ன நிகழ்வொன்று- தர்ஷினியின் மேசையிலிருந்து பேனை விழுந்து கீழே உருண்டு என்பக்கம் வந்தது. உடனடியாக எழுந்து அதை எடுத்து அவளிடம் நீட்டினேன். 'நன்றி' சொல்வாள் என்று எதிர்பார்த்தேன். ஒரு நன்றிப் பார்வையாவது பார்ப்பாள் என்று நினைத்தேன். அதுவும் செய்யவில்லை. சும்மா வாங்கி வைத்துக் கொண்டாள்.


இந்தச் சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. எனக்குள் எழுந்த தாபத்திற்கு அளவில்லை. மாலையில் விளையாடுவதற்கு நில்லாமல் வீட்டுக்கு வந்தேன். தங்கச்சி "அண்ணா" என்று வந்தாள். அவளுக்கு அடித்தேன். சின்னக்காவுடன் சண்டைக்குப் போனேன். கறிக்கு உப்பில்லை என்று அம்மாவுடன் குழம்பினேன். எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

காலச்சக்கரம் எவ்வளவு வேகமாய்ச் சுழன்று கொண்டிருக்கிறது. நம் வாழ்க்கையில் அது எவ்வளவு பெரிய வேலைகளைச் செய்கிறது.

அடுத்த தவணை ஆரம்பிக்க நாங்கள் எப்படிப் பேச ஆரம்பித்தோம் என்பது ஆச்சரியந்தான்.

'லைபிரறியில்' தொடங்கி விட்டது.

என் மகிழ்ச்சி சொல்லிவிட முடியாது.



'ஆண்டவரே இந்த பேச்சுவார்த்தை தொடர வேண்டும்' என்று பிரார்த்தனை. படிப்படியாகத் தொடர ஆரம்பித்தன. சின்னச் சின்ன வார்த்தைகள்தான். என் மனதில் பிரமாண்டமான கோட்டை எழத் தொடங்கியது.

ஒருநாள் இயற்கையைப் பற்றிப் பேசினோம். இன்னொருநாள் பூக்களைப் பற்றிப் பேசினோம்.

இரண்டு நாள் பாடசாலை விடுமுறையில் கூட அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அவள் இருக்கும் வீட்டுக்குப் பின்னால் எங்கள் தூரத்து உறவுக்காரரின் வீடு. அங்கு நாங்கள் போவதே குறைவு. இதற்காகச் சொந்தம் கொண்டாடிப்போனேன். பின் மதிலில் தவமிருந்தேன்.

தர்ஷினி குளித்துவிட்டு கிணற்றடியிலிருந்து வெளி வந்தாள். 'சிக்னல்' கொடுத்தேன். திரும்பிப்பார்த்து அதிர்ச்சியுடன் நின்றவள், அழைப்பது போல் சிரித்தாள். மதிலேறிக் குதித்து உள் சென்றேன். குளித்த உடம்புடன் மிகவும் கவர்ச்சியாய் இருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டே அரை வாசிக் காலத்தைக் கழிக்கலாம் போலிருந்தது.

என்னையுமறியாமல் என்கைகள் அவளைத் தழுவிக் கொண்டன. "ஒரு நிமிடங்கூட உன்னைக் காணாமல் இருக்க முடியவில்லை" என்று புலம்பினேன்.

வாசற் பக்கமிருந்து திடீரென "தர்ஷினி" என்ற அழைப்பு. அவள் அம்மாவாக இருக்க வேண்டும். தட்டி விட்டு ஓடிவிட்டாள்.

அதன்பிறகு அடிக்கடி தனிப்பகுதிகளில் சந்திப்பு. என் மனதில் உற்சாகம். படிப்பு வீணாகியது. தர்ஷினி என்னைப் பைத்தியமாக்கிவிட்டாள்.

முதற்தரம் பரீட்சையில் தோல்வியுற்றேன். வீட்டில் திட்டுக்கள். ஆனால் எங்கள் தொடர்பு மட்டும் வெற்றிகரமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

இந்த நேரத்தில்தான் நான் வெளிநாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தம். வீட்டுச் சூழ்நிலையும், நாட்டு நிலமையும் என்னை வீட்டிலிருக்க முடியாமல் வெளிநாட்டிற்கு தள்ளின. வெளிநாடு போவது பற்றிச் சொன்னேன். கதறினாள். "உயிருடன் இருக்க மாட்டேன்," என்று சொன்னாள். அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினேன்.

கடைசிச் சந்திப்பு ஒதுக்குப் புறமான ஒரு கோயிலில் நிகழ்ந்தது. கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள். தான் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி எனக்குப் போட்டாள். தன்னைத் தவிர வேறு பெண்ணை நினைக்கவும் கூடாது, விரும்பவும் கூடாது என்று சத்தியம் வாங்கினாள்.

"உன்னைத்தவிர எனக்கொன்றும் பெரிசில்லை" என்று சத்தியம் செய்து கொடுத்தேன். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு பிரிய மனமில்லாமல் பிரிந்தோம்.

ஒரு மாதம் போயிருக்கும். நான் சுவிசிற்கு வந்துவிட்டேன். உணர்வுகளை பிழிந்து கடிதம் எழுதுவாள். இங்கிருந்து பல வழிகளில் அவளுக்கு உதவிகள் செய்தேன்.

ஒவ்வொரு மாதமும் சம்பளமெடுத்து என் தர்ஷினிக்கு ஒவ்வொரு பொருளாக வாங்கிச் சேர்ப்பேன். சின்னக்காவின் கல்யாணம் முடிந்ததும் கூப்பிடுவதாக அறிவித்திருந்தேன். தன் அப்பாவிற்கு தங்கள் ஊருக்கு மாற்றம் வந்து விட்டதாயும், தான் அங்குபோய் தொடர்பு கொள்வதாயும் இறுதியாக எழுதிய கடிதத்தில் எழுதியிருந்தாள். இதே தர்ஷினி, இந்தப் பிரியதர்ஷினி இன்று என் "றூம் மேற்" றுக்கே மனைவியாக வந்திருக்கிறாளென்றால், இவைகளை எப்படி என்னால் சகிக்க முடியும்? வேறொரு வாழ்க்கையை அமைக்க முடியும்?

கடந்த கால நினைவுகளில் மூழ்கியிருந்த எனக்கு என்னையுமறியாமல் விசும்பல் பீறிட்டது.

★★★★★

**பா**லத்தில் நின்று, புகலிடமளித்த நாட்டை ஒரு முறை சுற்றி நோக்குகிறேன். அமைதியாக- சிறிது ஆரவாரத்துடன் உறங்கிக் கொண்டிருந்தது சுவிற்ஸர்லாந்து.

கண்களை மூடிக்கொண்டு காலை உயர்த்த....., "டேய் மச்சான்" என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தான் குமார். அவன் அந்த வழியாகத்தான் வேலைக்கு செல்வது வழக்கம். "சொல்ல மறந்திற்றன்; காலைல உனக்கு ரெலிஃபோன் வந்தது. உன் அம்மா கொழும்பிற்கு வந்திருக்கிறா. உன்ர சின்னக்காவின் கல்யாண விஷயமா கதைக்கவேணுமாம். உடனே ரெலிஃபோன் எடுக்கட்டாம்" சொல்லிக்கொண்டு ஓடினான் குமார். சிறிது நேர அமைதி..... குழம்பினேன். பின் சிந்தித்தேன். என்னுடைய எதிர்காலந்தான் இல்லையென்று ஆகிப்போச்சு. எதிர்காலத்தை நம்பியிருக்கிற சின்னக்கா, தங்கச்சி இவர்களை வாழவைக்க என்றாலும் உயிருடன் இருக்கலாமே: மற்றவர்களுக்காக வாழ்ந்து அவர்களைச் சந்தோஷப்படுத்தினால்கூட ஒரு சுகம் காணலாமல்லவா? மனத் தெளிவுடன் பாலத்தை விட்டுக் கீழிறங்கினேன்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## நிலவும் நீரும்

## தருவது- ரசிகன்



"காதலி என்கிறாய் அவளை
காதலிக்கத் தெரியுமோ-கண்டதும்
பேதலித்துப் போகிறாயே, நியாயமோ?"
நண்பர்களின் தாக்குதல் நாற்புறமும்!

"ஆரம்பம்தானே இப்போது-பாவம்
ஆயத்தமாகட்டுமேன் விடுங்களடா!"
குறுக்கிட்ட நண்பன் கைகொடுத்தான்.

"முதலில் தயக்கம். முடிவில் மயக்கம்.
கனவில் தொடங்கும், நனவில் தொடரும்,
முதலும் முடிவும் சித்தத்தில் இனிக்கும்.
கடலில் கலந்தோம், கரையை மறந்தோம்.
இரவின் மடியிலும், பகலின் மடியிலும்
உறவின் சுகத்தில் உலகினை மறந்தோம்"
குறும்பாய் ஒருவன் வெறும்வாய் மென்றான்.

"யார் அவள் சொல்லு;
யாம் செல்கிறோம் தூது!
பாரடி பெண்ணே! நாமவன் நண்பர்
சேரடி பெண்ணே அவனுன் அன்பன்
கூறடி சம்மதம், கூட்டிவரவா உன்னிடம்?"
அபிநயம் காட்டி நண்பன் முழங்கினான்.

"தூதும் வேண்டாம். சூதும் வேண்டாம்.
காதுதான் வெடிக்கும் வாயை மூடடா!"
சீறினான் பொழிலன் சிரித்தனர் நண்பர்!

"உண்மையைச் சொல்லடா-நீ
ஒருதரம்கூட பட்டுமேனியை
மெல்லத் தொட்டுப் பார்த்ததில்லையோ?
உண்மையோ? இடை உள்ளதோ? என்று
உன் கை பட்டுப் பார்த்தில்லையோ?"

எரிப்பது போல முறைத்தான் பொழிலன்.
சிரிப்பதே தொழிலாய் நகைத்தனர் நண்பர்.

"உண்ணப்படாத அன்னம் இருந்தென்னலாபம்?
எண்ணாமல் அவளை நீ இருக்க வேண்டாம்.
உண்ணாமல் அவளை நீ ஒதுக்க வேண்டாம்.
கண்ணாளா நீ கண்ணை மூடலாமோ?
பெண்ணாள நீ மறுத்துப் போகலாமோ?"

பொறுமை இழந்தான் பொழிலன்.
"வெறுமையடா உங்கள் நெஞ்சில்;
கருமையடா உங்கள் நினைப்பு!
காதல் என்றால் கூதலுக்கு
குளிர்காயும் நெருப்பென்றோ நினைப்பு?"

'உச்' கொட்டி நகைத்தனர் நண்பர்
'நச்' என்று குட்டுவைத்தான் காளை.

"'இச்' கொட்டத்தெரியாத காளை
நச் என்று போட்டான் நம் தலையில்!
தேறாது இவன் செய்யும் காதல்
ஆறாது பாவம் இவன் தேகம்!"

"போதுமடா போதும் உங்கள்
பொல்லாத உபதேசம் போதும்!
நன்றியடா நான் வரவா சென்று?"

"சென்றுவா மகனே! வென்றுவா!
செண்டாடும் பெண் முகத்தை கண்டுவா.
வண்டாடும் மலர்மீது ஆடிவா!
கொண்டாடலாம் சேதி கொண்டுவா!"
நண்பர்கள் பொழிந்தனர்.

விட்டாலே போதுமென்று
விடைபெற்றான் பொழிலன்.

மாந்தோப்பில் காத்திருந்தாள் மங்கை
பாய்ந்தோடி அணைத்திடத்தான் ஆசை.
செந்தேளாய் கொட்டுவாளோ சீற்றம்?
சிந்தித்தான், தடுக்கியது தயக்கம்!

'மாமரத்தின் கிளைமீது கனிகள்-அவள்
மாந்தளிர் மேனியிலும் கனிகள்.
பசுந்தளிராய் இருக்குமந்தப் பாதம்
பைய நடந்து வந்து நொந்தல்லோ மாயும்.
மின்னல் இடை ஒடிந்து விழக்கூடும்
வண்ணப் பூவுடலை தாங்கியது சாயும்!
வாழைத் தண்டுப் போலிருக்கும் கால்கள்!
வாலைப் பெண் இவளின் முகத்திலிரு கண்கள்;
காளைகளை மிரட்கின்ற கணைகள்!
பாலை நிலம் போலிருக்கும் நெஞ்சில்
சோலையென சுகமூட்டும் பருவம்.'

கண்டதும் நெஞ்சில் களிப்பேறியது.
கண்பார்த்ததும் கவிதை அரங்கேறியது.

இவன் வியந்து கொண்டு நின்றான்.
அவளோ விழிகளை நிலத்தில் வீசி
தரையிலே எதையோ தேடிக்கொண்டிருந்தாள்!

"இங்கே தொலைத்துவிட்டு
அங்கேயோ உன் மனதை தேடுகிறாய்!
தொலைத்த இடத்தில் தேடாமல்
நினைத்த இடத்தில். கண்டுபிடிக்க
சுந்தர அழகியே நீ சுந்தரமூர்த்தியோ?
ஆற்றிலிட்டதை அவர் குளத்தில் தேடினார்
எனக்குள் இட்டதை நீயெங்கே தேடுவாய்?"

வினா வீசினான் காளை.
விடை சொல்லவில்லைக் கோதை!
கணையெனப் பாய்ந்தது கடைக்கண் பார்வை!

"அஞ்சி அஞ்சி காதல் செய்தால்
கொஞ்ச வருமோ?
வஞ்சி உந்தன் கண்கள் என்னை
கொல்ல வருமோ?
துஞ்சி துஞ்சி நீ போனால்
நெஞ்சு தாங்குமோ?
பஞ்சப்பஞ்ச மேனியது

பழக வருமோ?"
கேட்கத்தான் நினைத்தான்-நெஞ்சில்
ஏக்கம்தான் நிறைத்தான்.
கேட்கும் துணிவைத்தான் தொலைத்தான்!

"சென்றுவரவா-பதிலைச்
சிந்தி விடை தா!" என்றான்.

குனிந்திருந்த நிலவு நிமிந்தது!
கனிந்திருந்த இதழில் குறு நகை தவழ்ந்தது!

விடைபெற முன்னர்-காதல்
படையெடுப்பவனைக் காணவேண்டும்.
அவசரம் உந்தித் தள்ள-அவள்
அச்சம் கொஞ்சம் விலகியது!

ஒரு நொடிதான். ஒரே நொடிதான்
விழிகள் கலந்து மீண்டன.
மின்னல் அடித்தது மனதில்;
வண்ண மழை பொழிந்தது நினைவில்!
மறுநொடியே-அந்த
மருவில்லா நிலவு குனிந்தது!

'இதழ் பேசாத மொழியை-இவள்
விழி பேசுவது விந்தை!
யான் நோக்கும் போது-இவள்
தான் நோக்காத பாவை.
நான் நோக்காத நேரம்-இவள்
கண் நோக்கி உண்ணும் என்னை!'
பொழிலன் முறுவல் கொண்டான்.

"நாளை இதே சோலையில்
இதே மாலையில்!"
சொல்லிக்கொண்டே-அவளின்
வெல்ல நினைவோடு விலகிப் போனான்.

"வருவேன் வருக!"
வார்த்தையால் அவள் சொல்லவில்லை.
வருவாள் உறுதி;
காளைக்குத் தெரியும்.

மறுநாள் நண்பர்கள்
குறுவாளாய் கேள்வி வீசினர்.

"கொண்டுவந்தாயா-நீ
உண்டுவந்தாயா? இனிப்பான
சுவைச் சேதி கொண்டுவந்தாயா?"

"உண்டுதான் வந்தேன்-அவள்
உருவத்தை விழிகளால்!
கண்டுதந்தான் வந்தேன்-அந்த
கனித்தேன் காதல் உருவத்தை!"

"மதுவுண்ட வண்டாக
மாறிவந்தாயோ?
அன்புண்டு என்று
கண்டு கொண்டாயோ?"

"ஆம்" என்றான் பொழிலன்.
யாம் நம்போம்-நீ
ஆதாரம் சொல்! என்றனர் நண்பர்.

"யான் நோக்கினேன்-அந்த
நிலவு தரை நோக்கிற்று.
நான் வான் நோக்கினேன்-தங்க
நிலவு என் முகம் நோக்கிற்று!"

"பூ.....இதுதான் காதலோ?
நேர் நோக்காமல் ஏன்
நிலம் நோக்கினாள்?"

"நிலம் நோக்கி
நீர் வார்ப்பது பயிர் வளர்க்க.
நிலவு அவள் நிலம் நோக்குவது
நெஞ்சுக்குள் அவள் வளர்க்கும்
அன்புக்கு நீர் வார்க்க!"

"நல்ல கதைதான் போடா
யார் சொன்னது?"

"நாலும் அறிந்த திருவள்ளுவர்
நமக்கு உரைத்தது!"
நண்பர்கள் வாயடைத்தனர்.

"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்"
அதிகாரம்-110, குறள்-1093

# "நான் மேலும் சிறப்பாக ரன் குவிக்கத் தயாராக இருக்கிறேன்"

இந்திய கிரிக்கெட் அணியில் சமீபகாலப் போட்டிகளில் சஞ்சய் மஞ்ரேக்கர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மனம் வருந்தும் மஞ்ரேக்கர் மனம் திறந்து சொன்னகருத்துக்கள் இதோ:-

"நான் அணியிலிருந்து நீக்கப்பட்டதால் சிறிது ஏமாற்றமடைந்துள்ளேன். ஏனெனில் சமீப காலங்களில் நான் விளையாடிய ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் நான் சராசரியாக ரன்களை எடுத்துள்ளேன். இது எனக்குத் திருப்தி அளிக்கிறது.



நான் பல போட்டிகளில் சராசரியாக 50 ரன்களைக் குவித்துள்ளேன். இந்த ரன்களை மிகப்பெரிய ஸ்கோராக என்னால் மாற்ற முடியவில்லை. இது எனது பலவீனம் ஆகும். கடந்த சில போட்டிகளில் நான் பெரிய அளவில் ஸ்கோர் பண்ணவில்லை.

எனது பேட்டிங்கையும், ஃபீல்டிங்கையும் முன்னேற்ற வேண்டும் என்று நான் கடினமாக உழைத்தேன். எனது சமீபகால ஒருநாள் போட்டிகளே இதற்கு நல்ல சான்றுகளாகும். நான் ஒரு நாள் போட்டிகளில் இடம்பெறத் துவங்கியதில் இருந்து சராசரியாக 35 ரன்களை எடுத்துள்ளேன்.

எனவே ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை நான் நன்றாகவே விளையாடியிருக்கிறேன். அதுவும் பெரும்பாலான போட்டிகளில் 5 வது, 6 வது பேட்ஸ்மனாக இறங்கியிருக்கிறேன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருநாள் போட்டிகளில் நான் நன்றாக ஆடியிருக்கிறேன். ஆனால் நான் அணிக்குத் தேர்வு செய்யப்படுவதற்கு அந்த ரன்கள் போதாது என்று கருதினால், நான் மேலும் சிறப்பாக ஆடத் தயாராக இருக்கிறேன்.

ஒருநாள் போட்டிகளில் ஆடும் மற்ற வீரர்களைப்போல நான் பவுண்டரியும், சிக்ஸர்களும் அடிப்பதில்லை. ஆனால் நான் எத்தனை பந்துகளைச் சந்தித்து எத்தனை ரன்கள் எடுத்தேன் என்பதுதான் முக்கியமானதாகும். இப்படிக் கணக்கிட்டுப் பார்த்தால் நான் நன்றாகவே ஆடியிருக்கிறேன்.

ஒருநாள் போட்டிகளில் நான் 5வது, 6வது ஆளாக இறங்குவதால் 50 ரன்களைக் கடப்பதே சிரமம். எனவே 100 ரன்களை என்னால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

எனது பேட்டிங் ஃபோர்மில் சமீப காலங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் நான் மனம் தளர்ந்து விடவில்லை. எனது தவறுகளைத் திருத்திக் கொண்டு புதிய வேகத்துடன் தொடர்ந்து ஆடுவேன். என்னுடைய தற்போதைய நிலைக்காக நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை.

எனது ஆட்டத்திறனை மேலும் அதிகரித்துக்கொள்ள முயற்சி செய்து வருகிறேன். மீண்டும் அணியில் இடம்பிடித்து இந்திய அணிக்குச் சிறப்பாக ஆடிப் பெருமை சேர்ப்பேன். நிலையான இடம் பிடிப்பேன்."
இவ்வாறு கூறியுள்ளார் மஞ்ரேக்கர்.

# சிந்தியா பதில்கள்

*** பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்க மட்டத்தில் ஆளாளுக்கு ஒன்று பேசுகிறார்களே! அது ஏன்?**
கே. பிரகாஷ், வவுனியா.

கருத்தை வெளியிடும் வார்த்தைகளில் தான் வேறுபாடு. கருத்து ஒன்றேதான். பேச்சுவார்த்தைக் கதவுகளை புலிகள் தாமாக வந்து சாவிபோட்டு திறக்க வேண்டும் என்கிறார்கள். அதனை ஜனாதிபதி நயமாகவும், பிரதிப் பாதுகாப்பமைச்சர் சற்றுக் கடுமையாகவும் சொல்கிறார்கள்; அவ்வளவுதான்.

✉ ✍

*** திருமலையில் தமிழ் கட்சிகளின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்?**
ஜெ. விசுவலிங்கம், திருகோணமலை.

தமிழ் கட்சிகளைச் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார்கள்.

✉ ✍

*** டியர் சிந்தியா! பாகிஸ்தான் அணியின் சஹிட் அஃப்ரியின் அசத்தல் எப்படி?**
ஐ.எம். ஹனீபா, தம்பலகாமம்.

பயமறியாத இளம் கன்று பாய்ந்தாடியது!

✉ ✍

***சில பெண்கள் தங்கள் காதலனிடம் "நான் விரைவில் இறந்துவிடுவேன்" எனக் கூறுவதன் காரணம் என்ன?**
ஏ.சி.எம். முஸம்பில், குளியாப்பிட்டிய.

அவர்களது காதலர் ரொம்ப ரொம்ப அறுப்பவராக இருக்கலாம்.

✉ ✍

*** டியர் சிந்தியா! இந்தக் காலத்தில் யாரிடம் உஷாராக இருக்க வேண்டும்?**
செல்வி ஆ. கௌரி, குருநாகல்.

எமலோகத்தில் புதிதாக அட்மிஷன் பெற்றவர்களுக்குரிய தண்டனைகளை வழங்கிக் கொண்டிருந்தார் எமதர்மன்.

ஒவ்வொருவருக்கும் தீர்ப்பு வழங்கும் போது எழுந்து நின்று தீர்ப்பு வழங்குவது எமதர்மனின் வழக்கம்.

ஒரு வட்டிக்கடைக்காரன் வந்தான். "கொள்ளை வட்டி வாங்கியதற்கு ஒரு வருடம் இவனை எண்ணெய்க் கொப்பரையில் போடுங்கள்!" எழுந்து நின்று சொன்னார்.

ஒரு கலப்படக்காரன் வந்தான். "ஆறுமாதம் செக்கில் ஆட்டப்படும் தண்டனை!" என்று எழுந்து நின்று தீர்ப்பளித்தார்.

அடுத்தது ஒரு அரசியல்வாதி வந்தான். "கட்சிமாறும் இவனுக்கு நரக உலகில் வாழ்வதுதான் தண்டனை!" என்றார் எமதர்மன். அப்போது மட்டும் எழுந்து கொள்ளாமல் அமர்ந்திருந்தே தீர்ப்புச் சொன்னார்.

அதனைப் பார்த்த சித்திரகுப்தனுக்கு சந்தேகத்தை அடக்க முடியவில்லை.

"அரசியல்வாதிக்கு தீர்ப்புச் சொல்லும் போது மட்டும் எழாமல் இருந்து சொன்னீர்களே! ஏன் பிரபு?" என்று கேட்டார். அதற்கு எமதர்மன் என்ன சொன்னார் தெரியுமா?

"எழுந்து தீர்ப்புச் சொல்லும் நேரத்தில் அந்த ஆசாமி என் நாற்காலியைப் பிடித்து விடக் கூடாதே; அதனால்தான்!"

✉ ✍

*** இந்திய-அவுஸ்திரேலிய கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கரின் ஆட்டம் எப்படி?**
சோ. விஜிதரன், கண்டி.

வந்ததும் வணக்கம் சொல்லிவிட்டுப் போக வேண்டுமா? அப்படி என்ன அவசரமோ? புதிதாக திருமணமான கங்குலிகூட நின்று நிதானமாக ஆடிவிட்டுத்தானே போகிறார்!

✉ ✍

***இந்திய கிரிக்கெட் அணியின் பலம் எது? பலவீனம் எது?**
எம். யோகர்தாஸ், ஆலி-எல.

பலம்- பிரபல நட்சத்திரங்கள். பலவீனமும் அதுதான். பிரபலத்துக்கு ஏற்ப ஆட வேண்டுமே, அதிகம் எதிர்பார்ப்பார்களே என்று அளவுக்குமீறிய டென்ஷனும் காரியத்தைக் கெடுத்துவிடுகிறதோ தெரியவில்லை. எந்தக் காரியத்திலும் 'டென்ஷன்' கூடாதுங்க.

✉ ✍

***இவ்வுலகில் யார் அறிவாளி?**
ஐ. விநாயகமூர்த்தி, பொகவந்தலாவ.

இதுவரை பிறக்காமலிருப்பவர். யுத்தம் என்றால் என்னவென்று கம்பியூட்டரில் அகராதி பார்க்கும் காலத்தில் பிறக்கலாம் என்று காத்திருப்பவர்.

✉ ✍

*** பொழுதுபோக்குக்காக காதலிப்பவர்கள் எப்படியானவர்கள்?**
சி. குகதாசன், கொழும்பு-5.

இப்படியானவர்கள்:

இளம் காதலர்கள் மிக நெருக்கமாக இருந்து (வேறு கற்பனைகள் வேண்டாம்) பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படி நெருக்கமாக இருந்து என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று அறிய ஒருவர் கிட்டப்போய் காதைக் கொடுத்தார்.

காதலன் கேட்கிறான்:

"டார்லிங் டார்லிங் எப்ப டார்லிங் நம்ம கல்யாணம் டார்லிங்?"

காதலி அதுக்கு பதில் சொல்கிறாள்.:

"கொஞ்சம் பொறுங்க! எனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையும், உங்களுக்கு ஒரு நல்ல பெண்ணும் கிடைக்கட்டும்!"

✉ ✍

***'அவ்வை சண்முகி' படத்தில் கமலின் 'மேக் அப்' இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாமே?**
பூ. நயாளன், ஹட்டன்.

நீங்கள் எந்த லோகத்தில் இருக்கிறீர்கள்? கமல் பெண்வேஷம் மட்டும் போடவில்லை. பெண்வேடத்தில் இரண்டு மாறுபட்ட கெட்-அப்புக்களிலும் தோன்றி அசத்துறாருங்க! முதல் கெட்-அப் முன்னரே முரசில் பார்த்திருப்பீர்கள். கெட்-அப் 2ஐ இப்போது பாருங்கள்.

✉ ✍



ஹீரா—கமல—மீனா

***அரச அலுவலகங்களில் வேலைகள் மந்தகதியில் நடப்பதற்கு யார் காரணம்?**
தி. யோகராசா, பதுளை.

மிஸ்டர் பொறுப்புணர்வின்மை!

ஒரு அரசாங்க அலுவலர் டாக்டரிடம் சென்றார்.

"டாக்டர் எனக்கு ஒரே அசதியாக இருக்கிறது. என்னைப் பரிசோதித்து மருத்துவ ஆலோசனை சொல்லுங்கள்?" என்றார்.

டாக்டர் அவரைப் பரிசோதித்து விட்டுச் சொன்னார்,

"உனக்குத் தேவை முழு ஓய்வு. நீ எவ்வளவு விரைவாக அலுவலகம் போகிறாயோ அத்தனைக்கு நல்லது!"

✉ ✍

*** டியர் சிந்தியா! மற்றவர்களை மட்டம்தட்டிப் பேசும் நண்பர்களை என்ன செய்யலாம்?**
எச்.எம். ஜவாஹர், மட்டக்களப்பு.

ஒரு சமயம் ஒரு ஆங்கிலேயப் பத்திரிகைக்கு மகாத்மா காந்தி பேட்டியளித்தார். பேட்டி எடுத்த நிருபர் காந்தியை மட்டம்தட்ட நினைத்தார்.

"மிஸ்டர் காந்தி! உங்கள் மக்கள் ஏன் உங்களைத் தங்கள் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டனர்? வேறு சிறந்த தலைவர்களே அவர்களுக்குக் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார்.

மகாத்மா காந்தி கோபப்படாமல் ஒரு புன்சிரிப்போடு சொன்னார்:

"பிரிட்டிஷ்காரர்களை சமாளிக்க நானே போதும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்."

✉ ✍

*** அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்று நினைக்கிறீர்கள்?**
மு. சிவக்குமார், பசறை.

மீண்டும் கிளிண்டன்தான்! அவரைக் கிளீன்போல்ட்டாக்கக் கூடிய பந்துவீச்சாளர்கள் எதிரணியில் இல்லாதது பெரும் குறை!

✉ ✍

*** நட்பு காதலாக மாறும். ஆனால் காதல் நட்பாக மாறுவதில்லை ஏன்?**
ஐ.எம். பருமினா ஹஸ்மின், திகழி.

காதல் என்பதில் நட்பும் அடங்கியிருப்பதால்!

✉ ✍

***அவ்வை சண்முகி படத்தில் கமலுக்கு மேக்-அப் போட்டவர் யார்?**
கே. செந்தில்வேல், நீர்கொழும்பு.

ஏன் நீர் உரிமை கோரப் போகிறீரா?

✉ ✍

*** தற்போது வெளியாகியுள்ள (வீடியோவில் தான்) படங்களில் விழுந்து விழுந்து சிரிக்கக் கூடிய படம் எது?**
எஸ். பரமநாதன், கொழும்பு-10.

'டாட்டா-பிர்லா! கவுண்டமணி-பார்த்திபன் கூட்டணி புகுந்து விளையாடுகிறது.

✉ ✍

*** ஒருவருக்கொருவர் உதவ மறுக்கும் கஞ்சர்களைப் பற்றி நாலு வார்த்தை சொல்லும். அப்போதுதான் என் மனம் ஆறும்?**
திருமதி மல்லிகா ராமன், கந்தப்பளை.

ஒரு கஞ்சன் ஆற்றோடு வெள்ளத்தில் போய்க்கொண்டிருந்தானாம். கரையில் இருக்கும் ஒருத்தன் அவனைக் காப்பாற்ற முயற்சி பண்ணினான். கஞ்சனைப் பார்த்து;

"உன் கையைக் குடு கையைக் கொடு" என்று கத்தினான். கஞ்சன் கொடுக்கவில்லை. பிறகென்ன வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

கஞ்சன் ஏன் கையைக் கொடுக்கவில்லைத் தெரியுமா?

அவனுக்குத்தான் எதையும் கொடுத்துப் பழக்கமில்லையே. அதனால் கையைக் கொடுக்கவும் மனசு வரவில்லை!

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 53

இராமபிரான் சீதாபிராட்டியாருடனும் இளையபெருமாள் இலக்குவனுடனும் ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தண்டகாரணியம் வந்தபோது, பல தவசிரேட்டர்களுடன் வாழ்ந்தார்கள். சுதீட்சண முனிவர் ஆச்சிரமத்திலிருந்து அகத்திய மாமுனிவரிடம் வருவதற்கு முன்னர் ஒரு நாள் இராமபிரானிடம் சீதா பிராட்டியார் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார். தண்டக வனத்தில் தவம்புரியும் முனிவர்கள், அரக்கர்களின் கொடுமைகளுக்கு ஆளாகித் துன்பப் பட்டனர். வேள்விகள் நடைபெறவொட்டாமல் அரக்கர்கள் பல இடையூறுகளைப் புரிந்தார்கள். தங்களை, அரக்கர்களால் இழைக்கப்படும் கொடுமைகளிருந்து காத்தருள வேண்டும்- அரக்கர்களை வதம்செய்து அக்கிரமங்களை ஒழிக்க வேண்டும் என்றும் அம் முனிவர்கள் இராமபிரானைக் கேட்டுக்கொண்டனர்.

அரக்கர்களின் கொடுமைகளை அழிப்பதற்காகவே அவதாரம் எடுத்தவரான இராமர் அவர்களுக்கு அபயமளித்து, "அரக்கர்களை வதம் செய்து அவர்களால் ஏற்படும் அனர்த்தங்களை நீக்குவேன்," என்று வாக்களித்தார்.

இராமரும் சீதையும் பூங்காவில் தனித்திருக்கும் வேளையில் சீதை இராமரிடம், கூறிவிட்டீர்கள். இதனால் மூன்றாவதான- நமக்குத் தீங்கு பயக்க நினைக்காத அரக்கர்களை தாங்கள் அழித்தொழிக்க முயல்வது, அந்த மூன்றாவது குற்றத்தைப் புரிந்த பழியினைத் தங்களுக்குத் தேடித் தராதா?" இவ்வாறு கூறிய சீதையின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

அவன் ஆவி பிரியும் வேளை, "சுக்கிரீவனிடம் செல்லுங்கள். அவன் சீதையைத் தேடிக் கண்டு பிடிக்க உதவுவான்," என்று கூறினான். இதனால் சுக்கிரீவனை அனுமனின் உதவியால் இராம இலக்குவர்கள் காண்கின்றனர். அக்னி சாட்சியாக, இராமர், வாலியை வதம் செய்து இராச்சியத்தை மீட்பதுடன்



## வாலி பெற்ற வரம்

தன் மனத்தில் நீண்டகாலமாக உறைந்து கிடந்த ஓர் ஐயப்பாட்டுக்கு விளக்கம் கோரினாள். தங்களுக்கு எத்தகைய தீங்கும் தராத அரக்கர்களை ஏன் வதம் செய்ய முன் வர வேண்டும், என்பதே அக்கேள்வி.

கணவன் எக்காரியத்தில் ஈடுபட்டாலும் அதற்கு என்றும் அனுசரணையாக இருப்பது தான் ஒரு தர்மபத்தினியின் கடமை. இருப்பினும் கணவன் தர்மநெறிகளிலிருந்து பிறழலாகாது என்பதில் மனைவி கண்ணும் கருத்துமாக இருப்பதும் அவசியம். கணவனிடம் தன் கருத்தைக் கூறும்போது, காலம், இடம், குறிப்பறிந்து கூற வேண்டும். இதனை அறிந்திருந்த சீதையும் தகுதியான தருணம் பார்த்து தனது வினாவினைத் தொடுத்தாள்.

"பிராணநாதா! முற்றும் உணர்ந்தவர்கள் தாங்கள்; தங்களுக்கு அறிவுரை கூறுவதாக எண்ணிவிட வேண்டாம். இருப்பினும் சில நாட்களாகவே என் உள்ளத்தை உறுத்தும் ஒரு கேள்விக்குத் தங்களிடமிருந்து விடை கோர விரும்புகிறேன்." இவ்வாறு சீதை இராமரிடம் கோரியதும், புன்முறுவல் பூத்தவராக, "ஜானகி! உள்ளத்தில் ஐயம் எழுந்தால் அதனை எவ்வகையிலும் நீக்கிவிட வேண்டும். கூச்சப்படாமல் உன் கேள்வியைக் கேள்!" என்றார் இராமர்.

### சத்திரிய தர்மம்

"கடமை எது? தர்மம் எது? நீதி எது? என்பவற்றையெல்லாம் பூரணமாக உணர்ந்தவர்கள் தாங்கள். சத்திரியர்கள் ஆயுதம் ஏந்துவது துன்பப்படுவோரை இரட்சிப்பதற்காகவே என்பதை அறிவேன். மனிதன் ஆசைக்கு இலகுவாக அடிமைப்படுகிறான். இதனால் பஞ்சமாபாதகங்களைச் செய்வதற்குத் தூண்டப்படுகிறான். பொய் பேசுவது, பிறன்மனையாளை இச்சிப்பது மற்றும் தமக்குத் தீங்கு செய்யாதவர்களைத் துன்புறுத்துவது போன்ற பாவங்களைப் புரிபவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தாங்கள் முதலிரு தவறுகளையும் எப்போதும் விடப்போவதில்லை. ஆனால் தங்களை வந்து தரிசித்த முனிவர்களுக்கு தாங்கள் கொடுத்த வாக்குறுதிதான் என்னைத் தடுமாற வைத்துவிட்டது. அவர்களை வருத்தும் அரக்கர்களை வதம் செய்வதாக உறுதி

தன் பாதங்களைத் தொட்டுக் கொண்டிருந்த சீதையின் இரு தோள்களையும் தொட்டு மேலே உயர்த்தி தன்னருகில் அமர்த்திய இராமர், கருணை பொழியும் கண்களால் அவளை ஊடுருவிப் பார்த்தவண்ணம் வருமாறு கூறினார்:

"ஜானகி! இன்று தவவேடம் பூண்டு கானகம் புகுந்தாலும் நான் ஒரு சத்திரியனல்லவா? துன்பப்படுவோரை இரட்சிப்பது என் கடமையல்லவா? முனிவர்கள் தங்கள் துன்பங்களைத் துடைக்கும் படி என்னைத் தஞ்சமடைந்தார்கள். நானும் அபயமளித்து விட்டேன். அரக்கர் எமக்கு நேரடியாக எத்துன்பத்தையும் தரவில்லை என்பது உண்மைதான்! ஆனால் அரக்கர் எம்மைத் தஞ்சமடைந்தவர்களுக்குத் துன்பம் தருகிறார்களே! தூரத்தே ஒரு மனிதரை சிங்கம் ஒன்று பாய்ந்து கொல்ல நெருங்குகிறது. அந்தச் சிங்கம் நம்மைக் கொல்ல வரவில்லையே என்று வேறு புறம் திரும்பிச் சென்று விட முடியுமா? எப்படியும் அந்தச் சிங்கத்தை நாம் கொன்றே தீர வேண்டும். இதுதான் சத்திரிய தர்மம்! புரிந்து கொண்டாயா?"

இவ்வாறு விளக்கம் அளித்த இராமரை மீண்டும் தாள் தொட்டு வணங்கி கண்களைத் துடைத்துக் கொண்டு சீதை புன்முறுவல் பூத்தாள்.

இராஜகுமாரி

### வாலி செய்த குற்றம்

வாலியை வதம் செய்வதற்கு இராமர் இதே சத்திரிய தர்மத்தைத்தான் கடைப்பிடிக்க நேர்ந்தது. வாலி தன் தம்பி சுக்கிரீவனின் மனைவியை அபகரித்ததனை சுக்கிரீவன் மூலம் அறிந்துகொண்டார். சுக்கிரீவன் வாலியின் இராச்சியத்தை வேண்டுமென்றே அபகரிக்கவில்லை என்ற உண்மையை வாலி ஏற்றுக்கொள்ளாமல் சுக்கிரீவன் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவனைக் கொன்றொழித்துவிட எத்தனித்தான்.

இடையில் கபந்தனை வதம் செய்தபோது சுக்கிரீவனின் மனைவியையும் மீட்டு, அவனிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதி தருகிறார்.

### திருமாலின் குரல்

வாலி இயல்பாகவே பெருவீரன். சிவபிரானிடத்திலும் ஏனைய தேவர்களிடத்திலும் பல வரங்களைப் பெற்றவன். "கோழை போல் மறைந்திருந்து ஏன் என்னைக் கொல்ல நினைத்தாய்?" என்று வாலிகேட்ட வினாவினால் இராமர் தடுமாறவில்லை. ஆனால் உடனிருந்த இலக்குவனும் சுக்கிரீவனும், அவ்விடத்துக்குத் தாமதமாகவே வந்து சேர்ந்த அனுமனும் சற்றுத்தயங்கினர். இராமர் வாலியின் தலைகிடந்த பக்கம் வந்து கீழே அமர்ந்தார். வாலியின் தலையைத் தூக்கித் தன் மடியிலே கிடத்தினார்.

"வாலி! இதோ என்னைப்பார்!" என்றார். வாலி இராமரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். பல வருடங்களுக்கு முன்னர் தன்னுடைய தவத்தை மெச்சித் தனக்கு வரமருளிய சாட்சாத் திருமாலின் திருவுருவம்தான் வாலிக்குத் தோற்றியது. மடியிலிருந்து எழுவதற்கு வாலி முயற்சித்தான். எழவிடாமல் திருமாலின் கை தடுத்தது. அன்று திருமாலிடம் வாலி கேட்ட வரம் அவன் காதுகளில் எதிரொலித்தது. "மகாபிரபு! எனக்கு எவராலும் அழிவு ஏற்படாமலிருக்க வரமருள வேண்டுகிறேன்" என்று வாலி கேட்க, "வாலி! உனக்கு அழிவில்லை; உன்னை எவர் நேருக்கு நேர் நின்று பொருதினாலும், அவர் எப்பேற்பட்ட வீரனாக இருந்தாலும், அவருடைய பலத்தில் அரைவாசி உன்னிடம் வந்து சேரக்கடவது!" என்று வரம் அளித்த திருமாலின் குரலே ஒலித்தது.

வாலியின் தலையைத் தடவிய இராமர், "வாலி! உன் எதிரே தோன்றி நானே போரிட்டாலும் உன்னிடத்தில் என் பலத்தில் பாதியைப் பறி கொடுத்திருப்பேனே! அவ்வாறிருக்க உன் எதிரே நான் நின்று போரிட எவ்வாறு துணிவேன்?" என்று இராமர் கேட்டார். வாலி பதில் கூறவில்லை. தனக்கு வரமளித்த அத்தெய்வமே தனது ஆத்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டியிருக்கிறது என்பதை உணர்ந்து பக்திப்பெருக்கால் இரு கைகளையும் கூப்பினான்.

இதற்கிடையில் வாலியின் நிலை கிட்கிந்தைக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது. மனைவி தாரை, மகன் அங்கதன் ஆகியோரும் வாலி வீழ்ந்து கிடந்த இடத்தை வந்தடைந்தனர். அழுது புலம்பிய அங்கதனின் வலது கையைப் பற்றிய வாலி இராமரின் கைகளில் ஒப்படைத்தான். சுக்கிரீவன் அண்ணனின் பாதங்களைப் பிடித்த வண்ணம் அழுது கொண்டிருந்தான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 51

**சரியானவிடை:- திரிசூலம், சக்கரம், வஜ்ஜிராயுதம்.**

1. செல்வி. அஞ்சலி இராஜேந்திரம். 19, இருதயபுரம் கிழக்கு, மட்டக்களப்பு.
2. திருமதி. சீ.பாலசுப்பிரமணியம். 7/8, காமஸ் எவன்யு, வெள்ளவத்தை.
3. எ. மகாலிங்கம். 499, ஒகொடபொல, பிகிம்புவ.
4. திரு. நா. சத்தியசீலன். க/பாரண்டா தமிழ் வித்தியாலயம், கட்டுபுலா.
5. எம்.எஸ்.எம். அஸ்மியா., ஸ்கேன் வீடியோ சென்டர், 24/6 சீ/1/1, காசல் ஒழுங்கை, கண்டி.

**போட்டி இல. 53** கேள்வி:- **திருமாலிடம் வாலி என்ன வரம் கேட்டான்?**

ஒக்டோபர்.26 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.53, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கவுண்டமணி–செந்தில் லவ் டிஷ்கஷன்

காதிலை பூ கந்தசாமி

செந்தில்:- அண்ணே அண்ணே. மணியண்ணே!

கவுண்டமணி:- (நாற்காலியில் தூங்கிக் கொண்டிருந்தவர் குரல் கேட்டு எழுகிறார்) யாருமேன் நீ? எங்கே மேன் வந்தாய்?

செந்தில்:- நாற்காலியில் உட்கார்ந்தாலே சிலருக்கு பழசெல்லாம் மறந்துபோயிடுமே. ஒரு சிம்பிள் அட்வைஸ் சொல்லட்டுமா அண்ணே?

கவுண்டமணி:- பிளீஸ் ரெல் மீ. ரெல்.

செந்தில்:- நாற்காலியில் உட்கார்ந்தா தூங்கக் கூடாதண்ணே.

கவுண்டமணி:- ஏன் மேன் ஸ்லீப் பண்ணக் கூடாது?

செந்தில்:- நாற்காலி ஸிலிப்பாகிடுமண்ணே. ஐ.மீன். கவிழ்ந்திடுமண்ணே. உங்களை கவிழ்த்திட்டு வேறை ஆளு வந்திடுவான்.

கவுண்டமணி:- உன்னைமாதிரி பன்றித் தலையன், பன்னாடைங்க எல்லாம் பதவிக்கு ஆசைப்படலாமாடா?



செந்தில்:- அதை பீப்பிள்ஸ் தான் டிசைட் பண்ணனு ம்.

கவுண்டமணி:- யாருங்க அது?

செந்தில்:- பீப்பிள்ஸ். பீப்பிள்ஸ். மக்கள்.

கவுண்டமணி:- கொஞ்சம் இப்படி வாறிங்களா?

செந்தில்:-யெஸ். ஐயாம் கம்மிங்கு.

கவுண்டமணி:- இப்ப பாரு ஐயாவோட ஜம்பிங்கு. (பாய்ந்து உதைக்கிறார்)

செந்தில்:- அண்ணே அடிக்காதீங்கண்ணே. நான் யாரு? உங்க சிஷ்யன் அண்ணே. என்னை ஒருதரம் நன்னாப் பாருங்கண்ணே.

கவுண்டமணி:- (பாடுகிறார்)

யுவர் நேம் ஈஸ் மிஸ்டர் செந்தில்
உம் ஊரு கழுதைப்பட்டி உனக்கில்லை
வேலைவெட்டி
ஊறுகாய் ஊறுகாய்
கடித்துத் தின்பது உந்தன் பார்முலா பார்முலா.

செந்தில்:- கரெக்டு. இப்ப பாருங்க. (பாடுகிறார்)
"கலைஞர் ஜெயிக்க காரணம் யாரு
என்னோட அங்கிள்தானே."

கவுண்டமணி:- ஏங்க, எதிர்க்கட்சிக்காரன் ஒட்டின போஸ்டரையெல்லாம் உங்க அங்கிள் தின்னுட்டாருங்களா?

செந்தில்:- (பாடுகிறார்)
டயானா போடும் ஹைஹீல்ஸ் எல்லாம்
ஏம் பாட்டி தந்ததுதானே.

கவுண்டமணி:- ஓகோ, பாலீஷ் போட்டு துடைச்சுக் கொடுத்தாருங்களா? உங்க பாட்டியென்ன செருப்புக்கு பாலிஷ் போடுற கடையா வைச்சிருந்தாங்க.

செந்தில்:- இந்திய ரூபாயில் இருப்பது எல்லாம் என்னோட கையெழுத்துத்தானே.

கவுண்டமணி:- ரூபாய் நோட்டுங்கமேல கோழி கிளறினதுமாதிரி எழுதிப் பார்க்கிற பேமானி நீங்கதானுங்களா. ஏங்க உங்க வீட்டில சிலேட்டு, நோட்டுப் புக்கெல்லாம் வாங்கிக் கொடுக்க மாட்டாங்களா?

செந்தில்:- மைக்கேல் ஜாக்சன்பாடுவதெல்லாம் நான் போட்டுத் தந்த பாட்டு.

கவுண்டமணி:- மைக்கேல் ஜாக்சன் எப்போதடா பாடினான் முட்டாள்! காட்டுக் கத்தல் தானே போடுறான்.

செந்தில்:- டெண்டுல்கர் ஆடுவதெல்லாம் நான் வாங்கித்தந்த பேட்டு.

கவுண்டமணி:- அதான் இப்பெல்லாம் முட்டை போட்டுக்கிட்டிருக்காரா? நீ பாடியது போதும்டா பேமானி. ஏன் வந்தே? எதுக்கு வந்தே? அதைச் சொல்லுடா.

செந்தில்:- (குலுங்கிக் குலுங்கி அழுகிறார்) நேத்து என் கனவில சில்க்கு வந்தா அண்ணே. ஒரு ஆப்பிளைக் கடிச்சு எங்கிட்ட எறிஞ்சுட்டுப்போயிட்டாங்கண்ணே.

கவுண்டமணி:- எச்சில்பட்டதை எவன்டா தின்னுவான். அதான் உங்கிட்ட வீசியிருக்கா.

செந்தில்:- சில்க்கு கடிச்சு வீசின ஆப்பிளை ஏலத்தில எடுக்க எத்தனைபேரு போட்டி போட்டாங்க தெரியுமா? உங்களுக்கு பொறாமையண்ணே. ஒரு தத்துவப் பாடல் கேக்கிறீங்களா?

"கவர்ச்சியான பெண்ணின் வாய்கள் கடித்து
நீட்டினால்
பச்சை மிளகாய்கூட இனிக்கும்தானே.
கவர்ச்சியான பெண்ணின் வண்ண கன்னம்
ரெண்டிலே
பூசும் பவுடர்கூட பொன்னுதானே.
துப்பும் எச்சில் அமுதமாகும். திட்டும் போது
மோட்சமாகும்
கவர்ச்சியின் சிங்காரமே பூமியின் பாதாளமே..."

கவுண்டமணி:- இன்னும் ஒரு வரி பாடினே, மவனே நீ உருப்படியா வீடு போய் சேர மாட்டே.

செந்தில்:- அண்ணே! உங்களுக்கும் காதல் வந்தாத்தான் தெரியுமண்ணே. (பாடுகிறார்)
ஒரு வண்மனத் பொறு தலைவா
ஒரு பூசணிக்காய் இங்கவருவா
காலிரண்டால் போர் தொடுப்பா
உந்தன் தேகத்தை துவைத்தெடுப்பா.

கவுண்டமணி:- ஹையோ ஹையயய்யயோ ஹையோ

செந்தில்:- ஏன் அண்ணே அபசகுனமா இப்படிக் கத்துறீங்க.

கவுண்டமணி:- மவனே அது பாட்டடா. காலையில வேலைக்கு புறப்பட்டுக்கொண்டிருக்கும் போது சிலோன் ரேடியோவில அந்தப் பாட்டைப் போடுறாங்கபாரு. ச்சா.....என்ன ஒரு உற்சாகமா இருக்குது தெரியுமா? ஹையயோ ஹய்யோ செருப்பை எங்கே வைச்சேன், உடுப்பை எங்கே போட்டேன் எண்ணு பாட்டோட சேர்ந்துக் கிட்டே தேடலாம்பாரு.

செந்தில்:- அண்ணே இஃப் யூ டோன்ட்மைன்ட். எனக்கொரு பொண்ணு வேணுமண்ணே. ஏற்பாடு பண்ணமுடியுமா?

கவுண்டமணி:- என் தொழிலையே மாத்திறியேடா பாவி.

செந்தில்:- டோன்ட் மிஸ்அண்டஸ்டான்ட். காதலிக்க ஒரு பொண்ணு வேணு மண்ணே. அப்பதானண்ணே சில்க்கை என் இயத்தில இருந்து கிளியர் பண்ணலாம்.

கவுண்டமணி:- ஐஸீ! எப்படிப்பட்ட பொண்ணு தேடுறீங்க எண்ணு அறியலாமா?

செந்தில்:- (வெட்கப்பட்டுக்கொண்டு நாணிக் கோணிநின்று பாடிக்காட்டுகிறார்)
"குண்டு குண்டு ரகமான பொண்ணு வேணும்
குஸ்திபோடும் ரகமான பொண்ணு வேணும்.
குத்துவாங்கி துடிக்கையிலே கூரையிலே
தொங்கையிலே
குண்டு குண்டு ரகமான பொண்ணு வேணும்."

கவுண்டமணி:- இதை முன்னாடியே சொல்லியிருக்கக்கூடாதுங்களா.

செந்தில்:- ஏன் அண்ணே. ரெடியா இருக்காண்ணே?

கவுண்டமணி:- ஆமடா. இந்தப் பாட்டைக் கேளு.
"அந்த குளத்துக் கட்டோரம் ஓர் ஆமை
கண்டேனே
அந்த ஆமை ஓட்டை விலக்க அதனை கண்ணால்
கண்டேனே.
ஹம்மா ஹம்மா ஹம்ம ஹம்ம ஹம்மா....."

செந்தில்:- என்னண்ணே நீங்க. அழகை காணச் சொன்னா ஆமையைக் கண்டதைச் சொல்றீங்க.

கவுண்டமணி:- உன் மூஞ்சிக்கும், எருமைத் தோலுக்கும் நீ ஆமையைத் தானடா தூக்கி மடியில வைச்சிருக்கணு ம்.

செந்தில்:- அண்ணே! கேலி பண்ணாதீங்கண்ணே! டெலிபோன் மணிபோல சிரிக்கிற பொண்ணு தான் எனக்கு வேணும்.

கவுண்டமணி:- மவனே அது ராங் நம்பரா போயிடுமடா.
ரெயிலின் புகைபோல் சிரிப்பவள் இவளா?
பேர்லின் சுவர்போல் உடைந்தவள் இவளா?
பேயின் மகளாய் பிறந்தவள் இவள்தானா?
என்றுதானடா நீயெல்லாம் பாடணு ம்.
டெலிபோன்மணியெல்லாம் சரிப்பட்டுவராதுடா. அடிக்கடி சிணு ங்கிக் கொண்டே இருக் கும். ஓடி ஓடி தூக் கினா உன் உடம் புக்கு மூச்சிறைக் கும்டா. வேணு மின்னா சொல்லு ஒரு டெல்லி எருமை வாங்கித் தர்றேன். ஜோடிப் பொருத்தமும் பிரமாதமா இருக்கும். அப்பப்போ கவனிச் சுக்கிட்டா போதும். அடிக்கடி சிணுங்காது.

செந்தில்:- அண்ணே! நீங்க என்னை ரொம்ப இன்சல்ட் பண்ணு றீங்க.

கவுண்டமணி:- அப்படிங்களா? இப்ப பாருங்க.
எந்த வீட்டிலே நீ சோறு திங்குற
ஒன் உடம்புல ஏன் உதையை வாங்குற
எருமை எடையளவு பார்க்கணும், பார்க்கணும்.
உலக்கையால மேலே போடணும், போடணும்.

செந்தில்- அண்ணே வேண்டாமண்ணே! என் இதயமே வெடிச்சு சுக்கு நூறாய்ப் போச்சு. சிலோனிலைதான் பவர்ஃபுல்லா குண்டு வைக்கிறாங்க, எண்ணு நினைச்சேன். நீங்க வைச்ச குண்டு அதைவிட பவர்ஃபுல்லா இருக்கண்ணே. (கண்களை கசக்குகிறார்)

கவுண்டமணி:- அட எருமை வாயா! அழுவா தேடா. (பாடுகிறார்)
அழகிய ரஜினி அவர் இவனது ஸ்டையிலோ
சுந்தர கமலோ இவன் மன்மதப் புயலோ
அடடா வண்டின் மாநாடா ஓ...ஓ
எருமைக்கு இவன்தான் தாலாட்டா?

செந்தில்:- கடைசி வரியில கவிழ்த்திட்டீங்களே அண்ணே, கவிழ்த்திட்டீங்களே.

கவு:- மவனே! இன்னும் நீ இங்கே நின்னே காணாமலே போயிடுவே. (எட்டி உதைக்கிறார். செந்தில் தலைதெறிக்க ஓடுகிறார்)
குளிச்சா சுத்தம் வரும். கும்பிட்டா பக்திவரும்
குடிச்சா குழாய் தண்ணி. புடிச்சா குரங்குப்பிடி
மிளகாய்ப் பொடி மீனாட்சி மில் ஓனர் நான்தான்டி

கவுண்டர் பாடிக்கொண்டே வீட்டுக்குள் செல்ல, மனைவி வெட்கத்தோடு சிணுங்கும் சத்தம் கேட்கிறது.


படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# எந்தக் காலிலும் இல்லாத ஒன்று





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


← அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. மானிடர்களிலும் அபூர்வமான மனிதர்களாகப் பிறத்தல் அரிதிலும் அரிது. தங்கள் மேதைமையால் அபூர்வமானவர்களும் இருக்கிறார்கள். தங்கள் மேனி வடிவத்தால் அபூர்வமானவர்களும் இருக்கிறார்கள்.

அருகிலுள்ள படத்தில் அமர்ந்திருப்பவர்களின் கால்களைப் பாருங்கள். என்ன, விழிகள் வியப்பால் விரிகிறதா? ஒவ்வொரு காலிலும் ஆக மொத்தம் இரண்டே இரண்டு விரல்கள்தான்! இவர்களுக்கு மட்டுமல்ல ஆபிரிக்காக் கண்டத்தில் சிம்பாப்வே, பொட்ஸ்வானா ஆகிய நாடுகளில் வசிக்கும் 'வாடோமோ' இன மக்களில் பலருக்கு கால்கள் இப்படித்தான் இருக்கும். சிலருக்கு கைகளிலும் குறைந்தளவான விரல்களே இருக்கும்.

இதற்கான காரணம் என்னவென்று மருத்துவர்கள் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

# காருக்குள் ஹலோ


↓ பாவனைக்கு உதவாத கார்களையும் சிக்கு புக்கு என்று புகைக்கவிட்டபடி பாவிப்பது நம் போன்ற ஏழை நாடுகளில்தான். பணக்கார நாடுகளில் என்றால் தூக்கி ஓரமாய் வீசிவிடுவார்கள். நாமென்றால் விளையாட்டுச் சைக்கிளைக்கூட வீசமாட்டோம். ஷாஜகானின் தாஜ்மஹால் மாதிரி பாதுகாத்து வைத்திருப்போம்.

தொலைபேசிக் கூண்டாக ஒரு காரை மாற்றியிருக்கிறார்கள் பாருங்கள். இந்தக் காரை வீசியெறியாமல் ரெலிபோன்பூத்தாக மாற்றியதற்கு ஒரு ருசிகரமான காரணம் இருக்கிறது.

1950க்களில் பிரபலமாக இருந்த 'நாஸ்' ரகக் கார் இது. இக் காரின் உரிமையாளரும், அவரது நண்பரும் பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று இன்னொரு கார் முந்திக் கொண்டு வேகமாகச் சென்றது. அக்காருக்குள் இருந்தவர் நண்பரின் காதலி.

'விடாதே துரத்து' என்றார் நண்பர். வேகமாக ஓட்டினார் உரிமையாளர். அந்தோ பரிதாபம். எதிரில் வந்த வாகனம் ஒன்றுடன் மோதியது கார். டமார்! இது நடந்தது 1959இல்.

அன்றிலிருந்து இக் காரை காதலர்களுக்கான தொலைபேசிக் கூண்டாக மாற்றிவிட்டார் உரிமையாளர். காதலர்களின் ஹொலிவூட் இதுதான். வீசியெறிவதைவிட உபயோகமான காரியம் தானே இது. காதல் வாழ்க.




# ஹய்யா...

→ உலகிலேயே மிக மிகச் சிறிய இனக் குதிரை இது தான். பாருங்கள், உட்கார்ந்திருக்கும் சிறுமியின் உயரமேதான் உள்ளது.

ஐரோப்பாவிலுள்ள பணக்காரக் குடும்பங்களின் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் பாக்கியமும் பெற்றது இக்குதிரை.

படத்தில் ஐந்து வயதுக் குழந்தையுடன் இருப்பது 'இளவரசி ஸ்னோவ்ட்ரொப்' என்று செல்லமாக அழைக்கப்படும் குதிரை. இது ரோய்ஹோர்ஸ் இனத்தைச் சேர்ந்தது. ஃபலபெல்லா என்றொரு சிறிய வகைக் குதிரை இனமும் உண்டு.

இக் குதிரையின் உயரம 53 சென்ரிமீட்டர் (21 அங்குலம்). பிறந்தது 23, ஏப்ரல்-1996. இந்தப் பெண் குதிரை பெரியவளானதும் 66 சென்ரிமீட்டர் (26 அங்குலம்) அளவே வளர்ந்து காணப்படுமாம். சவாரி செய்ய வசதியான உயரம். விழுந்தாலும் மீசையில் மண்படாமல் தப்பிக்கலாம். எஜமானச் சிறுமியின் பெயர் பிறியோனி ஹெவர்.





← ஆம். ஊப் மீனாட்சியின் எலிகள் பட்டாளம். அங்குமிங்கும் ஓடி ஓடி ஒரே கும்மாளம்.' இது பழைய பொப்பிசைப் பாடல்.

எலிகள் என்றாலே தொல்லைதான். ஆனால் இங்கு படத்தில் உள்ள எலிகளால் பெரிய தொல்லைகள் கிடையாது. வம்பு செய்தால் கப் பென்று அமுக்கிப் பிடித்து விடலாம்.

உலகிலேயே மிகச் சிறிய எலிகள் இவைதான். 'லெமூர்' இன எலிகள் என்று இவை அழைக்கப்படுகின்றன. நிறை ஒரு அவுன்ஸ்கூட இருக்காது. 24.8 முதல் 38 கிராமுக்குள்தான் இருக்கும்.

அளவு சிறிதானாலும் புத்திக்கூர்மை அதிகமுள்ளவை. பூனையைக் கண்டுவிட்டால் சத்தம் கித்தம் போடாமல் ஆடாமல் அசையாமல் உறைந்து போய் காணப்படுமாம். மேற்குலக நாடுகளில்தான் இவை காணப்படும்.


வீட்டிலே எலிகளைக் கண்டால் கோபம் வரும். படத்தில் காணப்படும் இந்த எலிகளைப் பார்த்தால் நாமும் பிடித்துப் பார்க்கலாமே என்று ஆசை வருகிறதல்லவா!

# இது விற்பனைக்கல்ல

→ இந்த நீ.....ண்டட்ட காரை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? 137வது முரசில் தகவல் பெட்டியில் பார்த்திருப்பீர்கள்! இதன் நீளம் 30 1/2 மீற்றர். (100அடி) மொத்தம் 26 சக்கரங்கள். இதன் பெயர் 'லிமோ'. இக் காரில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் இருக்கக்கூடிய சகல வசதிகளும் உண்டு. நீச்சல்குளம், ஒரளவான விளையாட்டரங்கம் உட்பட சகல வசதிகளும் அடக்கம்.

இக் காரின் உரிமையாளரான கோடீஸ்வரர் அலுங்காமல் குலுங்காமல் ஹெலிக்கொப்டரில் வந்து இறங்கவும் காரில் ஒரு தளம் உண்டு என்பதுதான் மகா ஆச்சரியம். ஹெலிக்கொப்டர் இறங்க முடியுமா என்று சந்தேகப்பட்டு வாசகர்கள் சிலர் கடிதம் போட்டிருந்தனர். அதனால் ஹெலிக்கொப்டர் காரில் இறங்கி நிற்கும்போது எடுக்கப்பட்ட படம் இங்கு பிரசுரமாகியுள்ளது.

மற்றொரு தகவல்:- இக்காரை என்ன விலைகொடுத்தும் வாங்குவதற்கு புருனே மன்னன் சுல்தான் தயாராக இருக்கிறாராம். "மன்னிக்கவும், இது விற்பனைக்கல்ல" என்று சொல்லி விட்டாராம் இக்காரின் உரிமையாளர். அவரது பெயர் ஜேய் ஓபேர்க். அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்தவர்.







கிழக்கு

| | | |
|---|---|---|
| புதன்<br>பச்சை<br>EMERALD | சுக்கிரன்<br>வைரம்<br>DIAMOND | சந்திரன்<br>முத்து<br>PEARL |
| குரு<br>புஸ்பராகம்<br>TOPAZ | சூரியன்<br>நெம்பு<br>RUBY | செவ்வாய்<br>பவழம்<br>CORAL |
| கேது<br>வைடூரியம்<br>CATSEYE | சனி<br>நீலம்<br>SAPPHIRE | ராகு<br>கோமேதகம்<br>CINNAMON |

மேற்கு

வடக்கு

தெற்கு

NAVARATNAM

இங்கு நவகோள்களின் அம்சமான. நவரத்தினங்களைப் பற்றிய விபரங்கள் உள்ளன. பிறப்பு எண்ணையும் கூட்டு எண்ணையும் வைத்து இலவசமாக கணித்து கூற அவரவர்க்கு ஏற்ற ரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். நன்றி

அருள் ஜுவலர்ஸ் 3 ARUL

3, SEA STREET, COLOMBO-11. T.P.436331

இலவசம்.
முதல் பத்து வாடிக்கையாளருக்கு அழகிய பெண்டன்.



மற்றவர்கள் பேசுவதை நாம் செய்கின்றோம்.




இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்வா? நாவலவில் உள்ள சமஸ்ல அச்சகத்தில் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது

படிப்பகம்